Registered as a News Paper in Sri Lanka දිනමුරසු වාරමලර්

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

பக்கம் 24
ரூபா: 30.00
டிசம்பர் 24 - 30, 2015
முரசு 1149

# தமிழ் மக்கள் பேரவைக்கு



## தாழ்மையான வேண்டுகோள்



## போலிக் கௌரவங்களில் மிதக்கும் யாழ்ப்பாணம்



## ஜெயிக்குமா மனிதநேயம்?



## அடக்குமுறை வரவழைத்த வன்முறை

ISIS



## மூட்டுவாதம்



## வரும் ஆனா வராது

யாழ்.மாநகரசபை தண்ணீர்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## எரியும் விளக்கை தூண்டும் முறை

விளக்கு எரியத் தொடங்கியவுடன் அந்த தீபத்துக்குள் சூரிய தேவதை ஆவாஹனமாகிவிடுவாள். ஆகையால் எரியும் விளக்குத் திரியின் கசடைத் தட்டுவதோ, திரியை நிமிண்டுவதோ கூடாது. இதனால் தோஷங்கள் ஏற்படும். எனவே திரியைப் பெரிதாக்கி ஒளியைக் கூட்டலாம்.

மேலும் நேரம் ஆக ஆக விளக்கின் ஒளி மங்கிக்கொண்டே வந்தால், எரிந்து கொண்டிருக்கும் திரியின் அருகே புது திரி ஒன்றை ஏற்றிப்பின்னர் பழைய திரியை எடுத்துவிடவேண்டும். இதுவே சிறந்த முறை ஆகும்.

## கிறிஸ்து பிறப்பு பெருவிழா

ஆன்மீகம்

மார்கழி பெற்றெடுத்த மனிதநேயம் பூமிக்கு புறப்பட்டுவந்த புண்ணிய நாள்தான் இந்த கிறிஸ்து பிறப்புப் பெருவிழா. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கன்னிமரி வயிற்றில் மனுவுரு எடுத்த இறைவன், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பிறகு இன்றும், இந்த மண்ணில் மனுஉரு எடுக்கிறார். மீண்டும் ஒருமுறை மனிதருக்கு போதிக்க, புதுமைகள் புரிய மண்ணகத்தை படைத்தவன், இன்று நம்மிடையே மனிதனாக பிறக்கிறார்.

அன்று இறைமகன் இயேசுவின் நோக்கம் எதுவாக இருந்ததோ, அதுவே இன்றைய காலகட்டத்திற்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. இதைதான் விவிலியத்தில் வான தூதர்களின் வாய்வழியாக "உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" என்று வாசிக்கிறோம்.

'அமைதி உருவாக்கம்' என்பதுதான் கிறிஸ்து பிறப்பின் மையமாக இருக்கிறது. உள அமைதி தொடங்கி உலக அமைதிவரைக்கும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய அமைதியை உருவாக்கம் செய்வதுதான் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியாக உள்ளது.

ஆகவே அச்சத்தை அகற்றி, அன்பை பெருக்கியும், உறவுகளை உண்டாக்கி, உயிரூட்டியும், எளியோரையும், வலியோரையும், ஏழையையும், பணக்காரரையும், ஆணையும், பெண்ணையும் சகமனிதராக சமமான மனிதராக உறுதிசெய்யவும், நச்சு மனங்களை நல்ல மனங்களாக பிறக்கவும் தான் இந்த கிறிஸ்து பிறப்பு பெருவிழா நமக்கு அழைப்பு விடுகிறது.

ஆகவே ஆண்டவரின் அருள், அவனியில் அபரிவிதமாக அருளப்படவும், ஆண்டவரின் பிறப்பு அவனியில் அனுகூலமாகவும், இந்த திருப்பலியில் தொடர்ந்து செபிப்போம்.

## நண்பர்களின் கடமைகள்!

நட்புகொள்ளுமுன் நல்லவரை நண்பராகத் தெரிவுசெய்தல் அவசியமாகும். ஏனெனில் நண்பரின் எண்ணங்களால் சிந்தனையால், பழக்கவழக்கங்களால், குணங்களால் ஒருவர் கவரப்படுவது இயல்பே. நட்பின் அடையாளமாக அன்பு விளங்குகிறது. அன்பு செலுத்துவதும், செலுத்தப்படுவதும் நம்பிக்கையாளரின் அடையாளமாகும்.

மனிதன் தனது நண்பனின் மார்க்கத்தை பின்பற்றுபவனாக உள்ளான். ஆகவே அவன் யாரை நண்பனாக ஆக்கிக் கொள்கிறான் என்பதைக் கவனித்துக் கொள்வானாக என மாநபி (ஸல்) அவர்கள் ஒரு மணிமொழியில் கூறியுள்ளார்கள். (திர்மதி)

இறையச்சம், நேர்மை, நீதி, வாய்மை, விரிந்த உள்ளம், இரக்கம் போன்ற நற்பண்புகள் நிரம்பிய நல்லொழுக்க சீலர் நண்பராக அமையப்பெறின் அது அவருக்கு நற்பயன்களை வாரிவழங்கும் அவரது வாழ்வில் ஒளிவீசச் செய்யும்.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

## முடிவிலி

முடிவிலியாய்
தொடர்வதாலும்
முடியவில்லையென்பதாலும்தான்
முடித்தேன்
முடிந்தும் முடியவில்லை
எப்போதான்
இதற்கொரு
முற்றுப்புள்ளி!?

நாளுக்கொன்றென
கணக்குப் பண்ணியும்
முடியவில்லை
ஒன்று, இரண்டு
மூன்றென மூவேளையும்
இடையறாது
கடிதாய்
தொடர்கிறது...

வீட்டில், வீதியில்
கடைத்தெருவில்,
சந்தியில்
மார்க்கட்டில்
எங்கு பார்க்கினும்
முடியவில்லை
தொடாமலிருக்க
தொட்டும்
முடியவில்லை
மீண்டும் தொடாமலிருக்க
பிறகெப்போதான்
இதற்கொரு
முற்றும்!?

முடியாததற்காய்
முடியுமென முடிவுரை,
முற்றுப்புள்ளி வைக்க
நினைப்பது
முட்டாள்தனம்.

முடியவில்லைதான்
அதற்காய்
வாழ்க்கையை
முடிப்பதா முடிவில் அதுதான்
அதற்கு...

**எஸ்ஸெம்நிலாம்**



# தேன் கிண்ணம்

பாலன் வருகிறான் பாருங்கள்
பார் சிறக்கும் நம்புங்கள்
மே மன் பிறப்பான்; மேல் லோகத்தில்
செயற்படுவதுபோல் செயற்படுவீர்
இங்கு வருபவர் இறைவனா? இல்லை
இறைதூதுவனா? ஐயம் வேண்டாம்
இறைவனும் அவரே இறைகுமாரனும்
அவரே என அறியுங்கள்; ஆமென்.

ஆம் என்று சொல்லுங்கள் அவர்
ஏமம் கேட்கும் எமது நசரேயனே!
ஓம் என்ற ஓங்கார ஒலியும் அவரே
வார்த்தையானவர் எம்மோடு
மீண்டும் வார்த்தையாட வருகிறார்.
எருசலேம் எனும் இறையகத்துக்கு
புனிதப்படுத்துங்கள்! செப்பனிடுங்கள் பாதையை
போதகர் வருகிறார் மனம் திருத்துங்கள்.

மனமே பரலோகத்துக்கான பாதை!
திறவுங்கள் அதை தேவனது வரவுக்காக
மாச்சரியம் கடந்து மனமாசு போகட்டும்
ஆச்சரியமான வாழ்வு தருவார் முதல்
அப்போஸ்தலர் வரவை ஆராதிப்போம் ; அதோ
இதோ வருகிறார் என்று எதிர்பார்க்க வேண்டா
எப்பொழுதும் அவர் வந்து கொண்டேயிக்கிறார்
இதயம் திறப்போம் இறைவனைக் காண்போம்
சத்தமில்லா தர்மயுத்தம் ஆனவர்

## இறங்கி வருகிறார் இறைமகன் இரக்கமாக இருங்கள் என்றே...!

எத்திசையும் அவர் போதனை செல்லும்
சத்திய வழி அவர்வழி என்பதறிவோம்.
மெசியாவின் வரவு காத்திருப்போம்
சத்தியம் பேசி சாவிலும் புனிதரானார்
சாவிருந்தெழுந்து சாவே தொடக்கம்
என்றெமக்கு சாட்சியமானார் இறைமகன்
சமதர்மம் போதித்து சத்தியமானார்; ஆமென்

எந்த'பிலாத்தும்' இனி நழுவி போகான்
அந்தப் பிலாத்து சொந்த ஊர் போகவே
கைக்கறை கழுவி பாவம் செய்தான். - யேசு
காயங்கள் சுமந்தவன் பாவம் கழுவினார்
வியாகூலம் தந்து மாதா மரியாளை சோக
வினாச துயரத்தில் ஆழ்த்தியோர்
கைகூப்பி பாவமன்னிப்பு யாசித்தனரே!
ஐயனே மெசியாவே மீண்டெழுந்து வாரும்.

**மண்டைதீவு மகிழ்நன்**



## காற்றினிலே வரும் கீதம்

நீ என் நிலவு
நினைவுக்கு உறவு
நெடுநாள் பிரிவு - இந்த
நேரத்தில் உன் வரவு
தேனொடு பால் தரும்
சுவைகளை மறைத்துவிட்டாய்
இனிமேலாவது - உன்

திரைகளை விலக்கிவிடு
கனவுகளால் ஒரு ரதம் வரும்
பாதைகளிலே உன்
கால்களை நடக்கவிடு

தேடிடும் வேளையில்
சேதிகள் சொல்லிடத்
தென்றலை சேர்த்துக்கொள்
என் கவிதைகளை உன்
மனசுக்குள் சேர்த்துக்கொள்

உன் கண்களையும் பேச விடு
நீ என் நிலவு
நினைவுக்குள் உறவு

**கே.வாலேந்திரன், கொளிஞப்பிட்டி.**




தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,**
**மாநகரசபை கட்டடம்,**
**3 ஆம் மாடி,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262, 0774150799**




## டிசெம்பர் - 24

உண்மையான மகிழ்ச்சி நாம் சம்பாதிக்கும் பணத்தில் இல்லை. அதில் எவ்வளவு தர்மங்களைச் செய்கிறோம் என்பதில் அடங்கியிருக்கிறது.

**ரவீந்திரநாத் தாகூர்**

# காணாமற்போனோர் விடயம் தொடர்பில் அரசே பொறுப்புக்கூற வேண்டும்

## ஊடகவியலாளர் சந்திப்பில் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு




காணாமற்போனோர் விடயம் தொடர்பில் அரசே பொறுப்புக்கூற வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக அமையத்தில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு சொல்வதை மட்டும் பதிவுசெய்வது மட்டுமல்லாமல் அவற்றின் உண்மைத் தன்மைகளைக் கண்டறியக்கூடிய வகையில் விசாரணை-களை முன்னெடுக்கவேண்டியது அவசியமானது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அண்மையில் பத்திரிகைகளில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தொடர்பில் வெளிவந்த செய்திகள் குறித்துத் தெளிவுபடுத்தும்போது, இது ஒரு திட்டமிட்ட வகையிலான செயற்பாடு மட்டுமன்றி, எமது கட்சி மீது சேறுபூசும் வகையிலேயே ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரது படுகொலைகள் தொடர்பில் எம்மீதே குற்றஞ்சாட்டப்பட்டிருந்த போதிலும், தற்போது உண்மைகள் வெளிவந்து கொண்டிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டவிரும்புகிறேன். இதனிடையே, காணாமற்போன உறவினர்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தவர்களின் சாட்சியங்கள் முரண்பாடானவகையில் அமைந்துள்ளதையும் பத்திரிகைச் செய்திகளின் ஊடாக அறிய முடிகின்றது என்றும் தெரிவித்திருந்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.


## "முதலமைச்சர் மாத்திரம் வடமாகாண சபை இல்லை"



நிகழ்வொன்றுக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்தால் அது வடமாகாண சபைக்கான அழைப்பு என்று யாரும் கருதக் கூடாது. முதலமைச்சர் மாத்திரம் வட மாகாண சபையல்ல. உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவேண்டும் என வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இன்று தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற அரச நத்தார் கொண்டாட்ட ஆரம்ப விழாவுக்கு வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், மேற்படி நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டார். இந்நிகழ்வுக்கு முதலமைச்சர் அழைக்கப்பட்டபோதும், உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை. கிறிஸ்தவ உறுப்பினர்களையோ அல்லது கலை, கலாசார அமைச்சரான த.குருகுலராஜாவையோ இந்நிகழ்வுக்கு அழைத்திருக்கவேண்டும். இது திட்டமிட்ட புறக்கணிப்பாகும். இவ்வாறு ஒரு நிகழ்வு நடைபெறுகின்றது என, நிகழ்வு நடைபெற்று முடிந்தபின்னரே எங்களுக்குத் தெரியும் என்றார்.

## தமிழ் மக்கள் பேரவை உருவாக சம்பந்தனே காரணம்




தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாகுவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனே காரணமாகும். ஆனால் இந்த அமைப்பு கூட்டமைப்புக்கு குடைச்சல் கொடுக்கும் அமைப்பு அல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும், நாடாளுமன்றம் ஒரு தேசிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் சபையாக எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மாற்றப்படவுள்ள சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை உருவாக்க வேண்டிய கடமை தமிழ்த் தலைமைகளிடம் காணப்படுகின்றது.

இத்தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்கள் மத்தியில் வைத்து சரியானதா அல்லது பிழையானதா என்று ஆராயவேண்டும். அதனைவிடுத்து, கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாமல் ஒன்று அல்லது இரண்டு பேர் தாங்கள் விரும்பியவாறு அரசாங்கத்துடன் பேசுவது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்களின் தலைவிதி ஓரிருவரின் கைகளில் இல்லை. இதனை சம்பந்தன் சரியாக கையாண்டிருந்தால் தமிழ் மக்கள் பேரவை உருவாகவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்றார்.

## கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது!

## 'தமிழ் மக்கள் பேரவை' உருவாக்கம் குறித்து சம்பந்தன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் கட்சித் தலைமையின் அனுமதியைப் பெறாமல் ஓர் அமைப்பை உருவாக்குவதை நாம் விரும்ப மாட்டோம். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்ற கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது. இவ்வாறு கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். தமிழ்மக்கள் பேரவை அமைப்பின் உருவாக்கத்திற்கு இப்போது என்னால் பதிலளிக்கமுடியாது. பொறுத்திருந்துதான் பதில் வழங்குவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வுக்கான யோசனைகளை முன்வைக்கப் போவதாகக் கூறி "தமிழ் மக்கள் பேரவை" என்ற பெயரில் ஓர் அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்குள் உள்ள வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இரகசியமான முறையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களும், கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களும் பெருமளவில் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவதற்காகத் திட்டமிட்டு கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களின் அழுத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது என்று அரசியல் இராஜதந்திரிகளிடமிருந்தும் மற்றும் உள்ளூர், சர்வதேச ஊடகங்களிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி யிடம் வினவியபோதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு புதிய அமைப்பு ஜனநாயகரீதியில் உருவாகி செயற்படுவதை எதிர்க்கமுடியாது. ஆனால், ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் கட்சியின் கோட்பாடுகளைமீறி கட்சித் தலைமையின் அனுமதியைப் பெறாமல் தனிப்பட்டரீதியில் ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதை கட்சித் தலைமை ஏற்றுக்கொள்ளாது.

அதேமாதிரித்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் கட்சித் தலைமைக்கு அறிவிக்காமல், கட்சியின் அனுமதியைப் பெறாமல் ஓர் அமைப்பை உருவாக்குவதை நாம் விரும்பமாட்டோம். இது குழப்பத்திற்கே வழிவகுக்கும். எனினும், தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது.

# வரும் ஆனா வராது

## யாழ்.மாநகரசபைத் தண்ணீர்



"வரும் ஆனா வராது" என கவலையில் இவ்வாறு கலாய்க்கிறார்கள் யாழ். நகர்ப்புற மக்கள். கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக யாழ். நகர்ப்புற மக்களின் குழாய்வழிக் குடிநீர் விநியோகம் சீரற்று இருப்பதாகவும் இதுதொடர்பாக நிர்வாகமும் அசமந்தப்போக்கில் உள்ளதோடு மக்களின் அத்தியாவசிய தேவைப்பாடு தொடர்பாக ஊடகங்களும் மூடி மறைப்பை மேற்கொள்கின்றன எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னைய காலங்களில் திருநெல்வேலி, கோண்டாவில் போன்ற பகுதிகளில் இருந்து 5இற்கு மேற்பட்ட இயந்திரங்களால் இறைக்கப்பட்டு 22 அடிக்கு மேற்பட்ட கொள்ளளவிற்கு ஏற்றப்பட்ட நீர் மக்களிற்கு முன்பு விநியோகிக்கப்பட்டது. தற்போது அந்த 5 இயந்திரங்களும் பழுதடைந்தநிலையில் 3 இஞ்சி பைப் கொண்ட சிறிய ஓர் இயந்திரத்தால் மாத்திரமே இறைக்கப்பட்டு 4அடி, 3அடி கொள்ளளவிற்கு மாத்திரமே ஏற்றப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன. இதனால் மக்களிற்கு போதியளவு நீர் கிடைக்காமல் போகின்றது.

5 இயந்திரங்களும் ஒன்றன் பின் ஒன்றாக சேதமடைய இறுதிநேரத்தில் ஒரு இயந்திரத்தால் மாத்திரம் இறைக்கும்போது பலர் பல கோரிக்கைகளைவிட்டும்கூட எந்த இயந்திரத்தையும் பழுது பார்க்காது நிர்வாகம் கொட்டாவி விட்டுக்கொண்டு இருந்ததாக ஊழியர்கள் இதுதொடர்பாக கருத்து வெளியிடுகின்றனர். இறுதிநேரத்தில் அனைத்தும் சேதமுற நீர்வழங்கல் பிரிவே அந்த சிறிய இயந்திரத்தையேனும் வழங்கியதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

முன்னைய ஆட்சியில் 5 இயந்திரங்கள்மூலம் விநியோகிக்கப்பட்ட நீர்த்தேவை இன்று ஒரு சிறிய இயந்திரம்மூலம் விநியோகிக்கப்படும்போது மக்கள் எத்தகைய அசௌகரியங்களை எதிர்நோக்குவர் என்பது சொல்லித் தெரியவேண்டிய விடயமல்ல என்பது ஒரு புறமிருக்க முன்னைய ஆட்சியாளர்களால் இதனை செப்பனே செய்துமுடிக்கப்பட்டதை ஏன் தற்போது இவர்களால் செய்துமுடிக்க முடியாதுள்ளது என்பது மறுதுருவ வினாவாகும். மக்களின் அத்தியாவசிய தேவைகளில்கூட அசமந்தப்போக்கில் இருக்கும் மாநகர சபை நிர்வாகம் எவ்வாறு நகர அபிவிருத்தியை மேம்படுத்தும் என்பதே இன்றுள்ள மக்களின் கேள்வியாகும்.

தினமுரசு
வாரமலர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

# ஜெயிக்குமா? மனிதநேயம்

காலத்திற்குக் காலம் தென்னிலங்கை அரசியல் வரலாற்றில் பல திருப்பங்கள் ஏற்பட்டுவந்துள்ளன. எக்காலத்திலும் யார் வந்தும் இதுவரை தமிழ்மக்கள் சார்பான திசை மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. என்பது ஒரு புறமிருக்க, நல்லவற்றை வரவேற்கும் நேர்முறை சிந்தனைகளையும் நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். அந்தவகையில் இதுவரை இல்லாத மனிதநேயப் பண்பம்சங்கள் நல்லாட்சியரசின் சில செயற்பாடுகளில் காணமுடிவதையும் மறுக்கமுடியாது. இந்த மனிதநேயம் அரசியல் தீர்வு எனும் விடயத்தில் ஜெயிக்குமா என்பது தான் இன்றுள்ள கேள்வியாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வலி.வடக்கு புலம் பெயர் மக்களோடு எளிமையான முறையில் சமை யலறையில் இருந்து உரையாடிய ஜனாதிபதி மீள் குடியேற்றத்திற்குத் தடைபோடும் இனவாதிகளிற்கு இவ்வாறு கூறியுள்ளார்.

தென்னிலங்கையில் ஒரு அறைக்குள் பத்திரிகையாளர் களை அழைத்து வைத்துக்கொண்டு புலிகள் மீண்டும் உருவாகப்போகிறார்கள். தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் வந்துவிட்டது என தென்னிலங்கையில் இருந்து கொண்டு பேசிவரும் தீவிரவாதிகளே வடக்கில் தேசிய பாதுகாப்பினால் இடம்பெயர்ந்து 25 வருடங்கள் அவல வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களை வந்து ஒரு தடவை பாருங்கள்.

நான் அந்த மக்களை சந்தித்தேன், அந்த மக்களுடைய வாழ்க்கை முறையை பார்த்தேன். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் அவலவாழ்க்கையை பார்த்தேன். அதனை பார்க்காமல் தென்னிலங்கையில் இருந்து விதண்டாவாதம் பேசாதீர்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கின்றார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் அம்மக்கள் மத்தியில் ஆறு மாதத்திற்குள் அனைவரையும் மீள்குடியேற்றம் செய்வதாக உறுதியளித்துள்ளார். கைதிகள் விடயத்தில் கொடுத்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றவில்லை என்பது ஒருபுறமிருந்தாலும் உணர்வு வெளிப்பாடு உருவாகியமைக்கு முதலில் மதிப்பளிக்கவேண்டும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும், அன்போடு, அருளோடு, தன்னலமற்ற பொதுநலத்துடனும், மனிதநேயத்துடனும், மற்ற உயிர்களையும் காத்து நிற்கும் உத்தமர்கள் ஒரு சிலர் இருந்த காரணத்தால்தான் மனிதகுலம் இன்னமும் தழைத்துநிற்கிறது.

“உண்டால் அம்ம இவ்வுலகம்” என்ற புறநானூற்றுப் பாடலில் கூறியபடி, இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும், தமக்கென வாழாப் பிறர்க்குரிய சான்றோர்களில் சிலர் மனிதநேயத்துடன் உலகில் வாழ்கின்ற காரணத்தால்தான், உலகம் என்பது இருக்கிறது. இன - மத - தேச வேறு பாடுகளைக் கடந்து, மனிதனை மனிதனாக மதிக்கும் மனிதநேயம் மனிதகுலத்துக்கு நம்பிக்கையைத் தருகிறது.

“அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய், தம்நோய்போல் போற்றாக் கடை” என்பது வள்ளுவம். கல்வியறிவு, செல்வச்செழிப்பு, பட்டம், பதவி ஆகியவை பெருமளவில் ஒருவனுக்குக் கிடைத்திருந்தாலும், அவற்றுடன் மனிதநேயம் என்பது அவனிடம் இல்லை என்றால், சேர்ந்துள்ள மற்ற வசதிகளால் அவனுக்கோ அவன்சார்ந்த சமுதாயத்துக்கோ எந்தப் பயனும் இல்லாமற் போய்விடும்!

ம்னிதரின் தன்மையின் உயர்போக்கினை அடிப்படை யாகக் கொண்ட உலகநோக்கு மனிதநேயம் ஆகும். இது இன்றைய நல்லாட்சியரசின் தலைமைக்கு உண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது.

ஆனால் அந்த மனிதநேயம் ஜெயிக்கவேண்டுமானால் ஒரு ஜனநாயக நாட்டில் அனைவரும் அணிதிரளவேண்டும். தனியொருவர் நினைத்ததை முடிப்பதற்கு இது சர் வாதிகார நாடல்ல ஜனநாயக நாடு அனைவரும் ஒன்றிணைந்தால்தான் இந்த மனிதநேயம் ஜெயிக்கும். அது நடக்குமா?

# தமிழ் மக்கள் பேரவைக்கு



# தாழ்மையான வேண்டுகோள்

**“தமிழ் மக்கள் பேரவை அரசியல் சுயலாபங்களிற்கு அப்பால் மக்களின் அபிலாசைகளிற்காகப் பயணிக்க வேண்டும். அதற்காக கற்றவர்களும் பெரியோர்களும் கூடிய இந்த அவை சுயமாகவும், சுதந்திரமாகவும், பயணிக்கவேண்டும். மக்களிற்காக மாத்திரம் சேவை செய்யும் எந்த ஒரு தனிநபரும் எதற்கும் அஞ்சத் தேவையில்லை எனும் ஆழத்தை வடக்கு முதல்வர் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.”**

அர்ப்ப அரசியல் அபிலாசைகளிற்கப்பால் தமிழ் இனத்தின் விடுதலைக்காக தலைநிமிர்ந்த தமிழ் சிவில் சமூகப்பிரதிநிதிகளிற்கு ஊடகங்களின் சார்பான முதற்கண் நன்றிகள். “இன்றைய தேவையில் இது நன்றே அமையவேண்டும்” என்கின்ற எதிர்பார்ப்பில் விஸ்வரூபம் பெற்ற தமிழ் மக்கள் பேரவை: மாற்றுத் தலைமையை உருவாக்கும் நோக்கத்திற்கப்பால் தமிழ் தலைமைகளின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டை நிறுத்தி சுயலாப அரசியலிற்கப்பால் மக்களிற்கான சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க அயராது உழைக்கவேண்டும் என்பதே இவ் ஊடக வேண்டுகோளின் கருப்பொருளாகும்.

அரசியலிற்குள் ஊறி அதற்குள் கிடைக்கப்பெற்ற தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை வரையறை தெரி யாமல் அனுபவித்தவர்கள். பலவழிகளில் உங்களை வீழ்த்தமுற்படுவர். வினை வருவழி தெரியாமல் திணை விதைப்பதில் அவர்கள் வல்லவர்கள். அவர்களின் அடாவடி அரசியலோடு நீங்கள் போட்டி போட முடியாதநிலை நிச்சயம் உருவாகும். இதற்கெல்லாம் தயவுசெய்து தயாராக இருங்கள். ஒருகட்டத்தில் உங்களுடன் இணைந்து திரைமறைவில் திட்டங்கள் தீட்டவும் முற்படுவர். அதற்கு இடமளித்தால் அர்த்தமற்றுப் போகும் உங்கள் பயணம்.

இது ஒருபுறமிருக்க கடந்த தேர்தல் தோல்வியுற்று அரசியல் அபிலாசைகளை அடிமனதில் சுமந்த அர்ப்ப பிராணிகளையும் இதற்குள் நீங்கள் உள்வாங்கி உள்ளீர்கள். நிச்சயம் ஒருகட்டத்தில் இவர்களாலும் இன்னல்கள் வரும் என்பதையும் மறந்து விடாதீர்கள். மாற்று வழியில்லை என்பதற்காக கூட்டமைப்பைக் குறிவைக்க வேண்டும் எனும் நோக்கோடு வந்துள்ள கும்பல்களும் இதற்குள் உள்ளது. அவர்களிற்கு அரசியல் பழிவாங்கல்கள் மாத்திரம்தான் அடிமனதில் இருக்குமேதவிர அப்பாவி மக்களின் அபிலாசைகள் பற்றிப் புரியாது. போதும் அன்றுதொட்டு இன்றுவரை யாரை யார் பழிவாங்கலாம் எனும் அரசியல் பயணங்கள் தான் தமிழர் அரசியல் பரப்பில் அரங்கேறியதுதான் மிச்சமாச்சு அது அல்ல இன்றைய தேவை. ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கு ஒரு விடிவு வேண்டும். ஒருதலைப்பட்ச மாய் எடுக்கும் தீர்மானத்திற்கு ஒரு முடிவுவேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை அரசியல் சுயலாபங்களிற்கு அப்பால் மக்களின் அபிலாசைகளிற்காகப் பயணிக்கவேண்டும். அதற்காக கற்றவர்களும் பெரியோர்களும்கூடிய இந்த அவை சுயமாகவும், சுதந்திரமாகவும், பயணிக்க வேண்டும். மக்களிற்காக மாத்திரம் சேவை செய்யும் எந்த ஒரு தனி நபரும் எதற்கும் அஞ்சத் தேவையில்லை எனும் ஆழத்தை வடக்கு முதல்வர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். துரோகங்கள் அரங்கேறும் கட்சிக்குள் நாம் இழைக்கும் நம்பிக்கைத் துரோகம் தவறல்ல. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு மக்கட் பிரதிநிதி மக்களிற்காக சேவையாற்றி மக்களிற்கு கருத்து வழங்க எவர்க்கும் அஞ்சத் தேவையில்லையே. ஆகவே அச்சப்பாட்டை விடுத்து.

- தமிழ் மக்களிற்கான நிரந்தர தீர்வினைத் திசைமுகப்படுத்துங்கள்.
- மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளிற்குத் தீர்வு காணுங்கள்.
- அரச அங்கீகாரம் பெற்ற தலைமைகளும் இதற்குள் இருக்கின்றார்கள். அதற்கான தடைகள் எதுவும் இங்கிராது.
- மாகாண சபையை வலுப்படுத்துங்கள்.
- மக்கள் பிரச்சினையை மட்டும் ஆராயுங்கள். அடுத்தவர் பிரச்சினைகளை அலச இங்கு இடம் கொடாதீர்கள்.
- முரண்பாடுகள் வேண்டாம். அதுவல்ல இன்றைய தேவை. அது உருவாகும் கணமே அதைத் தீர்க்க முனைப்புக்காட்டுங்கள்.
- குழப்பம் விளைவிப்போரை ஏகமனதாக தீர்மானித்து வெளியேற்றுங்கள். இது அரசியல் கட்சியல்ல.
- பேரவைசார் அரச அங்கீகாரங்களிற்கான முன்னெடுப்புக்களை மேற் கொள்ளுங்கள்.
- இன்றைய தேவையின் தெரிவிது, பாதைமாறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். காரணம் பாவிகள் உலா வரும் பூமியிது. முன்பும் பல தடவை இம்முயற்சி தோற்றது. இனியும் தோற்றால் தமிழ் மக்களிற்கு மீட்சியில்லை.





# வன்னிக் காடுகளின் மறைவில் நச்சியல் ஆய்வுகூடம் ஒன்றை புலிகள் அமைத்தனர்

WikiLeaks பகுதி -12

### புலிகளின் நச்சியல் ஆய்வுகூடம்

இதனிடையில் 2006ஆம் ஆண்டு வன்னிக் காடுகளின் மறைவில் நச்சியல் ஆய்வுகூடம் ஒன்றை புலிகள் அமைத்தனர். விசேட ஆயுதம் ஒன்றை உருவாக்குகின்ற வேலைத் திட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்தில் நிலைகொண்ட இராணுவத்தை துரத்தவே இம்முயற்சியில் இறங்கினர். குயின்ஸ்லண்ட் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த பயங்கரவாத விவகார நிபுணர் பீற்றர் சல்க் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துகின்ற முதலாவது தீவிரவாத அமைப்பு புலிகள்தான் என்று மெல்போர்னில் வைத்து தெரிவித்துள்ளார்.

இவர் புலிகள் தொடர்பான விடயங்களில் உலகளவில் முன்னிலை வகிக்கின்ற பேரறிவாளர் ஆவர். புலிகள் இராணுவ முகாம்மீது இரசாயன ஆயுதங்களை முதல் பிரயோகித்த சந்தர்ப்பத்தில் எதிர்பார்த்திராத விதமாக எதிர்ப் பக்கத்தில் இருந்து வீசிய காற்று இரசாயன புகையின் பெரும் பகுதியை புலிகளின் பிரதேசத்துக்கு தள்ளிச் சென்றது என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் இருந்து கசிந்த தகவல்கள் இரகசிய ஆயுதத்தின் வீரியத்தை கூட்டுகின்ற முயற்சியில் புலிகள் மும்மூரமாக ஈடுபட்டு உள்ளனர், தெரிவுசெய்யப்பட்ட இலக்குகள்மீது தாக்குதல் நடத்துகின்ற திறனை அதிகரித்துள்ளனர் என்று கூறின. இப்புதிய இரசாயன ஆயுதம் எதிரியை ஒரேயடியாக செயலிழக்க செய்கின்றவகையில் வடிவமைக்கப்பட்டது. இவ்வாயுதத்தை இலங்கை இராணுவ முகாம்கள்மீது பிரயோகிக்கின்ற பட்சத்தில் 40000 படையினர் வரை இலகுவாக வீழ்த்தப்படுவர் என்று லண்டனில் இருந்து கிடைத்த செய்திகள் சொல்லின.

### விசேட ஆயுதம்

அதாவது புலிகள் விசேட ஆயுதம் ஒன்றை உருவாக்குகின்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர், யாழ்ப்பாணத்தின்மீது மிக பாரிய தாக்குதலை இவ்வாயுதத்தை கொண்டு நடத்துவார்கள், அதிக புலி உறுப்பினர்களை பலிகொடுப்பதற்கு பதிலாக இவ்வாயுதத்தை பயன்படுத்தி படையினரை நிலைகுலைய வைத்து பின்னர் புகுந்து தாக்கமுடியும் என்று அன்ரன் பாலசிங்கம் லண்டனில் புலிகள் இயக்க செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்கு தெரிவித்து ரொக்க நிதி சேகரித்தார். இப்புதிய ஆயுதம்மூலமாக புலிகளின் இழப்பை பெரியளவில் குறைக்க முடியும் என்று கோடி காட்டினார்.

புலிகள் இப்புதிய ஆயுதத்தை ஓரளவுக்கு செய்துவிட்டனர் என்று பிந்திய வன்னித் தகவல்கள் கூறின. முன்பு சொல்லப்பட்ட ஆய்வுகூடம் இருமாடிகள் கொண்ட நிலக்கீழ் அறைக்குள் அமைக்கப்பட்டு இருந்தது. எவரும் சந்தேகிக்க முடியாதபடி நிலத்துக்குமேல் மூன்று மாடி கட்டடம் கட்டப்பட்டு இதற்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருந்தது. புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் நேரடி உத்தரவு மற்றும் அறிவுறுத்தலுக்கு அமைய இம்மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. இதுவே வன்னியில் புலிகள் அமைத்த மிக உயரமான கட்டடம் என்று ஊடகவியலாளர்கள் கூறினார்கள்.

இதன் நிர்மாண வேலைகளுக்காக இந்தியாவின் பஞ்சாப் நகரத்தில் இருந்து பொறியியலாளர்கள், தொழினுட்பவியலாளர்கள் வரவழைக்கப்பட்டு இருந்தனர் என்றும் இவ்வட்டாரங்கள் மேலும் வெளிப்படுத்தின. அத்துடன் இக்கட்டடம், ஆய்வுகூடம் ஆகியவற்றின் மூளைகளாக மேற்கத்தைய நாடுகளில் வாழ்கின்ற புலி ஆதரவுத் தமிழர்களான இரசாயன நிபுணர்கள் மற்றும் பொறியியலாளர்கள் செயற்பட்டு இருக்கின்றனர்.

நியூயோர்க்கில் உள்ள வடமராட்சியை சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஒருவரே இவற்றின் நிர்மாணத்துக்கு பாரிய பங்களிப்பு வழங்கி இருக்கின்றார். இவர் பஞ்சாப் பெண் ஒருவரை திருமணம் செய்தவர் ஆவார்.



1995 ஆம் ஆண்டு ஜெனரல் ஜானக பெரேரா தலைமையிலான இராணுவத்தால் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து விரட்டப்பட்டனர். புலிகள் வன்னிக் காடுகளுக்குள் ஓடி ஒளிந்தனர். அப்போதில் இருந்தே யாழ்ப்பாணத்தை மீள கைப்பற்றுவதற்கான திட்டங்கள், வியூகங்கள் ஆகியவற்றை முடுக்கிக்கொண்டே இருந்தனர். இதனால் இருதரப்பினரும் எப்போது வேண்டுமானாலும் அடுத்த யுத்தம் இடம்பெறலாம் என்பதை அறிந்து வைத்திருந்தனர். ஆனால் இரு தரப்பினும் மிதமிஞ்சிய அழிவுகளை அடுத்த யுத்தம் ஏற்படுத்தும் என்று ஊகித்திருந்தனர். இதனால் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதன் மூலம் இயக்கத்தின் அழிவை குறைக்கலாம் என்று புலிகள் கணக்குப் போட்டார்கள்.

### நிராகரித்த புலிகள்

ஆனால், இது ஒரு பயங்கர ஆபத்தான விளையாட்டு என்றே அரசியல் அவதானிகள் கண்டு கொண்டார்கள். ஏனென்றால் இது புலிகளுக்கு பாரிய பின்னடைவை இன்னொரு விதத்தில் ஏற்படுத்தி விடும். ஏற்கனவே பிரபாகரன் சர்வதேச சமூகத்தால் கிரிமினலாக விளங்கப்பட்டு இருக்கின்றார். இவர் இன்ரபோல் பொலிஸாரால் தேடப்படுபவர். ராஜிவ் காந்தி படுகொலைக்காக இவரை கையளிக்க வேண்டும் என்று இந்தியா அழுத்தம் கொடுத்துவருகின்றது. இந்நிலையில் இரசாயன ஆயுதத்தை பயன்படுத்தி யுத்தம் நடத்துகின்ற பட்சத்தில் பிரபாகரன் சர்வதேச போர்க் குற்றவாளியாகவும் பிரகடனப்படுத்தப் பட்டுவிடுவார். ஏனென்றால் முதலாம் உலக யுத்தத்தை தொடர்ந்து இரசாயன ஆயுத பாவனைக்கு உலகம் தடைவிதித்து உள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான குளோபல் யுத்தம் புலிகளுக்கு எதிராக பிரயோகிக்கப்பட இது பிரதான காரணம் ஆகிவிடும். அத்துடன் புலிகளின் இரசாயன ஆயுத பாவனை ஏனைய உலக தீவிரவாத அமைப்புகளுக்கு புதிய பாதையை திறந்துகொடுக்கும் என்று சர்வதேசம் எச்சரிக்கை அடைந்து விடும். ஏனென்றால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் புதிய புதிய நுட்பங்களை புலிகளே கண்டு பிடித்து முன்னெடுத்தனர். புலிகளின் இந்நுட்பங்களை ஏனைய தீவிரவாத அமைப்புக்கள் உள்வாங்கிக் கொண்டார்கள்.

இந்நிலையில்தான் இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கின்றனர், இனிவருகின்ற யுத்தங்களில் அரச படையினர்மீது இவற்றை பயன்படுத்த உள்ளனர் என்கிற செய்திகளை புலிகள் 2006ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நிராகரித்தார்கள். மட்டக்களப்பில் புலிகளின் அரசியல்

ஊடுருவி


துறைப் பொறுப்பாளராக உள்ள தயா மோகன் டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் ஐக்கிய நாடுகள் சபை வழக்கத்துக்கு புறம்பானவகையில் புலிகள் ஒரு போதும் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தமாட்டார்கள் என்று தெரிவித்தார். ஆனால் புலிகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லை என்று சொல்லிவிடமுடியாது என்று அரசாங்கம் பதிலுக்கு கூறியது.

உலக தீவிரவாதிகளின் வரலாற்றை மீட்டுப் பார்க்கின்றபோது இதற்கான சந்தர்ப்பங்களை மறுக்க முடியாதுதான்.

இதனிடையில் இரசாயன ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட சர்வதேச நிபுணர் தியோடொர் கரசிக்கின் அவதானங்களின்படி இலங்கையின் தேயிலைச் செய்கைக் கைத்தொழிலை நாசம் செய்ய புலிகள் தீர்மானித்தனர், இதனால் தேயிலையில் பொட்டாசியம் சயனைட் என்கிற நச்சுப்பொருளை கலந்தனர்.

(யாத்திரை தொடரும்)

# அடக்குமுறை வரவழைத்த வன்முறை
# ISIS




ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளைக் கொடூரமானவர்களாகவும், காமுகர்களாகவும் ஊடகங்கள் சித்தரிக்கும் தருணத்தில்தான் ஈராக்கில் பணிபுரிந்த இந்தியாவைச் சேர்ந்த தாதிகள் சிலரையும் பத்திரமாகக் காப்பாற்றி இவர்கள் இந்தியாவுக்கு அனுப்பினர்.

வந்த தாதிகள் அவர்கள் பயங்கர வாதிகள் இல்லை. போராளிகள். அவர்கள் நோன்பு நோற்றிருந்த நிலையிலும் எமக்கு உணவு தந்தனர். அவர்களின் விரல் நகங்கள் கூட எம்மீது படவில்லை எனக்கூறி அவர்களின் பண்பட்ட நிலையைக் கூறினர்.

ஊடகங்கள் இவர்கள் பற்றி மோசமாகச் சித்தரிப்பதன்மூலம் இஸ்லாத்தின்மீது களங்கம் கற்பிக்க முனைகின்றனர். அண்மையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதி ஏழு வயதுக் குழந்தையை திருமணம் செய்ததாக புகைப்படத்துடன் செய்தி வெளிவந்தது. ஒரு ஏழு வயதுச் சிறுமியை ஒருவர் அணைத்துக் கொண்டிருக்கும் புகைப்படம் பரவலாக உலாவந்தது.



அது ஒரு வீடியோவில் வந்த நிகழ்ச்சியின் ஒரு கட்டக் காட்சியாகும். ஒரு போட்டி நடக்கின்றது. அதில் கறுப்புக் கொடியை மேலில் போட்ட நிலையில் ஒரு சிறுமி குர்ஆன் ஓதுகின்றாள். அவள் பிழைவிடும் போது அறிவிப்பாளர் திருத்திக் கொடுக்கின்றார். அந்தச் சிறுமி அழுகிறாள். அப்போது அறிவிப்பாளர் ஒரு கையால் அந்தச் சிறுமியை அரவணைத்து அமைதிப்படுத்தி ஓத வைக்கின்றார். இந்த இடம்தான் புகைப்படமாக வெளிவந்தது.

அது ஏழு வயதுச் சிறுமியை மணந்ததாகப் பகிரங்கப்படுத்தப் படுகின்றது. அதன்பின் அந்தச் சிறுமிக்கும் நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஏனைய சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிதான் ஏழு வயதுச் சிறுமியை மணந்ததாகக் கதைகட்டக் காரணமானது.

இதிலிருந்து ஊடகங்களில் இவர்கள் குறித்துவரும் அத்தனையும் உண்மைப்படுத்தமுடியாது என்பதை அறியலாம்.

முகத்தை மூடிக்கொண்டு யார் வேண்டுமானாலும், எதை வேண்டு மானாலும் செய்துவிட்டு இவர்களின் தலையில் போட்டுவிடலாம். ஈராக்கைப் பொறுத்தவரையில் இஸ்ரேலிய, அமெரிக்க உளவாளிகள் நிறைந்து வழியும் பூமி. அவர்கள் இதுபோன்ற குழப்பங்களைத் தூண்டி குழப்பத்தை உண்டுபண்ணி வருகின்றனர்.

இதேவேளை, இந்த ஐ.எஸ்.ஐ.எஸ் இனரைப் பொறுத்தவரையில் தவறான கோணத்தில் யாரோ சில கிங்மேக் கரால் வழிநடாத்தப்படுகின்றனர். அது யாராக இருக்கமுடியும் என்ற ஐயம் பரவலாக உள்ளது.

**ஈரான், சிரியா கூட்டுக்கட்சி**

சிரியாவின் ஷீஆ ஆட்சியை ஒழிக்க உருவானவர்கள்தான் இவர்கள். ஆனால், இவர்கள் திட்டமிட்டுத் தவறாக வழிநடாத்தப்பட்டு கிலாபத்தை அறிவித்தனர். இவ்வாறு தனிப்பட்ட சூழ்ச்சிகளால் இஸ்லாமியக் கலீபா தெரிவுசெய்யப்படுவது இஸ்லாமிய வழிமுறையல்ல.

(தொடரும்)



34

# விடுதலை வீரர்
# நெல்சன் மண்டேலா

வேகம் விவேகமல்ல. ஆவேசப்பட்டு அழித்துக்கொள்ளக் கூடாது. அமைதியாக இருந்துதான் காரியத்தை சாதிக்கவேண்டும் என்று உனக்கு தெரியாதா என்ன? என்று அவனை சாந்தப்படுத்தினான்.

சிசுலுவுக்கும் இவ்விடயம் எவ்வாறோ தெரிந்துவிட்டது. அவனும் ஓடோடிவந்து அவன் பங்குக்கும் மண்டேலாவை திட்டிவைத்தான்.

கோரும் சிசுலுவும் மாறி மாறி மண்டேலாவின் செயலுக்கு வசை மாரி பொழிந்தனர். அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பதுபோல இவ்விருவரினதும் சரமாரியான சொற்தாக்குதல்களும் சாடைப் பேச்சுக்களும் மண்டேலா தான் செய்தது தவறுதானோ என அவனை எண்ண வைத்துவிட்டது. அவர்களது பேச்சுக்கள் பச்சைமரத்திலேயே தீயை பற்ற வைத்துவிட்டது. மனதில் ஒரு முடிவெடுத்தவனாக மண்டேலா அலுவலக அறையை நோக்கி வில்லிலிருந்து புறப்பட்ட அம்பை போல விரைந்து சென்றான்.

மண்டேலா அலுவலக அறைக்கு சென்று தன் உயர் அதிகாரியும் மதிப்புக்குரிய தோழருமான சிடெல்ஸ்கியிடம் காரியதரிசி வெள்ளைக்கார வாடிக்கையாளர்முன் தன்னை நடத்திய விதத்தையும் தான் நடந்துகொண்ட முறையையும் பற்றி எடுத்துரைத்தான். சிடெல்ஸ்கியோ "நெல்சன் நீ செய்தது சரிதான் இடத்திற்கு தகுந்தால்போல நாம் வாழப் பழகிக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாம் இலட்சிய பாதையை நோக்கி முன்னேறி செல்லலாம். நமக்கு இலட்சியம்தான் முக்கியம் எனும்போது சிறிய விடயத்தை எல்லாம் பெரிதாக்கி பிரச்சினையை உருவாக்குவது நல்லதல்ல. நீ நடந்துகொண்டதே சரி" என்று கூறியது மட்டுமல்லாமல் மண்டேலாவுக்கு நிறைய அறிவுரை களைக் கூறி அவனது எதிர்கால வாழ்க்கைக்கே அத்திவாரமிட்டார். மண்டேலாவும் மறுக்காமல் ஏற்றுக்கொண்டான். மண்டேலா சிடெல்ஸ்கியை தன் மானசீக குருவாக ஏற்று அவர் கூறுவதை வேத வாக்காக மதித்து நடக்கலானான்.

சிடெல்ஸ்கியின் அறிவுரைகளை ஏற்று மண்டேலா நிர்வாகத்தில் அமைதியாக நிர்வாக பணிகளில் ஈடுபட்டான். ஆனால் கோரின் அடாவடித்தனங்கள் நிர்வாகத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றன. கோர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் முக்கிய உறுப்பினராக வும் கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய உறுப்பினராகவும் செயற்படுவது மண்டேலாவுக்கு பெரும் ஆச்சரியத்தை அளித்தது மட்டுமல்லாமல் கோரின் மீது வைத்த மதிப்பும் மரியாதையும் பன்மடங்காகப் பெருகிற்று. சிசுலுவும் அரசியலில் நாட்டமுடையவன் என்று தெரிய வந்ததும் மேலும் அதிசயித்துப் போனான்.

ஒருமுறை மண்டேலாவை சிடெல்ஸ்கி அழைத்து கோர், சிசுலு பற்றி எச்சரித்தார். இருவரது திறமை களையும் அவர் பாராட்டத் தயங்கவில்லை என்றாலும் அவர்களது நிழல் நடவடிக்கைகளை சிடெல்ஸ்கி ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அவரது பேச்சினூடாகவே மண்டேலாவுக்கு புரிந்துவிட்டது. அவர் மண்டேலாவுக்கு "நெல்சன் உன் நண்பர்கள் அரசியலில்

**"நெல்சன் உன் நண்பர்கள் அரசியலில் ஈடுபடுகிறார்கள். அதற்கு நான் தடையேதும் சொல்லவில்லை. ஆனால் நீ தவறியும் அரசியலில் விழுந்து விடாதே. அந்தப் பக்கம்கூட திரும்பிப் பார்க்காதே. அரசியல் ஒரு சாக்கடை. அதில் தவறி ஒருமுறை விழுந்துவிட்டால் கூட கடவுள் வந்தாலும் காப்பாற்றமுடியாது போய்விடும். கவனம் ஜாக்கிரதை"**

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

ஈடுபடுகிறார்கள். அதற்கு நான் தடையேதும் சொல்லவில்லை.

ஆனால் நீ தவறியும் அரசியலில் விழுந்துவிடாதே. அந்தப் பக்கம்கூட திரும்பிப் பார்க்காதே. அரசியல் ஒரு சாக்கடை: அதில் தவறி ஒருமுறை விழுந்துவிட்டால்கூட கடவுள் வந்தாலும் காப்பாற்றமுடியாது போய்விடும். கவனம் ஜாக்கிரதை" என்று எச்சரித்துக் கூறினார். அதற்கு மண்டேலாவோ புன்முறுவல் பூத்தபடி "கறுப்பின மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றுதான் நினைக்கின்றேனேதவிர அதற்கு அரசியல்தான் வடிகால் என்று நான் ஒருபோதும் கருதவில்லை.

(தொடரும்)



# 30ஆவது அகவையில் 'சார்க்' அமைப்பு

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம் ஆகிய ஏழு நாடுகள் மார்கழி எட்டாம் திகதி 1985இல் சார்க் எனும் கூட்டு ஒத்துழைப்பு அமைப்பினை அங்குரார்ப்பணம் செய்தன. இவை யாவும் தென்னாசிய நாடுகளாகும். 'சார்க்' என்பன South Asian Association for Regional Cooperation என்கிற ஆங்கில நீளப்பெயரின் அழுத்தமாகும். SAARC என்பதைத் தமிழிலும் 'சார்க்' அமைப்பு என்பதாகவே பயன்படுத்தப்படுகிறது. இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு மார்கழி எட்டாம் திகதி சார்க் அமைப்பு 30 வருடங்களைக் கடந்துவந்துள்ளது. ஆப்கானிஸ்தான் மத்திய ஆசிய நாடாக இருந்தபொழுதிலும் முழு அங்கத்துவ நாடாக சித்திரை 2007 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டு எட்டாவது நாடாக இடம்பிடித்துக்கொண்டது. தற்போதைய சார்க் அமைப்பின் 8 நாடுகளினதும் மொத்த சனத்தொகை 170 கோடியாகும்.

அமெரிக்கா மக்கள் சீனாவிற்கு அடுத்ததாக பொருளாதார ரீதியில் விரைவாக முன்னேறிவரும் பிராந்தியாகும். இந்தியாவின் துரித பொருளாதார வளர்ச்சியே இப்பிராந்தியத்தின் பிரதான அம்சமாகும். 1985 இல் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது சார்க் பிராந்தியம் மிக வறுமையான பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரதேசமாக கணிக்கப்பட்டது. ஆனால் இன்றோ நிலை மாறிவிட்டது. இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டு வருவதாலேயே நிலைமை மாறிவிட்டது.

1985இல் சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டபோது அங்கத்துவ நாடுகள் கோட்பாட்டு வரையறையொன்றினை ஏற்றுக்கொண்டன. இறைமை, சமத்துவம், ஆட்புல ஒருமைப்பாடு, ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடாமை, அரசியல் சுயாதிபத்தியம் ஆகிய கோட்பாடுகளே ஏழு நாடுகளும் ஏற்றுக்கொண்ட கொள்கைகளாகும். அதேநேரம் சார்க் பிராந்திய மக்களின் நலனோம்பு நடவடிக்கைகளே முன்னெடுத்தல், துரித பொருளாதார, சமூக அபிவிருத்தி, கௌரவமான வாழ்வாதாரங்களை ஏற்படுத்தல், பிராந்தியத்தில் சுயசார்பு கொள்கையினை அமுலாக்கல், ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளும் ஏனைய நாடுகளின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல் ஆகியவையே சார்க் அமைப்பின் நோக்கங்களாகவே வரையறுக்கப்பட்டன. மார்கழி 1985 இல் முதலாவது உச்சிமாநாட்டிலிருந்து இறுதியாக 2014 ஆம் ஆண்டுவரை பல உச்சிமாநாடுகள் நடைபெற்றன.

இந்த முப்பதாண்டு காலப்பகுதி சார்க் அமைப்பின் கோட்பாட்டு வரையறைக்குள் நோக்கங்களை அடைந்துகொள்வதில் எவ்வளவு தூரம் வெற்றிகண்டுள்ளன என்பது அரசியல் அவதானிகளாலும் மாணவர்களாலும் முன்வைக்கப்படும் வினாக்களாகும். உலகமட்டத்தில் ஐரோப்பிய யூனியன், ஆசியன் போன்ற கூட்டமைப்புக்கள் வெற்றிகண்ட அளவுக்கு சார்க் வெற்றிபெற்றுள்ளதா என நோக்கும்போது சார்க் பெரிய அளவில் சாதிக்கவில்லை என்றே அனுமானிக்கமுடிகின்றது.

சார்க் அமைப்பு பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கான அமைப்பாக இருந்தபோதிலும் அரசியல் காரணிகளே பொருளாதார சமூக அபிவிருத்திக்கு தடையாக உள்ளன.

அமைப்பில் இந்தியா, பாகிஸ்தான் முரண்பாடு பெரும் தடையாக உள்ளது. 1947ஆம் ஆண்டு இலிருந்து இந்தியாவும், முஸ்லிம் பாகிஸ்தானும் புதிய சுதந்திர நாடுகளாயின. காஷ்மீர் பிரச்சினையில் 1948 ஆம் ஆண்டு இரண்டு நாடுகளும் யுத்தத்தில் இறங்கின. ஐ.நா.சபையின் தலையீட்டால் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியும் ஐ.நா.வால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐ.நா. தீர்மானத்தின்படி காஷ்மீர் மக்கள் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் இந்தியாவுடன் இணைவதா அல்லது, பாகிஸ்தானுடன் இணைவதா தீர்மானிப்பதே இதன் நோக்கமாகும். இன்றுவரை இந்தியா சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவதில் எந்த அக்கறையும் காட்டவில்லை. 1965, 1971 களில் மீண்டும் யுத்தங்கள் ஏற்பட்டன. 1999 இல் பாரியளவில் யுத்தம் ஏற்படாவிடினும் காகில் பகுதியில் மோதல்கள் ஏற்பட்டு தணிந்தன. நாடுகளுக்கிடையில் நடைபெறும் சாதாரண கிரிக்கெட் போட்டிகள்கூட நடைபெறாத சூழ்நிலையில் பெரியளவில் திருப்பங்கள் ஏற்படும்" என்பது யதார்த்தமாகாது.

அடுத்ததாக இந்திய, இலங்கை உறவுகளும் இலங்கைக்கு திருப்தியும், நம்பிக்கையும் அளிக்கக் கூடியவகையில் அமையவில்லை. இலங்கையில் தனிநாடு கோரிப் போராடிய அரசியல் இயக்கங்களுக்கு புகலிடம், ஆயுதப் பயிற்சி வழங்கியமை இரண்டு நாடுகளுக்கிடையில் உறவில் காயங்களை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய, இலங்கை ஒப்பந்தம் இந்தியாவில் நெருக்கத்தாலே எழுத்துவடிவம் பெற்றது. இலங்கை, இந்தியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவுக்கே அதிக நன்மைகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் வளங்களை சூறையாடுவதும் உறவு-களில் உரசல்களை ஏற்படுத்துகின்றது.

நேபாள நாட்டைப் பொறுத்தமட்டில் இந்தியாவின் பெரியண்ணன் போக்கு நேபாள மக்களிடையே சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது. நேபாள பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இந்தியா புதிய அரசியலமைப்பை வரவேற்கவில்லை. நேபாளத்தில் அரசியலமைப்பினை எதிர்க்கும் சிலகட்சியினருக்கு இந்தியா ஆதரவு வழங்குகிறது. இன்னுமோர் காரணி உண்டு. நேபாளத்தில் மாஓ கொள்கைகளை ஆதரிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு செல்வாக்கு உயர்வாகக் காணப்படுகின்றது. இதுவும் இந்தியாவுக்கு கசப்பினை ஏற்படுத்தும் விடயமாகும்.

மாலைதீவு நாட்டைப் பொறுத்தளவிலும் இந்தியாவின் தலையீடு காணப்படுகிறது. மாலைதீவு சுற்றுலா வருமானத்தில் பெரிதும் தங்கியுள்ளது. சுற்றலாப் பயணிகள் நேரடியாக அமெரிக்க டொலர்களையே மாலைதீவில் மாலைதீவில் பயன்படுத்துகின்றனர். மாலைதீவு நாணயத்தைவிட அமெரிக்க் டொலர்கூடிய புழக்கத்தில் உள்ளது. 2010ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி நாசிப் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்தார். மலே - தலைநகர் விமான நிலையத்தை 25 வருடங்களுக்கு அபிவிருத்தி செய்யவும் நிர்வகிக்கவும் இந்திய கம்பனிக்கு அதிகாரங்கள் வழங்கப்புட்டன. இந்திய கம்பனி அமெரிக்க டொலர்களை இந்தியா வங்கிகளுக்கு அனுப்பியதால் மாலைதீவில் வெளிநாட்டு செலவாணியான அமெரிக்க டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொருளாதாரம் நலிவடைய ஆரம்பித்தது. இதனால் மாலைதீவு விமான நிலைய ஒப்பந்தத்தை 2012ஆம் ஆண்டு ரத்துச் செய்தது. பதிலடியாக இந்தியா மாலைதீவுக்கு வாக்களித்த உதவித்தொகையான 225 மில்லியன் அமெரிக்க டொலரை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது. அத்துடன் உள்நாட்டு அரசியல் முரண்பாடுகளால் முன்னாள் ஜனாதிபதி நாசிட் இந்திய தூதரகத்தில் தஞ்சமடைந்தார். இராஜதந்திர முறுகல் உருவாகியது.

பூட்டானைப் பொறுத்தமட்டில் அங்கு நடைபெற்ற தேர்தல்களில் இந்தியா தலையீடு செய்ததென்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. 'பூட்டான் தேர்தல்களில் வெற்றிபெற்ற கட்சி அரசாங்கம் அமைத்தபின்னர் சீனாவுடன் நெருங்கிய பொருளாதார உறவுகளை ஏற்படுத்தியமை இந்தியாவை அதிருப்தியடைய வைத்தது. இதன் காரணமாக இந்தியா பூட்டானுக்கு வழங்கும் உதவிகளை மறுபரிசீலனை செய்தது.

ஆப்கானில்தான் பாகிஸ்தானுடன் நல்லுறவுபேணுவதில் தடையாக அமைந்த காரணியாதெனில் பாகிஸ்தான் பிரதேசத்துள்ளிருந்து ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடாத்தும் அல்கைதா போராளிகளின் விவகாரமாகும்.

இவ்வாறு இந்தியாவின் மேலாதிக்க மனப்பான்மையும், பாகிஸ்தானின் மண்ணிலிருந்து ஆப்கானில்தான் இந்தியாவில் ஊக்கப்படுத்தப்படும் பயங்கரவாத தாக்குதல்கள். சார்க்கின் இலட்சியத்தை அடைவதில் பெருந்தடையாக அமைந்துள்ளன. பிராந்திய வல்லரசுகளான அணுகுண்டு பலமுள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் தத்தம் போக்குகளில் மாற்றம் ஏற்படுத்தாவிடின் சார்க் கோட்பாடுகளும் நோக்கங்களும் வெற்று எழுத்துக்களாகவே தொடரும்.

**மாலைதீவு நாட்டைப் பொறுத்தளவிலும் இந்தியாவின் தலையீடு காணப்படுகிறது. மாலைதீவு சுற்றுலா வருமானத்தில் பெரிதும் தங்கியுள்ளது. சுற்றலாப் பயணின் நேரடியாக அமெரிக்க டொலர்களையே மாலைதீவில் மாலைதீவில் பயன்படுத்துகின்றனர். மாலைதீவு நாணயத்தைவிட அமெரிக்க டொலர் கூடிய புழக்கத்தில் உள்ளது. 2010ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி நாசிப் இந்தியாவுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்தார். மலே - தலைநகர் விமான நிலையத்தை 25 வருடங்களுக்கு அபிவிருத்தி செய்யவும் நிர்வகிக்கவும் இந்திய கம்பனிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன.**

—தேவ தர்மா—

கிழக்கு ரிப்போர்ட்

# உயிர் குடிக்கும் யானைகள்



நாடு முழுவதும் வெடிச் சத்தம், சோதனைச் சாவடி கெடுபிடி கள் இல்லாது யுத்தம் முடிந்து காணப்படுகின்றது. ஆனால் இன்றைய அமைதிச்சூழலில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களால் மக்கள் உடைமைகளையும், உயிர்களையும் தொடர்ச்சியாக இழக்கின்றநிலையில் நிம்மதியாக வாழமுடியாது கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர்.

அண்மைய காலங்களில் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அதிகமாக கிராமப்புற பிரதேசங்களை நோக்கி படை எடுக்கின்ற காட்டு யானைகளின் ஆக்கிரமிப்பு அன்றைய யுத்தப் பாதிப்புக்களையும்விட மோசமான-தாக மாறிவருகின்றது.

கிழக்கில் சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் காணப்பட்டபோது உடனடியாக தகுந்த பாடம் புகட்டப்பட்டது.

ஆனால் தமிழ், முஸ்லிம் வாழ்கின்ற மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்ற காட்டு யானைகளின் தாக்குதலுக்கு பலி ஆகின்ற கிராமப்புற மக்களின் உயிர்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அசட்டையாக உள்ளனரா? என்கிற கேள்வி தொக்கு நிற்கின்றது.

குறிப்பாக படுவான்கரை பிரதேசத்தில் அன்றாடம் கூலித் தொழில்செய்து வாழ்கின்ற மக்களே பலியாகின்றார்கள்.

மக்களின் நாளாந்த தொழில் பாதிக்கப்படுகின்றது. பொருளாதார ரீதியாக மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றனர். இரவு வேளைகளில் அச்சத்தோடு வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

கடந்த மாதம் மண்டூர் பிரதேசத்தில் தொழிலின் நிமித்தம் நண்பர்களுடன் சென்று திரும்புகின்ற வழியில் ஆறு பிள்ளைகளின் தந்தை ஒருவர் காட்டுயானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தார். குடும்ப தலைவரின் இழப்பு இக்குடும்பத்துக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

இது இடம்பெற்று ஒரு வார காலத்தின் பின்னர் தும்பங்கேணி என்ற கிராமத்தில் மனைவியுடன்

**- சபேசன் -**

இரவு உணவு உண்டு கொண்டிருந்த போது 75 வயது நிரம்பிய குடும்பஸ்தர் காட்டு யானை வீட்டுக்குள் புகுந்து கொடூரமான முறையில் தாக்கியதில் தலத்திலேயே பலியானார்.

இந்நிலைமைகளை பொறுத்துக் கொள்ளாத கிராம மக்கள் வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்கு முன்பாக திரண்டு வெல்லாவெளி பிரதேச செயலகம் மற்றும் மண்டூர் மட்டக்களப்பு வீதியை மறித்து பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து அதிகாரிகள் தலத்துக்கு விரைந்துவந்தனர்.

விரைவில் காட்டு யானைகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்துவார்கள் என்றும் யானைகள் பதுங்கி இருக்கும் காடுகளை வெட்டி அகற்றுவார்கள் என்றும் பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு தேவையான இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் வாக்குறுதிகள் வழங்கினார்கள்.

அரசியல் தலைவர்களும் அன்றைய தினம் அவ்விடத்தில் பிரசன்னமானார்கள். கிழக்கு மாகாண விவசாய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பலரும் அன்று அவ்விடத்தில் குவிந்தார்கள். இவர்களும் நிறைய வாக்குறுதிகளை வழங்கினார்கள்.

வனஜீவராசிகள் திணைக்களத்து டன் இராணுவத்தினரும் இணைந்து காட்டு யானைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் கிராமங்களுக்கு உடன் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அரசியல்வாதிகள் வழங்கிய வாக்குறுதிகளில் மக்களுக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை.

ஆயினும் மண்டூர் கம்பியிறக்கப் பகுதில் மறைந்திருந்த அட்டகாச ஆண் யானைகளில் ஒன்று வன ஜீவராசிகள் திணைக்கள வைத்திய குழுவினரின் பலநாள் முயற்சியால் மயக்கமருந்து ஊட்டி பிடிக்கப்பட்டது. பின்னர் யானைகள் சரணாலயத்துக்கு கொண்டு செல்லப்பட்து. இச்செய்தி மட்டு - அம்பாறை மக்கள் மத்தியில் பரவலாக சென்றடைந்தது. இதனால் மக்கள் ஓரளவு பயத்தில் இருந்து விடுபட்டனர். ஆனால் இச்சம்பவம் இடம்பெற்று ஒரு வார கால பகுதிக்குள்ளாகவே இதுவரை காலமும் நடந்த சம்பவங்களையும் விட பேரதிர்ச்சி தருகின்ற சம்பவம் இடம்பெற்றது.


திருமணமாகி ஒரு வருடமே கழிந்த புதுமண தம்பதி தாந்தாமலை, நெல்லிக்காடு பகுதியில் கடந்த மாதம் 10ஆம் திகதி வீட்டில் இருந்தபோது காலைநேரத்தில் உட்புகுந்த காட்டு யானை தாக்கியதில் தலத்திலேயே பலியானார்கள்.

தம்பிராசா - சுயமலர் ( வயது -17) என்பவரின் வயிற்றில் மூன்று மாத இரட்டை குழந்தைகள் என்று மரண பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 22 ஆம் திகதி காலை சம்மாந்துறை அல்.அமீர் வித்தியாலய ஆசிரியரும், இருபிள்ளைகளின் தந்தையான எம்.ரி.எம்.இர்பான் (வயது -29) என்பவர் சம்மாந்துறையில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மல்கம்பிட்டி சந்திக்கு அப்பால் இருக்கின்ற சல்மடுமூலையில் சொந்த வயலில் வரம்புவேலையில் ஈடுபட்டிருந்தவேளையில் திடீரென்று வந்த காட்டுயானை தாக்கியதில் பரிதாபகரமாக பலியானார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக சின்னவத்தைக் கிராம வாசியான சீ.கோவிந்தப்பிள்ளை கருத்துத்தெரிவிக்கையில், யுத்த காலத்தைவிட இன்றுதான் உயிருக்குப் பயந்து வாழும்நிலை ஏற்பட்டுள்ளது, மாலை 6.00 மணியானதும் வெளியில் செல்ல முடியாது வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கவேண்டியுள்ளது, காசு கடன்பட்டு செய்கின்ற வேளாண்மையை சரியான முறையில் அறுவடை செய்ய முடியாமல் உள்ளது என்றார்.

கடந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 9 பேர் பலியானமையுடன் 07 பேர் காயம் அடைந்துள்ளனர் அது மட்டுமல்லாமல் இலட்சக்கணக்கான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டு இருக்கின்றன.



திருமணமாகி ஒரு வருடமே கழிந்த புதுமண தம்பதி தாந்தாமலை, நெல்லிக்காடு பகுதியில் கடந்த மாதம் 10 ஆம் திகதி வீட்டில் இருந்தபோது காலை நேரத்தில் உட்புகுந்த காட்டு யானைதாக்கியதில் தலத்திலேயே பலியானார்கள். தம்பி ராசா-சுயமலர் (வயது -17) என்பவரின் வயிற்றில் மூன்று மாத இரட்டை குழந்தைகள் என்று மரண பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.


# புதிய அரசின் வரவு - செலவும் நம்பிக்கை இழக்கும் மக்களும்

**புதிய அரசு முன்வைத்துள்ள வரவு - செலவு அறிக்கையினை ஆதரிக்கவேண்டிய தேவை இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் சொல்லியுள்ளார். கடந்த காலங்களில் நாங்கள் வரவு - செலவு அறிக்கையினை எதிர்த்தோம். ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் நிதானமாகவும், பக்குவமாகவும், பாசமாகவும் நடந்து கொள்கின்றார்கள் என்பதனை சர்வதேசத்துக்குக் காட்ட வேண்டிய தேவை உள்ளது என்றும் சம்பந்தன் கூறியுள்ளார். யார் அந்த சர்வதேசம்?**

நல்லாட்சியரசு, தேசிய அரசு என்ற பெயர்களுடன் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் பின்புலி ஆதரவுடன் ஆட்சிப் பீடமேறிய புதிய அரசின் 2016ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்ட அறிவிப்புடன் நாறிப்போயுள்ளது.

எந்த ஒரு அரசும் செய்யாத அளவுக்கு நாங்கள் செய்துள்ளோம் என்று தம்பட்டமடித்து பெரும் எடுப்புடன் எல்லோரும் எதிர்பார்த்திருந்த வரவு - செலவு திட்டம் இன்று புஸ்வாணமாகி வரும் நிலையினை எட்டியுள்ளது.

நல்லாட்சி அரசினை ஆரம்பிப்போம் என்று ஆர்ப்பாட்டம்செய்து ஆதரவுதேடி அலைந்தவர்களே இன்று அந்த அரசின் வரவு - செலவுத் திட்டத்தினை கடுமையாக எதிர்த்துவருவதுடன், தொழிற்சங்கப் போராட்டம், கண்டனம், அதிருப்தி என்பனவற்றினை வெளிக்காட்டி வருகின்றனர்.



மகிந்தவையும், அவருடன் இணைந்து ஆட்சிபுரிந்தவர்களையும் குற்றவாளிக் கூண்டிலேற்றுவோம். இலஞ்சம், ஊழலை ஓரம் கட்டுவோம் என்று பேரம் பேசியவர்கள் மகிந்த அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்த புதிய ஆட்சியாளர்களின் பத்துமாத ஆட்சியுடன் மகிந்த அரசின் செயற்பாடுகளை மிஞ்சி விட்டதாக அரசியல் அவதானிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த அரசின் வரவு - செலவுத் திட்டமானது என்றுமே இல்லாத அளவுக்கு ஏழைகளின் வயிற்றிலே அடிக்கும் திட்டமாகியுள்ளது. மேற்தட்டு வர்க்கத்தினருக்கு துணைபோகும் முதலாளித்துவ அரசாகவே இன்றைய கூட்டரசாங்கம் அமைந்துள்ளது. அதனாலேயே வரவு - செலவுத் திட்ட வரைபுகளிலே மாற்றம்வேண்டும் என்று மக்கள் கொதித்தெழுகின்றனர்.

புதிய அரசின்பால் உள்ள குறை பாடுகளை நோக்கி கண்டனங்களும், தொழிற்சங்கப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுவருவது புதிய அரசின் ஆயுட்காலத்துக்கு ஆப்புவைக்கும் அத்திபாரமாகவே கருதவேண்டியுள்ளது.

மகிந்த எனும் மலையினை புரட்டு வதற்கு, அணிதிரண்டவர்கள், இன்று இவர்களுக்கு எதிராக முன்நிற்பது என்பது ஆரோக்கியமான செயற்பாடல்ல.

பதவிகளில் இருக்கக்கூடிய அரசுகள் செய்கின்ற பிழைகளே பெரும்பாலும் விமர்சனங்களாகி, ஆர்ப்பாட்டம், தொழிற்சங்கப் போராட்டமாகி கடைசி யிலே ஆட்சிக்கவிழ்ப்புவரை போய் விடுகின்றது.

அந்தவகையிலே கடந்த ஆட்சி குடும்ப ஆட்சி, வன்முறை ஆட்சி என்று எல்லோரும் எளிதாகச் சாட்டிய குற்றச்சாட்டுக்களே இறுதியில் ஆட்சி அதிகாரம் பறிபோனது.

அதே வழியில் இன்னும் மைத்திரி - ரணில் கூட்டரசின் குடும்பத்துக்கும் குழப்பங்கள் உண்டாக தொடங்கிவிட்டது. 2016ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவு திட்டமே புதிய அரசுக்கு ஆப்பாக அமையுமோ எனும் அச்சமும் பரவலாகக் காணப்படுகின்றன.

முக்கியமான பொருளாதார நெருக்கடி கள் மூடிமறைக்கப்பட்டு, மோசமான வரிச்சுமைகள்மூலம் மக்களை கடும் துன்பச்சுமைக்குள் தள்ளிவிட்டுள்ளது புதிய அரசு.

சம்பள உயர்வுகள் எதுவுமே வழங்கப்படாமல், ஊழியர்களின் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, ஓய்வூதியம் என்பனவற்றிலும் கை வைக்க நடவடிக்கைகள் தொடர்கின்றன.

அத்துடன் இம்முறை சீருடைக்கு பதிலாக பண வவுச்சர்கள் வழங்கப்பட்ட நடவடிக்கையும் மக்கள் மத்தியிலே கடும் அதிருப்திக்கு ஆளாகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சீருடை வழங்கலில் மோசடிகள் என்றால் அதனை செய்தது யார்? சத்தியமாக கல்விப்பணிப்பாளர்களோ, அதிபர்களோ, ஆசிரியர்களோ, ஏன் மாணவர்களோ செய்யவில்லை. மாறாக கல்வி அமைச்சின் அதிகாரிகளே மோசடிபுரிந்துள்ளனர். நாற்பது பேரினை தண்டிக்காமல் அவர்களைக் காப்பாற்றி, நாலு லட்சம் பேரினை தண்டிப்பது எந்த வகையிலே நியாயம் என்று எல்லோரும் கேள்வி கேட்கின்றனர்.

சில பல உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளோம் என்றபோதிலும் இன்னமும் அவ்விலை குறைப்பான கடைகளைச் சென்றடைய வில்லை. மாறாக அதிகரித்த வரிச் சுமையானது மக்களை பாரம் சுமக்கவைக்கும் செயற்பாடாகும்.

நான்கு சில்லு வாகனங்களுக்குரிய புகைப்பரிசோதனைக்கு (5000) ஐயாயிரம் ரூபா என்னும் அறிவிப்பினால் தனியார் உரிமையாளர்கள் போராட்டங்களில் குதித்துள்ளனர்.

தெற்கிலே பெரும்பான்மையின மக்கள் இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு பெரும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். இலங்கையின் பொருளாதார நிபுணர்களும் இது ஒரு வரவேற்கத்தக்க வரவு - செலவு அறிக்கை அல்ல எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த சில அம்சங்களை நீக்கிக் கொள்ளுமாறு மாண்புமிகு ஜனாதிபதி நிதி அமைச்சரைப் பணித்துள்ளார். வரவு - செலவுத் திட்ட வரைபுகளில் இதுவரை நடைமுறையில் இருந்து வந்த சில செயற்பாடுகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளநிலையில் பொது மக்களினை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடியதாக நடைமுறைகள், வரி விதிப்புக்கள் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு முழு இலங்கையர்களுமே ஒன்றுபட்டு எதிர்த்து தொழிற்சங்கங் களும் ஒன்றிணைந்து எதிர்த்துவருகின்ற வரவு - செலவுத் திட்ட அறிக்கையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள் மலையகக் கட்சிகள் என்றெல்லாம் கைகட்டி வாய்மூடி மௌனம் சாதிப்பது ஏன்?

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இது மிகவும் பாராட்டத்தக்க வரவு - செலவுத் திட்ட அறிக்கை என்றும் அரசினை புகழாரம் சூட்டி இருப்பது மட்டுமின்றி வாக்கெடுப்பின் போது அரசுக்கு ஆதரவாகவும் வாக்களித்துள்ளன. கூட்டமைப்பு அரசுபோடும் எலும்புத்துண்டுக்கு விலை போய்விட்டது என்பதுடன் டொலருக்கும், இந்திய ரூபாவுக்கும் அடிமைகளாகிவிட்டனர் என்பதனை இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள், மற்றும் மலையகக் கட்சிகளும் வாய்பேச முடியாதபடி அமைச்சுப் பதவிகளும் சலுகைகளும் வழங்கப்பட்டுவிட்டன. இதனால் இவர்களினால் பேசமுடியாது என்பது உண்மையே. ஆனாலும் இவர்களுக்கு வாக்குப்போட்டு அரசியல்வாதிகளாக்கிய பொதுமக்களுக்கு வரக்கூடிய பாதிப்புக்களை இவர்கள் உணர மறுத்தவை கவலைக்குரிய விடயம்.

புதிய அரசு முன்வைத்துள்ள வரவு - செலவு அறிக்கையினை ஆதரிக்கவேண்டிய தேவை இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் சொல்லியுள்ளார்.

கடந்த காலங்களில் நாங்கள் வரவு - செலவு அறிக்கையினை எதிர்த்தோம். ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் நிதானமாகவும், பக்குவ மாகவும், பாசமாகவும் நடந்து கொள்கின்றார்கள் என்பதனை சர்வதேசத்துக்குக் காட்டவேண்டிய தேவை உள்ளது என்றும் சம்பந்தன் கூறியுள்ளார். யார் அந்த சர்வதேசம்? அமெரிக்கா, இந்தியா. அதுதான் டொலரும் ரூபாயும். இவர்கள்தான் ஆயுதம்கொடுத்து தமிழ் மக்களுக்கான யுத்தத்தை நடாத்தினார்கள். சர்வதேச விசாரணைமூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயத்தைக்கூட இவர்களின் பின்புலமே தடுத்தது.

இந்த நிலையில் எந்தச் சர்வதேசத்துக்கு சம்பந்தன் காட்டப் போகின்றார். நீண்ட பயணமொன்றினை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும் நிலையில் அவசரப்பட்டு அரசுடனான தொடர்புகளை துண்டித்துவிடமுடியாது? என்றும் சம்பந்தன் சொல்லியுள்ளார். எலும்புத்துண்டுக்கு அடிமையானவர் களினால் ஒருபோதுமே மீண்டுவர முடியாது. இதேவேளை எதிர்வரும் 19ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. கூட்டமைப்பில் இணைந்துள்ள சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ் அணி எதிர்த்து வாக்களிக்கப்போவதாக சொல்லிவிட்டது. ரெலோ அணியும் சிறைக் கைதிகளின் விடயத்திலே நியாயமான தீர்ப்பு இல்லை என்றால் எதிர்த்து வாக்களிப்போம் என்றும் கூறியுள்ளன.

எனவே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டிய தேவை ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ரெலோ அணியினருக்கு உண்டானதை வரவேற்கவேண்டி யுள்ளதாகவும் பலரின் கருத்து அமைகின்றது.

அரசு ஒரு திட்டத்தினைக் கொண்டுவந்தால் அதை எதிர்ப்பது அல்லது நியாயத்தை எடுத்துச் சொல்வது எதிர்க்கட்சியே.

எதிரும் புதிருமாக இருந்தால் தான் அநியாயம் நியாயமாகும். மகிந்த அரசின் வரவு - செலவு அறிக்கை சபையிலே வாசிக்கும் போது பெரும் அமளிதுமளியினை ஐ.தே.க. செய்யும்; செய்தது. தான் எதிர்க்கட்சி என்பதனை நிலைநாட்ட நல்லதையும் கெட்டது என்று கடுமையாக எதிர்த்து எதிர்ப்பரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பினை அக்கட்சி ஆதரவாளர்கள் புரிந்துகொண்டனர். அதனால்தான் அவர்களினால் ஆட்சிப்பீடமேற முடிந்தது.

ஆனால் இப்போது இலங்கையிலே எதிர்க்கட்சி உள்ளதா? என்று ஒரு கேள்வி தானாகவே உருவாகியுள்ளது. குறைந்த உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி என்னும் பெயருடன் ரணில் விளங்கியது தன் அரசினை பாதுகாப்பதற்கே என்பது இப்போது தெளிவாகின்றது.

முதலாளித்துவ அரசானது ஏழை எளிய மக்களின் துயர் துடைக்க தவறியுள்ளது எனும் குற்றச்சாட்டு வெகுவாக எழுந்துள்ளநிலையில், இந்த அரசுக்கு எதிராகப் போராட்டம் செய்ய புறப்பட்டநிலையில் இன்னும் எத்தனை காலம் எனும் கேள்வி தானாகவே எழுகின்றது.

இரண்டு கட்சிகளும் கூடியிருந்து ஆட்சிசெய்வது என்பது இலகுவான விடயமல்ல. அமெரிக்காவும், இந்தியாவும் இப்போதைய அரசினை ஏற்கனவே விலைக்கு வாங்கிவிட்டனர். டொலரும், ரூபாக்களும் முதலீடுகளாகிவிட்டன. எனவே நாளை எது நடந்தாலும் இந்த வல்லரசுகளின் துணையின்றி நடைபெற முடியாது.

பழம் நழுவிப்பாலில் விழுமா? என்று மகிந்த தரப்பு ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்று பெயர் கொண்டழைக்கும் மகிந்த அணி காத்திருக்கின்றது.

புதிய அரசின் ஆயுட்காலம் வரவு - செலவுத்திட்டத்துடன் நிறைவடையுமா? என்றும் ஒரு ஊகம் நிலவுகின்றது.

எது எப்படியோ புதிய அரசின் வரவு - செலவுகளினால் நாடு உருப்படுமா? குட்டிச்சுவராகுமா?? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இந்த வரவு - செலவு அறிக்கை மக்களின் மனங்களை வெல்வதற்கு பதிலீடாக நம்பிக்கை இழக்கும் நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது.



# காதலோ! காதல்!

உயிரினத்தின் தோற்றத்தோடு ஒன்றி நிற்பது பிறப்பு. அந்தப் பிறப்பிலிருந்து பந்தமும் பாசமும் தோன்றுகின்றது. பிறந்தவுடனேயே நிச்சயமாக எதிர்பார்க்கப்படவேண்டியது இறப்பு. அதிலிருந்து சோகமும் துன்பமும் தோன்றுகின்றன. தவிர்க்கமுடியாத இவற்றின் காரணமாகப் பிறக்கும் அனுபவங்கள் நிலைபேறுடையவை. ஆனால் இந்தப் பிறப்புக்கும் முந்தியதாக ஓர் உறவும் அது படைக்கும் உணர்வும் உண்டு. அதுதான் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உள்ள கவர்ச்சி. அன்பு என்றுகூறினும், காதல் அன்று கூறினும், ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உள்ள ஈர்ப்பைத்தான் அவை குறிப்பிடுகின்றன. இந்தப் ஈர்ப்புத்தான் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே கணவன் - மனைவி என்ற உறவை உண்டாக்கி - மக்கட்பேறு என்ற செல்வத்தைப் படைக்கிறது. எனவே, இந்த ஈர்ப்புசக்தியும் அதன்காரணமாகப் பிறக்கும் உணர்ச்சிகளும் உயிரியற்கை யோடு ஒன்றியவையாக ஆகிவிடுகின்றன. இதன்காரணமாகத்தான் 'வர்ஜில்' "காதல் யாவற்றையும் வெற்றிகொள்கிறது; நாமும் அந்தக் காதலுக்கு ஆட்படுவோம்" என்று சொன்னார். இந்தக் காதலேதான் 'உலகை இயக்குவிக்கிறது' என்று வேறொருவர் சொன்னார். ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞரும், "நீரூற்றுகள் நதியோடு கலக்கின்றன; கவனத்தின் காற்றோ என்றும் இனியஉணர்ச்சியோடு கலந்துவிடுகின்றன. உலகில் எதுவும் தனித்துநிற்பதில்லை. தெய்வநியதிப்படி ஒன்று மற்றொன்றோடு இணைந்து விடுகின்றது. நான் ஏன் உன்னோடு இணைந்துவிடக்கூடாது?" என்று கேட்கிறார். கோல்ரிட்ஜ் என்பவரும், "இம்மனித வடிவினை ஆட்டிவைக்கிற எல்லா எண்ணங்களும் எல்லா உணர்ச்சிகளும் காதலின் செயலாற்றுப் பணியாளர்களே. அதனின் தூய்மையான ஆர்வக்கனல்களை ஊட்டி வளர்ப்பனவே" என்று கூறுகிறார். எனவே, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள இந்த ஈர்ப்பு உயிர் இனத்தின் ஆதிஉணர்ச்சிப் பிழம்பாகும். ஆகவேதான் அதைப் பற்றிப் பாடாத கவிஞனில்லை; எழுதாத ஆசிரியனில்லை. தமிழ் இலக்கியத்திலோ அகம், புறம் என்ற பிரிவினை மிகப் பழங்காலத்திலேயே உருவாகி, இத்தகைய உள்மனதின் உணர்வையும் அனுபவத்தை யும் எடுத்துப்பேசும் பகுதியை அகப் பொருள் என்றே அழைத்தார்கள். இத்துறையைச் சார்ந்த இலக்கியப் படைப்புகள் தமிழில் ஏராளமாக இருக்கின்றன.

இந்த ஈர்ப்பின் அழுத்தமும், ஆழமும் வலுவுமே பிரபஞ்சத்திற்கு அத்திவாரமும் ஆணிவேரும் ஆகும். இந்த ஈர்ப்பு சக்தி தொழில்படாதவிடத்து வளர்ச்சியோ, பெருக்கமோ இல்லை. ஆகவே இருப்பது மடிய, தொடர்ச்சி என்பதே இல்லாமல் போய்விடும் இந்த ஈர்ப்பு சக்தி உயிரினங்கள் அனைத்திலுமே இருப்பதைக் காண்கிறோம். மனிதர்களை வேண்டுமானால் அவர்கள் பிறரைப் பார்த்துத் தெரிந்துகொள்கிறார்கள், படித்து உணர்ந்துகொள்கிறார்கள் என்று சொல்லமுடியும். மிருகங்களை அப்படிச் சொல்வதற்கில்லையே! இந்த மிருகங்கள் மனிதர்களால் பிடித்து அடைத்து வைக்கப்பட்டிருக்கும் போதுகூட இந்த ஈர்ப்புச் சக்திக்கு ஆட்படுவதைக் காண்கிறோம். இனப்பெருக்கத்திற்காகவும் வர்க்கவிருத்திக்காகவும் இயற்கைசெய்யும் அற்புதமும் விசித்திரமும் இதுவாகும். மனிதர்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றினிடைய இடம்பெறவிருப்பதைப் போலத் தாவரங்களின் இடையேயும் இப்பால் வேறுபாடு இடம்பெற்றிருப்பதை யும், அதனுடைய பெருக்கத்திற்கு இயற்கையே வழிவகுத்திருப்பதாகவும் அறிந்துதான் இருக்கிறோம்.

இந்த உணர்ச்சிதான் எத்துணை வலிமைவாய்ந்தது! பெற்றோர்கள் தங்கள் ஒரே குழந்தையைச் சீரும் சிறப்புமாகத் தங்கள் அன்பையும் ஆசையையும் அதன் மீது கொட்டிவளர்க்கிறார்கள். அந்தக் குழந்தையை அவர்களுக்கு எல்லாமாக ஆகிவிடுகிறது. அதனுடைய இன்பமே அவர்களுடைய நரகவேதனை. அவ்வளவு அன்புடனும் பாசத்துடனும் வளர்க்கப்படும் குழந்தை எப்பொழுதுமே தங்களுடன் இருந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. தக்க பருவம் எய்தியவுடன் அது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் திருமணம் செய்துகொண்டு தனியாக இல்லறம் நடத்தும், நடத்தவேண்டும் என்பது அவர்கள் அறிந்ததே. உண்மையில் தங்கள் குழந்தை, நல்ல கணவனையோ, நல்ல மனைவியையோ அடைந்து மக்கட்பேற்றைப் பெற்று ஆனந்தமாக வாழ்வதே அவர்களுடைய வாழ்க்கையின் இலட்சியம். அந்த வாழ்க்கை இலட்சியத்தை அடைவதில் ஒரு வினோதம் இருக்கிறது. எந்தக் குழந்தையை தங்கள் அன்பை யெல்லாம் கொட்டி வளர்த்தார்களோ அந்தக் குழந்தை தங்களைவிட்டு பிரிந்துவிடப் போகிறது; தங்கள் பெற்றோரைவிட்டுப் பிரிந்து தங்கள் இருவரும் கணவனும் மனைவியுமாகி, புதியதொரு குடும்பத்திற்கு எப்படித் தலைவனும் தலைவியும் ஆனார்களோ அப்படியே தங்களுடைய குழந்தையும் ஆகும் என்பது அவர் களுக்குத் தெரியும். எப்படித் தங்கள் குழந்தை தங்களுக்கு எல்லாமாகவும் இருக்கிறதோ அப்படியே தங்கள் குழந்தைக்கும் அது ஒரு தாயாகவோ, தந்தையாகவோ ஆகுமிடத்து அதன் குழந்தை ஆகும் என்பதும், அதன் காரணமாக தங்களிடத்தில் தங்கள் குழந்தைக்கு இருக்கும் பிடிப்பு ஓரளவுக்கு விட்டுப்போகும் என்பதும் தெரியும். இருந்தாலும் குழந்தையிடம் அவர்கள் காட்டும் அன்பும், ஆதரவும், பரிவும் பாசமும் சற்றும் குறைவதில்லை. தன்னைப்பெற்று வளர்த்து பெற்றோரை விட்டு? முன்பின் தெரியாத ஒருத்தியையோ, ஒருவனையோ - மனைவியாகவோ கணவனாகவோ கொண்ட உடனேயே தன்னுடைய அன்பு முழுவதுக்கும் நிலைக்களனாக அமைந்துவிடுவது - அந்த ஒருத்தியோ, ஒருவனோ என்று ஆகிவிடுகிற இயற்கை செய்கிற விசித்திரமே விசித்திரம். திடீரென்று சந்தித்த இருவரிடையே இத்தகைய பிடிப்பு உண்டாவதற்குக் காரணம் கணவன் - மனைவி என்ற உறவின் உணர்ச்சியே ஆகும். ஆகையால் தான் விவிலியம்கூட "ஒரு மனிதன் தன் தந்தையையும் தாயையும்விட்டு விலகி, மனைவியோடு ஒன்று, அவர்கள் ஒரே உடலாகிவிடுகின்றனர்" என்று கூறும்.

முன்பின் உறவில்லாத இருவருக்கிடையே உண்டாகின்ற இந்த உறவும், அன்பும், பிடிப்பும் எத்தகையன என்பதை 'குறுந்தொகை என்னும் தமிழ் நூல் வேறுவிதமாக எடுத்துக்காட்டும்'. 'தெய்வத்தால் ஆகிய உறவு' என்ற அடிப்படையில் அதன் கூற்று ஒன்று அமைந்திருக்கிறது. தன்னைவிட்டுத் தலைவன் பிரிந்துவிடுவானோ என்ற ஐயம் தலைவிக்கு உண்டாகிறது. இதனைக் குறிப்பால் அறிந்த தலைவன் அப்படிப் பிரிவு ஏற்படாது என்பதை உணர்த்தி அதற்குக் காரணமும் காட்டுகிறான். எவ்வித உறவோ, தொடர்போ இல்லாத நாம் ஒன்றுபட்டது தெய்வத்தால் - ஊழினால். ஆகவே, நம்மிடையே பிரிவு ஏற்படாது என்று அவன் கூறுகிறான்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைக்கேளீர்!
யானு நீயூ மெவ்வழி யறிவதும்;
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சத் தாங்கலந்தனவே"

என்பது, இந்தக் கூற்றை உணர்த்தும் பாட்டு.

என் தாயும் தந்தையும் அவர்கள் ஒருவரோடொருவர் ஒன்றுபடுவதற்குமுன் உறவினரல்லர். அப்படியே உன் தாயும் தந்தையும் அவர்கள் அன்புடை நெஞ்சம் கலந்த பிறகு பிரியாத காதல் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் பொழுது.

அப்படியே முன்பின் அறியாத நாம் இருவரும் கூடிவிட்ட பிறகு பிரிந்து விடுவோம் என அஞ்சுவதற்கு இடம் ஏது? என்று தலைவன் - தலைவியைக் கேட்பதாக இப்பாடலுக்குப் பொருள் காணலாம். இப்பாடலில் இன்னொரு சிறப்பையும் காணலாம். அதாவது இருவருடைய அன்புடை நெஞ்சம்கலக்கும் தன்மையை ஓர் உவமையின்மூலம் எடுத்துக்காட்டும் அருமை. செம்மண்ணில் பெய்த நீரானது அம்மண்ணோடு கலந்து அதன் நிறத்தையும் சுவையையும் பெற்ற ஒன்றுபடுவதுபோல், தம்நெஞ்சங்களும் ஒன்றோடொன்று கலந்து தன்மைகள் ஒன்றுபட்டன என்று தலைவன் கூறுகிறான். நீர் செம்மண்ணோடு கலந்து அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று ஒன்றுபட்ட பிறகு, எப்படி அந்த நீரை அந்தச் செம்மண்ணின் நிறத்திலிருந்தும் சுவையிலிருந்தும் தனியாகப் பிரிக்க முடியாதோ, அப்படியே கலந்துவிட்ட அன்புடை நெஞ்சங்கள் பிரிக்கக் கூடியன அல்ல என்று வலியுறுத்துவதன் மூலம். நம்மிடையே இனி பிரிவு ஏற்படுவதற்கில்லை என்பதைத் தலைவன் தலைவிக்கு உணர்த்திவிடுகிறான். இந்த ஈர்ப்புச்சக்தியின் பயனாக ஆணுக்கும்

**- காத்தார் -**

பெண்ணுக்குமிடையே உண்டாகும் உறவின் நெருக்கத்தையும், ஒருவரிடையே மற்றொருவர் காட்டும் இயக்கத்தின் அழுத்தத்தையும், வழக்கம்போல கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் தமக்கே உரிய எளிய இனிய சொற் களால் உவமையாகவும் உருவகமாகவும் பாடிக்கொண்டே போவார்.

"பாயு மொளி நீ யெனக்கு,
பார்க்கும் விழி நானுனக்கு;
தோயுமது நீயெனக்கு,
தும்பியடி நானுனக்கு,
வீணையடி நீ யெனக்கு,
மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீயெனக்கு,
புது வயிரம் நானுனக்கு,
வானமழை நீ யெனக்கு
வண்ணமயில் நானுனக்கு;
பானமடி நீ யெனக்கு,
பாண்டமடி நீ நானுனக்கு
வெண்ணிலவு நீ யெனக்கு,
மேவு கடல் நானுனக்கு;
பண்ணுசுதி நீயெனக்கு,
பாட்டினிமை நானுனக்கு,
நல்லவுயிர் நீயெனக்கு,
நாடியடி நானுனக்கு;
செல்வமடி நீயெனக்கு,
சேமநிதி நானுனக்கு,"



(தொடரும்)

## வாரமொரு வாழ்வியற் சிந்தனை



# வாழ்வில் வெற்றி பெற தன்னம்பிக்கை வேண்டும்

ஆர்.கே.மேனன்

**வா**ழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் கடுமையாக உழைக்கவேண்டும் என்பது பலருக்கும் தெரிந்த, பலரும் சொல்லக்கூடிய ஒரு விடயம். ஆனால் அந்த உழைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை பலரும் யோசிக்க மறந்துவிடுகிறார்கள்.

திட்டமிடாத கடின உழைப்பு என்பதில் பலன் மிகவும் குறை வாகவே கிடைக்கும். ஆனால், காலமும், உடல் உழைப்பும் மிக அதிகம் செலவிடப்பட்டிருக்கும். எனவே, எந்த விடயத்திலும், சாமர்த்தியமாக திட்டமிட்டு உழைத்தால்தான், முழுமை யான வெற்றி கிடைக்கும். அதற்கான சில ஆலோசனைகளைப் பற்றி இங்கே அலசுவோம்.

### நோக்கத்தைப் பற்றி தெளிவான புரிதல்

ஒருவருக்கு தனது இலக்கைப் பற்றிய தெளிவான புரிதல் வேண்டும். பலர், தான் எதற்காக உழைக்கிறோம் என்பது தெரியாமலேயே, தேவையின்றி கடினமாக உழைத்து, தங்களின் ஆற்றலையும், நேரத்தையும் வீணாக்கி விடுகிறார்கள். எனவே, இந்த விரயத்தை தவிர்க்க, நோக்கத்தை தெளிவாக புரிந்து செயற்படவேண்டும்.

### எதற்கு முக்கியத்துவம்?

ஒரு காரியத்தை மேற்கொள்கையில், முதலில் எதை செய்தால் வேலை விரைவாக முடியும் மற்றும் பலன் அதிகமாகக் கிடைக்கும் என்பதை தெளிவாக திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். தோல்விகளை சுமந்து வேதனையின் விளிம்பில் இருக்கும் எல்லா இளைஞர்களையும் நாம் முயற்சியற்றவர்கள் என்று கூறிவிட முடியாது. தமது திட்டமிடலில் எது சாதகமான வழி எதற்கு முக்கியத்துவம் கொடுத்தால் வெற்றி அதிகம் கிடைக்கும் என்பதில் தெளிவற்றவர்களே அதிக தோல்வியை சம்பாதிக்கின்றனர். வெளியீட்டு அம்சங்களை அலசி ஆராயாத உழைப்பும் என்றுமே வெற்றியைத் தேடித்தராது. இன்றுள்ள பல இளைஞர்கள் ரய் கட்டி சப்பாத்துப் போட்டு செய்யும் தொழிலையே பெரும்பாலும் விரும்புகின்றனர். இதனால் போலி கௌரவங்களிற்குள் அகப்பட்டு தமது எதிர்கால இலக்கைச் சிந்திக்கமறுக்கின்றனர்.

ஒரு இலட்சியத்திற்காக உழைக்கையில், எந்த காரியத்தை முதலில் செய்தால், விரைவாகவும், எளிதாகவும் வேலைமுடியும் என்பதை யோசித்து செயற்படவேண்டும். அதை விட்டுவிட்டு, கடைசியில் செய்யவேண்டிய ஒரு எளிமையான அம்சத்திற்கு, ஆரம்பத்திலேயே அதிக முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது.

### குழப்பிக் கொள்ளாதீர்!

உங்களின் இலட்சியத்தை அடையும் முயற்சியில், வேலைகளை பிரித்து செய்யும் கலையை கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வேலையை, ஒரேநேரத்தில் கவனம் செலுத்தி விரைவாக முடிக்கவேண்டும். அதைவிடுத்து, பல வேலைகளை ஒரேநேரத்தில் சேர்த்து வைத்துக் கொண்டு, குழப்பிக்கொண்டு, நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கக்கூடாது.

### அனைத்தும் தயாராக இருத்தல்

ஒரு வேலையை துவங்கும்போது, அதற்கு தேவையான உதவி உபகர ணங்கள் அனைத்தையும் முதலிலேயே தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், ஒரு வேலை யானது தொடங்கப்பட்டுவிட்டால், விரைவாகச் சென்றுகொண்டே இருக்கவேண்டும். தேவையான உபகரணங்கள் அனைத்தும் இருந்தால்தான் தடையின்றி செல்ல முடியும். வேலையின்போது, தேவையானவற்றை அங்குமிங்கும் தேடினால், மனஉளைச்சல் ஏற்படுவதுடன், பல்வேறான தீங்குகள் ஏற்படும். சரியான சூழல் முக்கியமான ஒரு வேலையை தொடங்கும் முன்பாக, அதற்கான புறச்சூழலை சரியாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

தொந்தரவற்ற, தேவையானால் அமைதியான, நிம்மதியான சூழலை அமைத்துக்கொண்டால், உங்களின் வேலை விரைவாக, வெற்றிகரமாக முடிவதை உறுதிசெய்யலாம்.

### உதவி கேட்கலாமா?

பொதுவாக, ஒருவர் தனது வேலையை பிறரின் உதவியின்றி, யாரையும் தொந்தரவு செய்ய விரும்பாமல் தானே செய்து முடிக்க வேண்டும் என்று இயல்பாக நினைப்பார். அது ஒரு நல்ல கொள்கையும்கூட. ஆனால் சில சமயங்களில் பிறரின் உதவியை கேட்டே ஆகவேண்டிய நிலை ஏற்படும். அந்த நேரத்தில், பிடிவாதம், வரட்டு கௌரவம் பார்க்காமல் பிறரிடம் உதவி கேட்பதில் தவறில்லை. இதன்மூலம், உங்களின் இலட்சியம் எளிதாக அடையப்படலாம்.

### ஒதுக்கி விடவும்...

வாழ்க்கையில் தெளிவான இலக்கின்றி நாம் இருக்கையில், எது முக்கியம், எது முக்கியமற்றது என்பது நமக்குப் புரியாது. எனவே, எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செயல்படுவோமானால் ஒரு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயித்துப் பின்பாக, தேவையற்றதை ஒதுக்குவதற்கு தயங்கக்கூடாது.

### மதிப்பாய்வு செய்க!

ஒரு நீண்ட செயற்பாட்டில் நீங்கள் ஈடுபடுகையில், அதன் தொடர் விளைவுகளை மதிப்பாய்வு செய்தல் அவசியம். எந்த செயல் அதிக பலனைத் தந்தது, எந்த செயல் நேரத்தை வீணடித்தது என்பதை மதிப்பிடுவது மிகவும் அவசியம் மற்றும் நல்லது. இதன்மூலம் தேவையற்றதை ஒதுக்கி, நமது பணியை விரைந்து முடிக்கலாம்.

### முடிவே முக்கியம்

வெறுமனே ஒரு செயலை செய்கிறோம் என்றில்லாமல், எதை செய்கிறோம் என்ற தெளிவுவேண்டும். ஒரு செயலை செய்வதற்கு ஆகும். நேரத்தைவிட, அதனால் கிடைக்கும் நன்மைதான் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

---

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 656

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | ■ |
| 19 | 20 | 21 | 22 | ■ | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| 31 | 32 | 33 | ■ | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 654 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ம | 3 த் | 4 து | 5 வ | 6 ம் |
| 7 கு | ■ | 9 தா | ■ | 11 ச் | ■ |
| 13 ந் | 14 பு | 15 தி | ■ | 17 சி | 18 லி |
| 19 த | 20 மு | ■ | 22 கி | 23 ர | 24 கி |
| 25 லை | 26 ம | ■ | 28 பி | 29 ம் | 30 த |
| ■ | 32 ண் | ■ | 34 ர் | ■ | 36 ம் |

### மேலிருந்து கீழ்

01. மரியாதையுள்ளவன்.
02. சுயம்வரம் என்பதை இப்படியும் சொல்லலாம்.(குழம்பியுள்ளது)
03. சிறுவர்கள் ஆசையாக வாசித்த சஞ்சிகை ஒன்று.(குழம்பியுள்ளது)
10. அரணிருக்கை. சிறுமை.
29. உருசியின்மையைக் குறிக்கும். (குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

01. "பலமே பண்பாகும். பலவீனமே....." (இது விவேகானந்தர் கூற்று)
7. தரிக்கும். அடங்கும். (குழம்பியுள்ளது)
12. அரசன். மாதா.
13. ஓர் இழப்பின் இடர்பாட்டில் இருந்து விடுபடுவதற்காக வழங்கப்படும் தொகை.
19. தமயந்தி நளனை மணப்பதற்குரிய சூத்திரதாரி. (குழம்பியுள்ளது)
24. ஒரு பெண்பால் விகுதி. இகழ்ச்சிக் குறிப்பு.
25. வேங்கை. (குழம்பியுள்ளது)
31. புன்செக்கல். மாலைப்பொழுது. (கடைசி எழுத்து விடுபட்டு குழம்பியுள்ளது)
35. ஆறு. பகம். ஆறு ஒன்றுகள்.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 05.01.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 656
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.654 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கா.நிலாமதி, பேராதனை, கண்டி.
02. வ.சிந்துஜன், சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
03. ஆர்.பர்சான், கண்டி வீதி, சாவகச்சேரி.
04. எம்.எம்.மஸ்னவி, பிரதான வீதி, மட்டக்களப்பு.
05. பா.ஐஸ்வர்யா, ஹெட்பானா, விசுவமடு.
06. சு.நிதர்சன், மகாறம்பைக்குளம், வவுனியா.
07. த.கவிப்பிரியா, வரணி இயற்றாலை, வரணி.
08. ற.நித்தியா, கைவேலி, புதுக்குடியிருப்பு.
09. இ.நேசன், பிரதான வீதி, நெல்லியடி.
10. ஆ.விதுரசன், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## பீப் பாடல் குறித்து தாமரை...

என்னை அறிந்தால், நானும் ரவுடிதான் போன்ற பல படங்களில் அற்புதமான பாடல்களை கொடுத்தவர் தாமரை. இவர் சமீபத்தில் பீப் சாங் குறித்து தன் முகநூலில் சில கருத்துக்களை கூறியுள்ளார்.

இதில் இவர் கடந்த 4 நாட்களாக பலரும் என்னிடம் பீப் சாங் கேட்டீர்களா என்று கேட்டனர். நானும் ஒரு வழியாக கேட்டேன். இத்தனை வருடங்களால் எத்தனையோ நல்ல கவிஞர்கள் இருந்தனர். அவர்களை பார்த்து எத்தனை பேர் பாடல் எழுதவேண்டும் என்று ஓடிவந்தார்கள். இதற்கு முன்பு இதுபோன்ற பாடல்களை தொடர்ந்து கைதட்டி ரசித்தால்தான் தற்போது இந்த பாடலில் வந்துநின்றுள்ளது.


இதைத்தான் நான் கிட்டத்தட்ட 20 வருடங்களாக கூறிவருகிறேன். மாற்றம் முதலில் நம்மிடையே தேவை, நான் மட்டும் இதைகூறினால் போதாது, அனைவரும் இதை எதிர்த்து போராடவேண்டும் எனக் கோபமாக கூறியுள்ளார்.


கோடைமழை

## நடிகைகள் உறவு எதுவரை? மகேஸ் பா

தெலுங்கு சூப்பர் ஸ்டார் மகேஷ்பாபுவுக்கு பெண் ரசிகைகள் தெ
தமிழிலும்கூட அதிகம். அவர், பெரிய ஹீரோ தான் என்றாலும் நா
பிரச்னைகள், அல்லது சினிமா உலகில் நடக்கும் சர்ச்சைகள் எ
கருத்தும் அவ்வளவு சுலபமாகச் சொல்லிவிடமாட்டார். இந்நிலை
என்றால் எப்படி இருக்கவேண்டும் என கருத்து கூறியது பெண்
இன்னும் மகேஷ் பாபுவுக்கான ரசிகர்களை அதிகப்படுத்தும்
இல்லை என்றே கூறவேண்டும்.

அவர் கூறுகையில், ஒரு கணவன் என்பவன் முதலில்
பொறுப்பாளனாக இருக்கவேண்டும். தன் மனைவிக்குப்
செயல்படாத மனிதன் எப்பேர்ப்பட்டவனாக இருந்தாலும்
தான். நான் சென்னையில் படிக்கும்போது நான் பெ
என்று யாருக்கும் தெரியாது. என் நண்பர்கள், ஆ
நான் இன்னார் மகன் எனத்தெரியாது. ஆனால் எ
குடும்பத்துக்கு அவ்வளவு பொறுப்பாக நடந்துகெ
அப்பாவிடம் படித்த பாடமே இந்த குடும்ப ஈடு
பெரிய நடிகரானால் கண்டிப்பாக கிசுகிசுக்
சாதாரணம். ஆனால் நாமும் சிலநேரங்களில்
பொறுப்பாகிறோம். என்னைப் பொறுத்தவ
நடிக்கும் நடிகைகளுக்குமான பந்தம் ஷ
படப்பிடிப்பு முடிந்துவிட்டால் நடிகைகள்
கூட நான் எடுக்கமாட்டேன். ஏனெனில்
கிசுகிசுக்கள்
சரி முக்கி
யாலும் எ
மேலு
இந்தக்
கொள்
அவருக
கூறியு
நடிகர்க


என்ன சுகம் அம்மா...
என்ன சுகம்...


பூலோகம

## தங்கமகன் வி



## ...மகேஸ் பாபு விளக்கம்

... ரசிகைகள் தெலுங்கில் மட்டுமல்ல ...ன் என்றாலும் நாட்டில் நடக்கும், ...ம் சர்ச்சைகள் என எதற்கும் எந்தக் ...ட்டார். இந்நிலையில் கணவன் ... கூறியது பெண்கள் மத்தியில் ...அதிகப்படுத்தும் என்பதில் சந்தேகம்

...பவன் முதலில் அவன் மனைவிக்கு ... மனைவிக்குப் பொறுப்பாகச் ...ாக இருந்தாலும் அவன் முட்டாள் ...போது நான் பெரிய ஸ்டாரின் மகன் ... நண்பர்கள், ஆசிரியர்களுக்குக்கூட. ...து. ஆனால் என் அப்பா எங்கள் ...ப்பாக நடந்துகொண்டார். என் ...ந்த குடும்ப ஈடுபாடு.

...ப்பாக கிசுகிசுக்கள் வருவது ... சிலநேரங்களில் அதற்கு ...ப் பொறுத்தவரை எனக்கும் என்னுடன் ...ான பந்தம் ஷூட்டிங்குடன் முடிந்தது. ...ால் நடிகைகள் போன் கோல்களைக் ...டன். ஏனெனில் என்னைக் குறித்து கிசுகிசுக்கள் வருவதை என்னாலும் ...சரி முக்கியமாக என் மனைவி யாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் ஒரு மனைவியாக இந்தக் கிசுகிசுக்களை ஏற்றுக் கொள்ளும் தேவையும் அவருக்கு இல்லை எனக் கூறியுள்ளார். இதனால் பல நடிகர்கள் மகேஷ் பாபு குறித்து ஆச்சர்யத்தில் ஆழ்ந்துள்ளனர்.





## முதுமையை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்கிறேன்: ஏஞ்சலினா

பிரபல ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினாஜோலி, தான் முதியவராகிக் கொண்டிருப்பது தனக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகக் கூறியுள்ளார். மேலும் இவ்வருட தொடக்கத்தில் கருப்பை மற்றும் கருமுட்டை குழாய்கள் அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஏஞ்சலினா, தன்னுடைய மாதவிடாய் காலங்களை தான் மகிழ்ச்சியாகக் கடந்ததாகவும், அது ஒரு பயங்கர நிகழ்வாக நான் ஒரு போதும் கருதியதில்லை, தான் ஒரு அதிர்ஷ்டசாலி என்றும் கூறியுள்ளார்.

40 வயது நிறைந்த ஜோலி முன்னதாக தனது பிறந்தநாளில் கூறியபோது, தனது குடும்பத்துப் பெண்கள் யாரும் இத்தனை வயதுவரை உயிருடன் இருந்ததில்லை. 40 வயதிற்கு முன்னதாகவே இறந்துபோன நிலையில், தான் மட்டும் இந்த வயதை எட்டி இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்றும் கூறியுள்ளார். பொதுவாகவே பெண்கள் வயது கூடுகிறது என்றால் தனது இளமையும், அழகும்போகிறதே என்று வருத்தப்படுவதுண்டு, அதிலும் நடிகைகளுக்கு இளமை இருக்கும்வரைதான் வாய்ப்பு.

அநேக நடிகைகள் தங்களது வயதினை மறைக்க முயலுகின்றபோது ஏஞ்சலினா இப்படி கூறியிருப்பது அனைவரிடத்திலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது, மேலும் தனது மாதவிடாய் பற்றி அவர் கூறியிருப்பதும் தனது கர்ப்பப்பையை நீக்கியமை குறித்தும் அவர் அறிவித்துள்ளது அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்றாலும் பெண்களிடையே அது மனத்தைரியத்தை வரவழைக்கும் விஷயமாக உள்ளது.

## சலங்கை ஒலிபோல் படம் இயக்க ஆசை – பிரபுதேவா

லஷ்மன் ஸ்ருதி நடத்தும் சென்னையில் திருவையாறு இசை நிகழ்ச்சி சென்னையில் தொடங்கியது. 11ஆவது ஆண்டாக நடைபெறும் இந்த இசை நிகழ்ச்சியை நடிகரும், நடன இயக்குனருமான பிரபுதேவாவும், பாடகி சுசீலாவும் தொடங்கிவைத்தார்கள்.

தொடக்க விழாவில் பிரபுதேவா பேசும்போது, "நான் என்னை ஏன் அழைக்கிறீர்கள் என்று லஷ்மன் ஸ்ருதியிடம் கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் ஒரு பரதநாட்டிய கலைஞர் என்று கூறினார். நானே அதை மறந்துவிட்டேன். எனக்கு ஞாபகப்படுத்தியதற்கு லஷ்மன் ஸ்ருதிக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது உள்ள நடனமுறைகளை வைத்தே படம் இயக்கி வருகிறேன். எனக்கும் சலங்கை ஒலி, சங்கராபரணம் படங்களைப்போல் படம் இயக்கவேண்டும் என்று ஆசை இருக்கிறது. விரைவில் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவேன். மேலும் இந்த இசை நிகழ்ச்சிமூலம் சென்னையில் பெய்த கனமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் நிவாரண தொகைகள் வழங்க இருக்கிறார்கள். சந்தோஷமாக இருக்கிறது என்றார்.

## ஆசியாவில் பின்தொடரப்படும் பெண்கள் யார்?

ஆசியாவில் டுவிட்டரில் அதிகப்படியான நபர்களால் பின்தொடரப்படும் பெண்களின் பட்டியலில் நடிகை தீபகா படுகோனேக்கு 2ஆவது இடம் கிடைத்திருக்கிறது.

ஆசியாவில் டுவிட்டரில் அதிகப்படியான நபர்களால் பின்பற்றப்படும் முதல் பெண்மணி என்ற பெருமையை இந்தோனேஷியா நாட்டின் பாடகியும், நடிகையுமான ஆக்னஸ் மோ பெற்றுள்ளார். 1 கோடியே 45 இலட்சம் பேர் அவரை பின்தொடர்கின்றனர்.

அவருக்கு அடுத்தபடியாக நடிகை தீபிகா படுகோனே, 1 கோடியே 25 இலட்சம் ரசிகர்களுடன் இரண்டாவது இடத்திலும், நடிகை பிரியங்கா சோப்ரா 1 கோடியே 20 லட்சம் ரசிகர்களுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர். இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள அவர் இதுபற்றி டுவிட்டரில், நீங்கள் எல்லாரும் தான் என்னுடைய பலம். உங்கள் அனைவருக்கும் நன்றி என்று குறிப்பிட்டிருக்கிறார்.

...லோகம்



எனக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது

## ...ன் விமர்சனம்



**நடிகர் : தனுஷ், நடிகை : சமந்தா, இயக்குனர் : வேல்ராஜ், இசை : அனிருத், ஒளிப்பதிவு : குமரன்**

தனுஷ், அவரது நண்பர் சதீஷ் மற்றும் உறவுக்காரப் பையன் அரவிந்த் மூவரும் நண்பர்களாக இருந்து வருகிறார்கள். தனுஷின் அப்பா கே.எஸ்.ரவிக்குமார் வருமானவரித் துறை அலுவலகத்தில் கணக்கு எழுது பவராக பணிபுரிந்துவருகிறார். ரவிக்குமாரின் மனைவி ராதிகா குடும்பத் தலைவி. நடுத்தர குடும்பம்தான், என்றாலும் இவர்களது குடும்பத்தில் சந்தோஷத்துக்கு குறைவில்லை.

இந்நிலையில், ஒருநாள் நாயகி எமி ஜாக்சனை ஒரு கோவிலில் பார்க்கிறார் தனுஷ். பார்த்ததும் அவர்மீது காதல் துளிர்விட, தொடர்ந்து எமியையே சுற்றிவந்து, தனது காதலை வெளிப்படுத்துகிறார், தனுஷ். ஒருகட்டத்தில் எமிஜாக்சனும் தனுஷை காதலிக்கத்தொடங்குகிறார். இருவரும் காதலர்களாக மாறுகிறார்கள். அதேநேரத்தில், சதீஷும் எமி ஜாக்சனுடன் எப்போதும் கூடவே வரும் அவரது தோழியை காதலிக்கிறார்.

தனுஷும், சதீஷும் காதல் வலையில் சிக்கி, தங்களது காதலிகளுடன் ஊர்சுற்ற, அரவிந்துக்கு இதுபற்றி எதுவுமே இவர்கள் தெரிவிப்பதில்லை. இதனால், அரவிந்தனுடனான இவர்களுடைய நட்பில் விரிசல் ஏற்படுகிறது.

ஒருகட்டத்தில், இவர்கள் காதல் செய்யும் விஷயம் அரவிந்துக்கு தெரியவர, தன்னிடம் இதைப்பற்றி தெரிவிக்காத நண்பர்களிடம் கோபித்துக்கொண்டு அவர்களிடமிருந்து நிரந்தரமாக பிரிகிறான். பின்னர், ஒருநாள் எமி ஜாக்சன், தன்னுடைய கனவு இல்லம் பற்றி தனுஷிடம்கூறி, திருமணத்திற்கு பிறகு இருவரும் தனியாக அந்த வீட்டில்தான் வசிக்கவேண்டும் என்று கூறுகிறார். ஆனால், அப்பா, அம்மாமீது அதிக பாசம்கொண்ட தனுஷோ, பெற்றோரைவிட்டு தனியாக வரமுடியாது என்று கூறுகிறார். இதனால், இவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பிரிந்துப் போகிறார்கள்.

இதையடுத்து, தனுஷ் படித்து முடித்துவிட்டு அப்பா வேலைசெய்யும் வருமான வரித்துறை அலுவலகத்திலேயே வேலைக்கு சேர்கிறார். அதன்பின்னர், சமந்தாவை தனுஷுக்கு பெற்றோர்கள் திருமணம் செய்துவைக்கிறார்கள். இருவருடைய திருமண வாழ்க்கையும் நன்றாக சென்று கொண்டிருக்கும்நிலையில், கே.எஸ்.ரவிக்குமாருக்கு அவரது உயரதிகாரி ஜெயப்பிரகாஷ் மூலமாக பிரச்சினைவருகிறது.

கே.எஸ்.ரவிக்குமார்மீது திருட்டுப் பட்டம் கட்டி அவரை அவமானப்படுத்துகிறார் ஜெயப்பிரகாஷ். இந்த அவமானத்தை தாங்முடியாத கே.எஸ். ரவிக்குமார் தூக்குப்போட்டு தற்கொலைசெய்து கொள்கிறார். இதையடுத்து, தனுஷின் வேலையும் பறிபோகிறது.

அதன்பின்னர், தனுஷின் குடும்பமே நிலை குலைந்துபோகிறது. தங்குவதற்குகூட வீடு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். குடும்பத்தை காப்பாற்ற தனுஷும் கிடைத்த சின்ன, சின்ன வேலைகளை நிரந்தரமில்லாமல் செய்துவருகிறார்.

இந்நிலையில், சமந்தா கர்ப்பமடைகிறார். சந்தோஷப்படவேண்டிய இந்நேரத்தில் தனது குடும்பத்தின் நிலையை அறிந்து, மிகவும் வேதனையடைகிறார் தனுஷ். இறுதியில், தனது அப்பாமீதுள்ள திருட்டுப்பட்டத்தை தனுஷ் எப்படி நீக்கினார்? தன்னுடைய குடும்பத்தை எப்படி மேலே கொண்டுவந்தார்? என்பதே படத்தின் மீதிக்கதை.

எமி ஜாக்சன் தனது முந்தைய படங்களைவிட இந்தப் படத்தில் இன்னும் கொஞ்சம் அழகாகத் தெரிகிறார். காதல் காட்சிகளில் தனுஷுடன் சேர்ந்து இவர் செய்யும் ரொமான்ஸ் விஷயங்கள் ரொம்பவும் ரசிக்க வைக்கிறது.

பணம் மட்டுமே வாழ்க்கையில் முக்கியமல்ல, பாசமும் தன்மானமும் ஒரு வாழ்க்கைக்கு அடிப்படை முக்கியம் என்பதை இப்படத்தில் தோலுரித்துக் காட்டி இருக்கிறார். அதே போல், அப்பாமீதுள்ள களங்கத்தை போக்க நினைக்கும் ஒரு மகனின் வேதனையை அழகாக சொல்லி இருக்கிறார். சினிமாத்தனம் இல்லாமல் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் ரொம்பவும் எதார்த்தமாக பதிவு செய்திருக்கிறார். அதேநேரத்தில், இப்படி ஒரு குடும்பம் நமக்கும் வேண்டும் என்ற ஆசையையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

மொத்தத்தில் தங்கமகன் ஜொலிக்கிறான்.






# கிராமங்களை நோக்கி...

ஆற்றிலே தொலைத்துவிட்ட எமது அரசியல் உரிமைகளை திட்டமிட்ட வகையில் தமிழ் மக்களை ஏமாற்றும் நோக்கத்துடன் குளத்திலே தேடிக்கொண்டிருக்கும் தமிழர்சார் அரசியலில் உடனடியான ஒரு மாற்றத்தை நாம் கொண்டுவர வேண்டுமெனில்... "ஆண்ட இனம் மீண்டும் ஆழநினைப்பதில் தவறு என்ன?" என்ற தமிழ் இனவாதக் கேள்வியுடன் கடந்த 70 வருடங்களிற்கும் மேலாக எமது நிலப்பிரபுத்துவ தமிழ் தலைமையால் மேற்கொள்ளப்பட்டுவரும் எமது அரசியல் பயணம் பற்றிய ஓர் மீள் வாசிப்பு மிகமிக அவசியமானதென்றே நான் கருதுகிறேன். அந்த மீள் வாசிப்பானது... உலகஅரங்கிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற, நடைபெற்று முடிந்த விடுதலைப் போராட்ட அனுபவங்களையும் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும்போதுதான் எமது இனப்பிரச்சினைக்கான தீர்வை விரைந்து பெறக்கூடியதான ஓர் அரசியல் மாற்றத்தை எம்மால் கொண்டு வரமுடியும்.

உண்மையிலே கீழைத்தேச நாடுகளில் வெற்றிகரமாக நடந்துமுடிந்த விடுதலைப் போராட்ட வரலாறுகளை நாம் பார்க்கும்போது அந்த விடுதலைப் போராட்ட வெற்றிகளில் அந்தந்த நாடுகளின் கிராமத்து வறிய விவசாய மக்கள் பெரும்பங்காற்றியுள்ளதை நாம் காணலாம். ரஷ்யப் புரட்சியின் வெற்றிக்கு நாட்டுப்புற ஏழை மக்களின் பங்களிப்பே அடிப்படையாய் இருந்தது. சீனப் புரட்சியின் வெற்றியில் சீனதேசத்துக் கிராமங்களில் வாழ்ந்த வறிய கூலி மக்களின் பங்களிப்பு மிக முக்கியமான பாத்திரத்தை வகித்தது. அவ்வாறே வியட்நாம், கம்பூச்சியா - கியூபா போன்ற நாடுகளின் புரட்சிகரமான அரசியல் மாற்றத்தில் அந்தந்த நாட்டுக் கிராமப்புற உழைக்கும் மக்களின் பங்களிப்பே பிரதான பங்காற்றியதை வரலாற்றில் நாம் காணலாம்... அதுமட்டுமல்ல.

"விவசாயிகளைப் புரிந்துகொண்டால் இந்தியாவைப் புரிந்துகொள்ளமுடியும்" என்ற முதுமொழிக்கொப்ப திரு.ஜவர்கலால் நேரு அவர்களும்...! மகாத்மா காந்தி அவர்களும் ஒரு விவசாயியின் ஆன்மாவின்மூலம் தமது தாய்நாட்டைப் புரிந்துகொள்ள முயன்றதன் விளைவுதான் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு மிகவும் முக்கியமான அடிப்படையாய் இருந்ததென 'ஜவர்கலால் நேரு' என்ற நூலிலே அதன் ஆசிரியர்களான அ. கோரெவாலும் - வி-ஸிம்யானும் கூறுகின்றார்கள்! எனவே இலங்கைத் தீவானது ஓர் விவசாய நாடு என்றவகையில் பெரும்பான்மையான கிராமத்து மக்களின் ஜீவாதாரத்திற்கான தொழிலாக விவசாயமே உள்ளது என்ற அடிப்படையிலும்! கிராமத்து வறிய கூலி விவசாயிகளின் ஆன்மாவைப் புரிந்துகொள்வதன்மூலமே இலங்கை என்ற எமது நாட்டின் விடுதலையையும் எமது தீராப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கான தீர்வையும் நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

அப்படியானால் நாம் எமது கிராமத்து வறிய கூலி விவசாயிகளின் ஆன்மாவை எவ்வாறு புரிந்துகொள்ளப் போகின்றோம்? என்ற கேள்வி இங்கே மிக முக்கியமான கேள்வியாக எம்முன் உள்ளது! இக்கட்டுரைத் தொடரில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இனவிடுதலையை வேண்டிநிற்கும் ஓர் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்திற்கு நாட்டுப்பற்று, தேசியப் பற்று, தாம் வாழும் மண்ணுடனான அவர்களது ஆழமான பிணைப்பு என்பன மிக உறுதியாக இருந்ததால்தான் அந்த இனம் தனது விடுதலையைநோக்கி விரைந்து செல்லமுடியும். ஆனால் தமிழ்பேசும் மக்களில் பெரும்பான்மையினராக உள்ள விவசாயிகள் - விவசாயக் கூலிகள் - வறிய விவசாயிகள் என விவசாயத்தோடு

**தங்கன்**

சம்மந்தப்பட்ட மக்களுக்கு நிலம்சார்ந்த உரிமை மறுக்கப்பட்டதால் அவர்கள் வாழும் மண்ணோடு அவர்களிற்கு இருக்க வேண்டிய ஆன்மரீதியிலான பிணைப்பு அவர்களிற்கு இல்லாமல் போய்விட்டது.

எனவே அவர்கள் வாழும் மண்மீதான பற்று அவர்களிற்கு ஆழமாகத் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே உள்ளது! அதேவேளை இந்த மண்ணோடு உற்பத்திசார்ந்த உறவோ, பிணைப்போ எதுவும் இல்லாத பிரித்தானிய வெள்ளையர்களின் கலாசாரப் பண்பாட்டில் மோகம்கொண்ட தமிழ் மேட்டுக்குடியினரின் கைகளிலேயே தமிழர் தேசத்தின் நிலஉரிமை குவிந்து போய் உள்ளது. அந்த நிலத்தோடு எந்தவிதமான உற்பத்திசார்ந்த உறவும் இல்லாத மேட்டுக்குடியினருக்கு அந்த மண்மீது பற்றுக்கொள்வதற்கான தேவைகள் எதுவும் இருக்கவில்லை. எனவேதான் அந்தத் தமிழ் மேட்டுக் குடிச் சிந்தனையாளர்களின் தலைமையில் உருவான தமிழ் தேசிய வாதமானது தமிழர் தேசம் பற்றிய எந்த ஒரு தீர்மானமும் இல்லாத...! தரப்படுத்தலையும் மொழி உரிமையையும் மட்டுமே பிரதான அடிப்படையில் கொண்டதாக இன்றுவரை உள்ளது. எனவேதான் எமது இனப்பிரச்சினையானது தீர்வுக்கான சாத்தியங்கள் எதுவுமே இல்லாத பிரச்சினையாக தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

இவ்வாறு தீர்வின்றித் தொடர்ந்து கொண்டிருக்கும் எமது இனப் பிரச்சினையானது எமது எதிர்கால சந்ததியாய் வளர்ந்துவரும் எமது பிள்ளைகளின் சுபீட்சமான எதிர்கால வாழ்வை பெரும் அவலத்திற்குள் தள்ளிக்கொண்டிருக்கின்றது என்ற உண்மையை மிக ஆழமாகச் சிந்தித்தேயாகவேண்டும் என்ற சூழலுக்குள் இன்று நாம் தள்ளப்பட்டு உள்ளோம். எனவே எமது சந்ததியின் எதிர்காலத்தை சிறந்த முறையில் நாம் உருவாக்கவேண்டுமெனில்... தமிழ் மக்களது அரசியல் தலைமையிலும் இதுவரை காலமும் அவர்கள் பின்பற்றிவந்த அரசியல் கொள்கையிலும் ஓர் மாற்றத்தை நாம் உடனடியாகவே ஏற்படுத்தவேண்டும்!

அந்த மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நம்பிக்கையை எமக்குத் தரும் ஒரேயொரு சக்தியாக விவசாய உற்பத்தியோடு தம்மைப் பிணைத்துக் கொண்ட கிராமத்து விவசாயிகளே உள்ளார்கள். ஏனெனில் இந்த மண்ணிலே பிறந்து இந்த மண்ணிலே வளர்ந்து இந்த மண்ணிலே வாழ்கின்ற கிராமத்து வறிய கூலி விவசாயிகளின் வாழ்வு... இந்த மண்ணுடனேயே இறுக்கமான பிணைப்பைக்கொண்டு உள்ளது. அந்த அப்பாவி மக்கள் தமது வாழ்வாதாரத்தை தேடி மேற்கு நாடுகளுக்குச் செல்லமுடியாதவர்களாக இந்த மண்ணோடு பிணைக்கப்பட்ட தொழில் முயற்சிகளைத் தவிர வேறெந்தத் தொழிலையும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் தீர்க்கமான சக்தியாகத் திகழும் அந்த மக்களுக்கு அவர்கள் வாழும் மண்ணின்மீதான உரிமை எவ்வாறு இல்லாமல்போனது என்பதை நாம் வரலாற்று அடிப்படையில் ஆராயும் போது தமிழ்த் தேசியவாதத்தின் எதிரிகளாகத் தமிழ் தேசியவாதத்தின் இன்றைய தலைவர்களே உள்ளார்கள் என்ற அவலமான உண்மையை எம்மால் புரிந்து கொள்ளமுடியும்!

எமது இனவாதத் தமிழ் தலைவர்களால் அடிக்கடி விதந்துரைக்கப்படும் யாழ்ப்பாணத்து திமிர் இராச்சியத்தில் நிலம்சார்ந்த நடைமுறையை "ராஜ காரிய" முறைமையே இருந்ததாக வரலாறு கூறுகின்றது. இந்த "ராஜ காரிய" முறையின்படி யாழ்ப்பாணத்து நிலம் முழுவதும் அன்றைய மன்னர்களிற்கும் நிலப்பிரபுக்களுக்குமே உரித்துடையதாக இருந்தது. அந்த நிலத்தில் ஏனைய அடிமை - குடிமை மக்கள் உழைக்கும் உரிமையை மட்டுமே கொண்டிருந்தார்கள். அவர்களது உழைப்பிற்கேற்ற ஊதியம் கூட அவர்களிற்குச் சரியாக வழங்கப்படவில்லை. இவ்வாறுதான் "எமது ஆண்ட இனத்தின்" ஆட்சி அன்று இருந்தது.

பிற்காலத்தில் வர்த்தகநோக்கத்தோடு நவீன ஆயுதங்களின் பலத்தோடும் வந்த அந்நியர்கள் யாழ்ப்பாண ராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். இவ்வாறு யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்ட அந்நியர்கள் யாழ்ப்பாணத்து "இராஜ காரிய" முறையை ரத்துச்செய்து மக்களுக்கான நிலஉரிமையை வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தனர். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நிலத்திற்கு உரித்துடையோர் அதற்கான உறுதிப்பத்திரங்களைச் சட்டப்படி பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்தபோது யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினர் கல்எறிந்து தமது காணிகளின் எல்லைகளை விஸ்தரித்து யாழ்ப்பாணத்து நிலங்களைச் சட்டப்படி தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டதாக சொல்லப்படுகின்றது. இது உண்மையான தகவல்தான் என்பதற்கான பல சான்றுகளை கிராமங்களிலிருந்து இன்றும் பெற்றுக் கொள்ளமுடியும்.

அன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்த அந்நியர்களின் மேற்படி நிலம்சார்ந்த திட்டத்தை அறிந்து கொள்ளமுடியாது! அறிந்தாலும் தமது நிலஉரிமையை உறுதிப்படுத்தமுடியாத உழைக்கின்ற அடிமை - குடிமை மக்கள் தொடர்ந்தும் நிலமற்ற மக்களாக வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டார்கள். இதனால் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடியினரின் நிலங்களிலேயே வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் உள்ளானார்கள். இவ்வாறு தமது நிலஉரிமையை அன்று இழந்துபோன கிராமத்து வறியமக்களின் நிலப்பிரச்சினையானது இன்றுவரை பெரும் சிக்கலான பிரச்சினையாகவே இருந்துவருகின்றது.

இவ்வாறு கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் விவசாயத் தொழில்களோடு சம்மந்தப்பட்ட மக்களின் நிலப்பிரச்சினையும் தமிழ்பேசும் மக்களது இனப்பிரச்சினையும் பெரும் சிக்கலுக்குரிய பிரச்சினைகளாக இன்றுவரை தொடர்வதற்கான எமது அரசியல் சூழலையும் சமூகச்சூழலையும் நாம் மிக ஆழமாகப் பார்க்கவேண்டும்.

**(தொடரும்)**

> **"எமது இனவாதத் தமிழ் தலைவர்களால் அடிக்கடி விதந்துரைக்கப்படும் யாழ்ப்பாணத் திமிர் இராச்சியத்தில் நிலம்சார்ந்த நடைமுறையை "ராஜ காரிய" முறமையே இருந்ததாக வரலாறு கூறுகின்றது. இந்த "ராஜ காரிய" முறையின்படி யாழ்ப்பாணத்து நிலம்முழுவதும் அன்றைய மன்னர்களிற்கும் நிலப்பிரபுக்களுக்குமே உரித்துடையதாக இருந்தது. அந்த நிலத்தில் ஏனைய அடிமை – குடிமை மக்கள் உழைக்கும் உரிமையை மட்டுமே கொண்டிருந்தார்கள். அவர்களது உழைப்பிற்கேற்ற ஊதியம்கூட அவர்களிற்குச் சரியாக வழங்கப்படவில்லை."**



இந்த வார சிறுகதை

# 'கடனாளி'

அளவெட்டி பா.உதயகுமார்

மழை இலேசாகத் தூறிக் கொண்டிருக்கின்றது. மழைக்காலம் என்பதனால், மெல்லிய குளிர் காற்று என் உடலைத் தழுவிச் சுகம் விசாரித்து செல்கின்றது.

புரண்டு, புரண்டு படுத்தும் நித்திரை வரமறுத்தது. மனம் ஒரு நிலையின்றி வேதனைத் தீயிலே வெந்து வெதும்பிக்கொண்டிருக்க நித்திரை எப்படிவரும்.

தூரத்தே ஆட்காட்டிக் குருவி ஒன்று அலறும் சத்தம் என் காதுக்கு தெளிவாகக் கேட்கின்றது. ஆந்தையின் அலறலும் நடுநிசியின் அமைதியை குலைக்குமாப்போல இருக்கின்றது. பகல்பொழுது மட்டுமன்றி இராப்பொழுதும் எனக்குப் பாரமாகிவிட்டது. என் மனமோ பகல்நடந்த சம்பவத்தின் பின்னாலேயே அலைந்து கொண்டிருக்கின்றது.

என் மகளா... இப்படிக் கேட்டாள். அன்பு, பாசம்காட்டி அரவணைத்து வளர்த்த என் மகள் இப்ப வளர்ந்து பெரியவளாகி விட்டதுடன் அவள் இப்ப வங்கியின் உதவி முகாமையாளர். படித்துப் பட்டதாரியாகியதுடன் கைநிறைய உழைக்கின்றாள்.

நான் அவளை முன்னேற்றப் பட்ட துயர் அறியாமல் கதைக் கின்றாள். மகளின் பெயரின் பின்னால் போடப்பட்டிருக்கும் பதவிக்காக, பட்டத்துக்காக நான்பட்ட துயர் அவளுக்கு விளங்கவில்லை.

கொஞ்சம், கொஞ்சமாகப் போட்ட முதல் இப்ப வட்டியும் முதலுமாக வளர்ந்துவிட்டது என்பது அவளுக்குப் புரியவில்லை. நாலாண்டுகளாக கொழும்பு பல்கலைக்கழகத்திலே படிப்பதற்கு நான்பட்ட துயர் கொஞ்சநஞ்சம் இல்லை. கடன்பட்டே மகளின் படிப்பை பூர்த்திசெய்தேன். அவள் இன்று உழைக்கின்றாள். அதுவும் தினமும் காசுடன் போராடும் தொழில் என்பதனால் பணத்தின் அருமை அவளுக்கு தெரிந்துவிட்டது.

"அப்பா என்னண்டு இவ்வளவு கடன் உங்களுக்கு வந்தது. கந்து வட்டிக்காரன் வந்து கண்டபடி பேசிட்டுப்போறான். எட்டு இலச்சம் குடுக்கவேணுமாம். வேண்டி என்ன செய்தனியள். கடன்காரன் வந்து பேச வெக்கமாய் கிடக்கு. இனிமேல் கடன்காரங்கள் வீட்டை வரக்கூடாது வந்தால் நான் வீட்டிலை இருக்கமாட்டன். வெளிக்கிட்டுப் போடுவன்" மகள் சொன்ன வார்த்தைகளால்தான் என் மனம் நிம்மதியைத் தேடிக் கொண்டிருந்தது.

என் மகள் உழைத்து எனக்கு உதவுவாள் என்று நம்பிய என் மனக்கோட்டை இடிந்து நொருங்கி விட்டது போன்ற உணர்வு எனக்கு.

அவளது படிப்புச் செலவு களுக்கே கடன்பட்டேன் என்பது மகளுக்கு விளங்கவில்லை. அதை நான் சொல்லவும் இல்லை.

குடும்பநிலை அவளுக்கு விளங்காமல் போகாது எனும் நம்பிக்கை எனக்கு இருந்தது. ஆனாலும் மத்தியானத்துடன் அந்த நம்பிக்கையும் செயலிழந்துவிட்டது.

கடனை எப்படி அடைப்பது... யார் நம்பி எனக்குப் பணம் தரப்போகின்றார்கள். எட்டு இலட்சம். எங்கே போவேன் நான். மனச்சுமை பாரமாகி என்னை அழுத்திக்கொண்டிருந்தது. பெற்று வளர்த்த பிள்ளையே என்னை நம்பாதபோது வேறு யார் என்னை நம்புவார்கள்.

எப்படியாவது கடனை அடைத்துவிடவேண்டும் எனும் வைராக்கியம் என்னை உறுதிக் கொண்டிருந்தது.

"கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்பது போன்ற நிலை எனக்கு. - என்ன செய்வேன் நான். கந்து வட்டிக்காரன் சிவலிங்கம் படுமோசமான மனிசன். காசைக் கட்டாதுவிட்டால் பொலிசு, கோடு என்று போகக்கூடியவன்.

வட்டிக்காரன் கடந்த நாலு வருசமாக கேட்ட போதெல்லாம் பணம் தந்தான். மகள் உழைக்கும் போது வட்டியும் முதலுமாக கட்டுவேன் என்று நம்பியே தந்தவன், மகள் உழைக்கத் தொடங்கிய பின்னரும் கடனைக் கட்டாவிட்டால்...

என் மனம் சிந்தனை எனும் சிறகு கட்டிப் பறக்கின்றது. கடந்த காலம் என்னும் களம்நோக்கி...

"அப்பா... அப்பா... எங்கையப்பா நிக்கிறியள். கையிலே தபால்உறை ஒன்றை வைத்துக்கொண்டு என்னை அழைத்தாள்...

"என்ன பிள்ளை"

"அப்பா எனக்கு கம்பசிலை இடம் கிடைச்சிட்டுது. அதுவும் கொழும்பு கம்பஸ் அப்பா. வாற சனிக்கிழமை போய்ச்சேர வேணும்" மகள் இலகுவாகச் சொல்லிவிட்டாள். எனக்கும் எல்லையற்ற சந்தோசம்தான். நான் எதிர்பார்த்தது நடந்துவிட்டது. செலவுக்கு எங்கை போவன். என்னுடைய உழைப்பு சாப்பாட்டுக்கே காணாது. இந்த நிலையிலை என்ன செய்வது. மனம் வேதனைப்பட்டது.

"இப்ப என்னப்பா செய்யப் போறியள்" இளையமகன் கமலன் கேட்டான். கமலனும் படிப்பிலே கெட்டிக்காரன். ஆனாலும் நான் படும் கஸ்டதுன்பங்கள் தெரிந்தவன்.

"பாப்பம் கமலன்..."

"கொழும்புக்கு போய் வாற செலவு, அதோட கம்பஸ் செலவு... எப்படியும் மாதம் பத்தாயிரம் காணாதப்பா" கமலன் கணக்கிட்டான்.

"உங்கடை செல்லமகளுக்கு கம்பஸ் கிடைச்சிட்டுது. எங்களுக்கு அரைகுறை சாப்பாடு தாற மாதிரி அவளுக்கு குடுக்கமுடியாது... நாலு பேர் படிக்கிற இடம், உடுப்புகள், பாவிக்கிற சாமானுகள் எல்லாம் வேண்டிக் குடுக்கவேணும் என்ன செய்யப் போறியள்" இது என் மனைவியின் அர்ச்சனை.

நான் பிரதேச சபையின் வீதித் துப்பரவுப் பணியாளனாகப் பணியாற்றிவருகின்றேன். கிடைக்கும் சம்பளத்திலேதான் வாழ்க்கை வண்டி தட்டுத் தடுமாறி தடம்புரண்டு ஓடிக்கொண்டு இருக்கின்றது. வறுமை தாண்டவ மாடுவதால் எல்லோருடைய பழிப்பு நெளிப்புகளுக்கு முகம்கொடுக்கும் அவலம் எனக்கு...

"என்ன கனகலிங்கம் இந்தப் பக்கம்" கந்து வட்டி சிவலிங்கம் நக்கலடித்தான்.

நான் முழுவிடயத்தையும் எடுத்துச் சொன்னேன்...

"நீ ஊருக்கை ஒரு மதிப்பான மனிசன். பிள்ளையின்ரை படிப்புக்கு காசு கேக்கிறாய். இல்லை எண்டு சொல்லவும் மனம் வரேல்லை. சரி ஒரு இலச்சம் தாறன். மாதம் ஆறாயிரம் வட்டி.." விரும்பினால் சொல்லு சிவலிங்கம். அழுத்தமாகவே சொல்லிவிட்டான்.

பத்திரம் ஒன்றிலே கையொப்ப மிட்டு பணம்வாங்கி தேவையானது களை வாங்கி நானே கூட்டிச் சென்றுவிட்டுத் திரும்பினேன்.

மாதம்தோறும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் மகளுக்கு அனுப்ப வேணும். விடுமுறை நாட்களில் கூலிவேலைக்கும் போனேன். சமாளிக்கமுடியாத நிலையிலேயே வட்டிக்காரனிடமே பணம் வாங்கினேன்.

வட்டியும் முதலும் வளர்ந்து கொண்டே சென்றது. என்ரை பிள்ளை உழைச்சு என்ரை கடனை கட்டுவாள் என்று நம்பியே அவளை நம்பிவளர்த்தேன்.

மகளது படிப்புச்செலவுடன் போக்குவரத்துச் செலவுகளும் எனக்குச் சுமையாகியது. விடுமுறை வீடும்போது நான் கொழும்புக்குப் போய் கூட்டிவருவேன். மீண்டும் நானே கொண்டு போய்விட வேணும். இப்படியாக செலவுகள் பன்மடங்காகிக் கொண்டேபோனது! "அப்பா புதுவரிசம் வருகுதெல்லே இஞ்சை எல்லாப் பிள்ளையளும் புதுஉடுப்புகள்தான் போடுவினம்... எனக்கும் புதுஉடுப்பு வேணுமப்பா. அதோடை புதுவரிசக் கொண்டாட்டச் செலவும் இருக்கப்பா. இந்த மாதம் இருபதினாயிரம் அனுப்பி விடுங்கோ!

தொலைபேசியில் சுகமாக சொல்லிவிட்டாள். பணத்துக்கு நான் எங்கை போவன்...

"என்னப்பா யோசிச்சு என்ன செய்யப் போறியள்... ஆரிட்டையேனும் கடன்கேட்டுப் பாருங்கோ...

நாலு பேர் புதுசு போடேக்கை அவளும் போடத்தானே வேணும்" அரிசி விலைதெரியாத மனைவியின் அறிக்கை இது.

கொஞ்சமாவது சிந்திக்கிற தன்மை மனைவியிடம் இருப்பதில்லை.

"உனக்குக் கொஞ்சம்கூட அறிவே இல்லையா... காசு... காசு... எண்டால் நான் எங்கை போறது" என் ஆத்திரம் அடங்கும்வரை மனைவியை திட்டினேன்."

"நான் ஏதும் சொன்னால் காணும் ரோசம் மட்டும் வந்திடும். படிக்கிற பிள்ளை நாலுபேரைப் போல இருக்கத்தானே வேணும்" புறுபுறுத்துக்கொண்டு குசினியை நோக்கிப் போனாள் மனைவி.

கந்து வட்டிக்காரனும் ஊரிலை இல்லை. காசு ஆரிட்டை வேண்டுறது என்று என் மனம் கடுமையாக போராடியது. நண்பர்கள், உறவினர்கள் என்று பலரிடமும் கேட்டேன். எல்லோரும் இல்லை என்று கையை விரித்துவிட்டனர்.

கடைசியாக என் நண்பன் ஒருவனிடம் கேட்டேன். அவனோ என் மோட்டார் சைக்கிளைத் தந்தால் பணம்தருவதாகச் சொன்னான்.

என்னிடம் இருப்பது நுளம்புரக மோட்டச் சைக்கிள். வேலை செய்யும் இடம் தூரம் என்பதனால் அதன்மூலமே போய்வருவேன். இப்ப அதையும் விற்றுவிட்டால்... மனம் பலமுறை சிந்தித்துப் போராடி இறுதியில் நண்பனிடம் விற்றுப் பணம்வாங்கி மகளுக்கு அனுப்பி வைத்தேன்.

இப்படியாக கடன்பட்டு, என் மகளின் நாலு வருடக் கல்வியும் பூர்த்தியாகிவிட்டது." இப்ப மகள் வீட்டோடு வந்துவிட்டாள்... இதனால் மாதச் செலவிலே சற்று நிம்மதியாக இருந்தேன். ஆனாலும் பட்டமளிப்பு விழா என்று ஒன்றுவந்து மீண்டும் என்னைக் கடனாளியாக்கியது.

பட்டமளிப்பு விழா என்றால் சும்மாவா... அது இது என்று ஒரு இலட்சம் செலவாகியது. கந்து வட்டிக்காரன் பணம் தந்தான்.

நாட்கள் யாருக்காகவும் காத்திருக்கப்போவதில்லை. அது தன்கடமையை செய்து கொண்டிருந்தது. பல நேர்முகப் பரீட்சைக்குப் போனவளுக்கு அரச வங்கி ஒன்றிலே உதவி முகாமையாளராகவும் வேலை கிடைத்துவிட்டது.

எனக்கு இனிமேல்தான் நல்ல காலம் என்று மகிழ்ச்சிக் கடலில் மிதந்தேன். கற்பனை உலகிலே சஞ்சரித்தேன். என் கடனெல்லாம் மகளின் உழைப்பின்மூலம் அடைத்துவிடலாம் என்று சந்தோசப்பட்டேன்.

என்னுடைய சந்தோசம் நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. மகளின் நடவடிக்கையிலே மாற்றம் தெரிந்தது. எடுக்கும் சம்பளம் என்னிடம் தருவதில்லை. அவளுடைய சம்பளம் எவ்வளவு என்றுகூட எனக்குத் தெரியாது.

(21 ஆம் ஆம் பக்கம் பார்க்க)




# கருத்தரிப்பு ஏற்படாமல் இருப்பது ஏன்?




திருமணமான தம்பதிகளில் நூறில் இருபது பேருக்குக் குழந்தை பிறப்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

திருமணமாகி இரண்டு வருடங்களாகியும் குழந்தை உண்டாகாமல் இருந்தால்தான் தம்பதிகளில் யாருக்கேனும் பிரச்சினை இருக்கமுடியும் என்று நம்மால் சொல்லமுடியும். ஒவ்வொரு தம்பதிக்கும் அவரவர் சூழல் வேறுபடும். சிலர் முப்பது வயதுபோல திருமணம் முடித்திருக்கலாம்.

இவர்களுக்கு குழந்தை விஷயம் தள்ளிப்போனால் இரண்டு மூன்று வருடம் வரையெல்லாம் காத்திருக்கமுடியாது.

அவரவருடைய குடும்பச்சூழல் மற்றும் தேவைப்படி மருத்துவர்கள் ட்ரீட்மெண்ட் ஆரம்பிப்பார்கள். தம்பதிகளும் தயக்கப்படாமல் தங்கள் பிரச்சினைகளை மனம்விட்டு மருத்துவரிடம் சொல்லவேண்டும். அதிலும் அவர்கள் கொடுக்கும் தகவல்கள் உண்மையாக இருக்கவேண்டியது அவசியம்.

* சிலருக்கு அந்த உறவு பற்றிய போதியளவு விஷயம் தெரியாமல் இருக்கலாம். முட்டை வெளிப்படும் OVULATION PERIOD தான் உறவுக்கு உகந்த சமயம். அந்தச் சமயத்தில் உறவு கொண்டால்தான் கருத்தரிப்பு ஏற்படும் என்று சொல்லியிருக்கிறேன். அந்த திகதிகளை தவறவிடும்போது சில தம்பதிகளுக்குக் கருத்தரிக்காமல் போகலாம்.

* கணவனும் மனைவியும் வேலைபார்க்கும் குடும்பங்களிலும், இருவரில் யாரேனும் அடிக்கடி வெளியூருக்கு சுற்றுலாபோகும் குடும்பங்களிலும் இவ்வாறு ஆகலாம். சிலருக்கு அல்லது தம்பதியர் இருவருக்குமே நடந்தது இரண்டாம் திருமணமாக இருக்கலாம். அவர்களில் கணவர் ஏற்கனவே குழந்தை பெற்றவராக இருந்தாலும் முன்பிருந்த உடல்நிலைபோல அவருக்கு இப்போது இல்லாமல் போகலாம்.

* அதுவும்கூட கருத்தரிக்காமல் போகக் காரணமாகும் என்பதால், இந்தத் தகவலையும் மறைக்காமல் மருத்துவரிடம் சொல்லிவிடவேண்டும். சிலநேரங்களில் குழந்தை இல்லையா என்ற சமூகத்தின் கேள்வியைகூடத் தம்பதிகள் மனதில் ஒருவித பாதிப்பு ஏற்படுத்தி, கருத்தரிப்பு உண்டாவதில் பிரச்சினைகள் ஏற்படுத்தலாம்.


* சிலர் அந்த உறவு முடிந்தவுடன் சுத்தமாக இருக்கிறேன் பேர்வழியே என்று, தங்கள் அந்தரங்க பாகங்களை தண்ணீராலோ வேறு இரசாயனத் திரவத்தாலோ சுத்தப்படுத்தி வரலாம். இப்படி செய்யும்போது விந்தணு அழிந்துபோகும் வாய்ப்புள்ளது. இதனாலும் கருத்தரிப்பு தள்ளிப்போகலாம்.

- இதுபோன்ற பல காரணங்களினால் உடலளவில் பிரச்சினைகள் இல்லாத தம்பதி களுக்கும்கூட கருத்தரிப்பதில் பிரச்சினைகள் உண்டாகலாம். மருத்துவரிடம் இதுபற்றி ஒளிவுமறைவில்லாமல் பேசி பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணலாம்.

---

# இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்

## வெளியீடு 07



# இருமுனை நெருக்கடிக்குப் பதில் தேடும் அரசு!

இனப்பிரச்சினை காரணமாக இலங்கையில் அரசியல் நிலைமைகள் ஸ்திரமற்றதாகவே இருக்கின்றன. இந்த நிலைமை நீண்டகாலமாகவே தொடர்ந்து வருகின்றது. கால் நூற்றாண்டுக்கு மேலாக நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறை யில் இருந்திருக்கின்றது. அவசரகாலச் சட்டத்தின் துணையில்லாமல் நாட்டின் நிர்வாகத்தைக்கொண்டு செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

நாட்டின் பாதுகாப்பு, நிர்வாகச் செயற் பாடுகள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் என்பன ஸ்திரமாக இருந்திருந்தால், அந்த கால் நூற்றாண்டு காலப் பகுதியில் மாறி மாறி ஆட்சிப்பீடமேறிய அரசுகள் இவ்வாறு அவசரகாலச் சட்டத்தின் துணையை நாடவேண்டிய தேவை எழுந்திருக்கமாட்டாது.

முக்கியமாக யுத்த மோதல்கள் ஏற்பட்டிருந்த சூழலும் அவசரகாலச் சட்டத்தின் துணையோடு நாட்டை நிர்வகிக்கவேண்டிய கட்டாயநிலைமையை ஏற்படுத்தியிருந்தது. நாட்டில் யுத்தம் ஒன்று மூள்வதற்கு இனப்பிரச்சினையே மூலகாரணமாகும்.

நாடு அந்நியராகிய ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம்பெற்றதைத் தொடர்ந்து, மூவினமக்களும் சமமான உரிமைகளுடன் வாழ்வதற்குரிய சரியான ஆட்சி முறைமையொன்று நாட்டில் ஏற்படுத்தப்படாமையே இனப்பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாயிற்று.

இனப்பிரச்சினைக்கு ஆரம்பத்திலேயே ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கு ஆட்சி-யாளர்கள் தவறிவிட்டார்கள். அது மட்டு மல்லாமல் அது புரையோடி, பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி, நாட்டையே சீரழிக்கத் தொடங்கிய நிலைமையிலும் கூட, இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஆட்சியாளர்கள் முன்வரவில்லை.

சிறுபான்மையினரின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும். அவர்களுக்கு சமஉரிமைகள் வழங்கப்படவேண்டும் எனக்கோரி நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் ஆயுத பலத்தைக் கொண்டு பொலிஸாரையும், இராணுவத்தினரையும் பயன்படுத்தி அடக்கியொடுக்குவதற்கு அரசுகள் முனைந்திருந்தன. இதனால் அடக்குமுறைக்கு எதிராக ஆயுதப் போராட்டம் தலையெடுத்தது, நாட்டில் மோசமான யுத்தம்மூண்டது. அந்த இனப்-பிரச்சினை புரையோடியிருந்தது. ஆயினும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசாங்கம் வெற்றிபெற்றது.

விடுதலைப்புலிகள் தோல்வியடைந்-தார்கள். அவர்களின் தலைமைகளும் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால் இனப் பிரச்சினையில் எந்தவிதமான மாற்றங்-களும் ஏற்படவில்லை.

இப்போது யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. இந்த நிலைமையிலும் இனப்பிரச்சினை க்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்குரிய முன் முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஆட்சியாளர்கள் விருப்பமற்றவர்களாகவே இருக்கின்றார்கள்..

யுத்தம் முடிவடைந்ததையடுத்து, நாட்டில் வெடிச்சத்தங்கள் இல்லை. இரத்தஆறு ஓடுவதில்லை. பொருளாதாரக் கட்டுப்பாடுகள், போக்குவரத்துத் தடைகள் என்பன இப்போது நீக்கப்பட்டுவிட்டன. இதனால் நாட்டில் அமைதி ஏற்பட்டிருக்-கின்றது. மக்கள் விரும்பிய இடங்களுக்கு எந்தவேளையிலும் எங்கும் சென்று வரலாம். அந்தவகையில் நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது. ஆனாலும், இப்போது அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், பிரச்சினைகள் இரண்டு வடிவங்களைப் பெற்றிருக்கின்றன.

அரசியல் தீர்வு காணப்படவேண்டிய இனப்பிரச்சினை என்பது ஒன்று. இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் என்பவற்றிற்குப் பொறுப்பு கூறவேண்டும் என்பது இரண்டாவது பிரச்சினையாகும்.

இந்தப் பிரச்சினைகள் காரணமாக பல்வேறு நெருக்கடிகள் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்றன. உள்ளூர் அழுத்தங்க-ளாகவும், சர்வதேச அழுத்தங்களாகவும் அந்த நெருக்கடிகள் விசுவரூபமெடுத்து, அரசாங்கத்தை ஆட்டிப்படைக்க முனைந்திருக்கின்றன.

இருந்தபோதிலும், இந்த நெருக்கடி களை நாட்டு மக்களின் எதிர்கால நன்மைகளைக் கருத்திற்கொண்டு அதற்கேற்றவகையில் கையாள்வதற்கு இன்னுமே அரசாங்கம் தயாராகவில்லை. அதற்கு முன்வரவுமில்லை. இதனால் சர்வதேச தலையீடுகள் அதிகரித்திருக்-கின்றன. ஆனால் வெளியார் தலையீடு எதனையும் அனுமதிக்கப்போவதில்லை என்று அரசாங்கம் உறுதியாகவும், பிடிவாதமாகவும் கூறிவருகின்றது. இதில் விட்டுக்கொடுக்காத ஒரு போக்கையே அரசு கடைப்பிடித்துவருகின்றது.

### அரசியல் தீர்வு

யுத்தம் முடிவடைந்ததையடுத்து, இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படும் என்று எல்லோரும் ஆவலாக எதிர்பார்த்திருந்தார்கள். சர்வதேசமும்கூட இதில் ஆர்வமாக இருந்தது. ஆனால், அரசாங்கம் தானாக முன்வந்து தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்-பித்து அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவே இல்லை.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து யுத்தமோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் தேர்தலை நடத்தியதும், மக்களால் தெரிவுசெய்யப்படுகின்ற தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று யுத்தம் நடைபெற்ற காலத்தில் கூறியிருந்த ஜனாதிபதி யுத்தத்திற்குப் பின்னர் தேர்தல்கள் நடைபெற்றபோதிலும், தனது வாக்குறுதியை நிறைவேற்ற-வில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று பல தடவைகள் பலர் வேண்டுகோள் விடுத்த போதிலும் எதுவும் நடக்கவில்லை. இந்தியாவின் அழுத்தத்தையடுத்தே பேச்சுவார்த்தை-களை அரசு ஆரம்பித்தது, அந்தப் பேச்சு வார்த்தைகள் ஒரு வருடகாலம் நீடித்ததன் பின்னர், அந்தப் பேச்சுக்கள் அரசாங்கக் கட்சியுடன் நடைபெற்ற பேச்சுக்களே தவிர, அரசாங்கத்துடன் நடத்தப்படவில்லை என்று அப்பட்டமாகக்கூறி, அந்தப் பேச்சுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டது.

அத்துடன் அரசியல்தீர்வுக்கான பேச்சுக்களை பாராளுமன்றத் தெரிவுக்-குழுவிலேயே நடத்தவேண்டும். எனவே, கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வர-வேண்டு மென்று அரசாங்கத் தரப்பினர் வலியுறுத்தி வந்தார்கள். ஆனால், நேரடி பேச்சுக்களில் ஓர் உடன்பாட்டை எட்டி யபின்னர், அது குறித்து தெரிவுக்குழுவில் பேசலாமேதவிர, மற்றும்படி, தெரிவுக்குழு-வுக்கு வருவதற்குத் தயாரில்லை என்று கூட்டமைப்பு உறுதியாகக் கூறிவிட்டது.

அப்படி இருந்தபோதிலும், இனிமேல் நேரடிப் பேச்சுவார்த்தைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அடித்துக் கூறியுள்ள அரசு, பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால், தெரிவுக்குழுவுக்கு வந்தே ஆகவேண்டும். பேச்சுவார்த்தைகள் என்றால் அது தெரிவுக்குழுவில் மட்டும் தான் நடைபெறும். வேறு எங்கும் நடைபெறமாட்டாது என்று அழுங்குப் பிடியாக இருக்கின்றது.

(தொடரும்)



# பாப்பா முரசு




சிறுவர் கதை



# புகழ்

## வாரம் ஒரு திருக்குறள்



### அறிவுடைமை

**அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ**
**தஞ்சல் அறிவார் தொழில்.**

ஒரு விளைவுக்கு எதிர்விளைவு அறிவில்லாதவர்கள்தான் அஞ்சவேண்டியதற்கு அஞ்சமாட்டார்கள். அறிஞர்கள் மட்டுமே அஞ்சவேண்டியதற்கு அஞ்சுவார்கள்.

குறள் : 428

## கலப்படம் கண்டறியும் வழிமுறைகள்

**உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைக் கண்டறிய சில வழிமுறைகள்:**

* வெண்ணெயில் மாவைக் கலப்படம் செய்வதைக் கண்டறிய,

சிறிதளவு வெண்ணெயை எடுத்துக் கொண்டு அதன்மேல் ஒரு துளி டிங்சர் அயோடினைவிடவேண்டும். வெண்ணெயில் மாவு கலக்கப்பட்டிருந்தால் அது ஊதா நிறமாக மாறிவிடும்.

* கோப்பித்தூளில் புளியங்கொட்டைத் தோல் கலக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய, ஒரு தம்ளர் தண்ணீரில் ஒரு தேக்கரண்டி கோப்பித்தூளைப் போடுங்கள். சுத்தமான தூளாக இருந்தால் மிதக்கும். கலப்படம் என்றால் தூள் அடியில் படிந்துவிடும்.

* சீனியில் ரவையைக் கலப்படம் செய்துவிடுவார்கள். அதை சிறிது எடுத்து நீரில் போட்டால் சீனி கரைந்துவிடும். ரவை கரையாமல் இருக்கும்.

* தேனில் வெல்லப்பாகை கலப்படம் செய்திருந்தால், ஒரு தம்ளர் தண்ணீரில் அதில் ஒரு துளி தேனை விடவேண்டும். தேன் சுத்தமானதாக இருந்தால் அடியில் படியும். வெல்லப்பாகு கலந்திருந்தால் அது தண்ணீரில் கலந்து கலங்கிப் போயிருக்கும்.

* தேனைச் சிறிது எடுத்து நாய் முன்விடவும். சுத்தமான தேனை நாய் சீண்டாது.



* தேனில் தீக்குச்சியை நன்றாக முக்கிவிட்டு தீப்பெட்டியில் உரசிக் கொளுத்திப் பார்க்கவேண்டும். அது நன்றாக எரிந்தால் சுத்தமான தேன். அது அணைந்தாலோ, சரியாக எரியாவிட்டாலோ அது கலப்படத் தேன் என்பதை அறியலாம்.

பேரறிஞர்கள் என்று பெயர் பெற்ற மூன்று பேர் ஒவ்வொரு ஊராகச் சென்று தம் அறிவின் திறத்தை காட்டி பொருளும், புகழும் பெற்றுவந்தார்கள்.

ஓர் ஊருக்குச் சென்றதும், அந்த ஊரின் அறிஞரைத் தம்முடன் போட்டியிட அழைப்பார்கள். அவரிடம் சில கேள்விகள் கேட்பார்கள். அவற்றிற்கு உள்ளூர் அறிஞர் பதில்தெரியாமல் விழித்தால், அவர் தோற்றவர் ஆவார். தோற்றவர் தாம் பெற்ற விருதுகளை இப்பேரறிஞரிடம் கொடுத்துவிடவேண்டும். ஊராரும் இம்மூவரே அறிவிலே சிறந்தவர் என்று ஏற்றுக்கொண்டு நிறைய பரிசுப்பொருள் கொடுத்துச் சிறப்பிக்கவேண்டும். இதன்படி பேரறிஞர்கள் வெற்றிமேல் வெற்றி பெற்று வந்தார்கள்.

மூன்று பேரறிஞர்களும் முல்லா வாழும் ஊருக்கு வந்தார்கள். ஊர்த் தலைவரிடம் தாங்கள் வந்த காரணத்தை கூறினார்கள்.

ஊர்த்தலைவர் உடனே முல்லா நஸ்ருதீனை வரவழைத்தார்.

"நம்முடைய ஊரின் பேரறிஞர் நீங்கள் தாம். அதனால் வந்திருக்கும் பேரறிஞர்களிடம் நீங்கள் போட்டியிட்டு வெற்றிபெற்று ஊர்ப்புகழை உயர்த்த வேண்டும்" என்று வேண்டினர்.

போட்டிக்குரிய நாள் வந்தது. ஊர்மக்கள் போட்டியைக் காணத்திரண்டு வந்திருந்தார்கள். ஒருபுறம் மூன்று பேரறிஞர்களும், மறுபுறம் முல்லாவும் நின்றிருந்தார்கள்.

போட்டி தொடங்கியது.

பேரறிஞர்களில் முதல்வர் முல்லாவிடம் கேள்வி கேட்டார்.

"இந்த உலகத்தில் மைய இடம் எது?"

முல்லா நொடிக்கூடத் தயங்காமல் பதில் கூறினார்.

'வெளியே என் கழுதை நிற்கிறது. என் கழுதை நிற்கும் இடந்தான் உலகத்தில் மையம்".

"இதை நிருபியுங்கள், பார்க்கலாம்"

"நான் சொன்னது தவறு என்று நீங்கள் நிரூபித்து காட்டுங்களேன். உலகை அளந்துபாருங்கள். என் கழுதை நிற்கிற இடந்தான் அதன் மையம் என்ற உண்மை தெரியும்.

முதல் பேறறிஞர் மேலே பேச முடியாமல் அடங்கிவிட்டார். இப்போது இரண்டாமவர் கேள்வி கேட்டார்:

"வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் மொத்தம் எத்தனை?"

முல்லா பதில் சொன்னார்:

"என் கழுதையின் உடம்பில் எத்தனை உரோமங்கள் உள்ளனவோ அத்தனை நட்சத்திரங்கள் வானத்தில் உள்ளன. வேண்டுமானால் எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்."

இரண்டாம் பேரறிஞர் மௌன மானார். மூன்றாமவர் தம் கேள்வியைக் கேட்டார்.

"இந்த உலகில் வாழும் சான்றோர்கள் மக்கள் கடைப்பிடிக்க வகுத்த நெறிகள் எத்தனை?

"இதுவும் கஷ்டமான கேள்வியல்ல! பேரறிஞர்களே உங்கள் மூவரின் தாடியிலும் எத்தனை உரோமங்கள் உண்டோ அத்தனை நெறிகளை மக்களுக்காக உலக சான்றோர்கள் வகுத்துள்ளனர். இதிலும் உங்களுக்கு சந்தேகம் இருந்தால் சொல்லுங்கள். மூவர் தாடியிலும் உள்ள உரோமங்களை ஒவ்வொன்றாகப் பிடுங்கி எண்ணிக்கை சரியென்று நிரூபிக்கிறேன்".

முல்லா இப்படி சொன்னதும், "வேண்டாம்! வேண்டாம்! நீங்கள் சொன்ன விடையை ஏற்றுக் கொள்கிறோம்" என்று பேரறிஞர்கள் மூவரும் ஒருசேரக் கூறிப் பின்னடைந்தார்கள்.

தாங்கள் போட்டியில் தோற்றதாகக் கூறித் தங்கள் விருதுகளை முல்லாவின் காலடியில் சமர்ப்பித்தார்கள். ஊர்த் தலைவர் முல்லாவுக்கு பெரும் பொருள் கொடுத்தார்.

முல்லாவின் புகழ் முன்னிலும் மும்மடங்கு உயர்ந்தது.

## அதிரடி ஐயாத்துரை



* வடக்கு பெரிய அவையின்ர அதிகாரிமாற்ற 'வாகன' விவகாரம் பெரிய சுவாரசியம்தான் போங்கோ. உதுல ஆகச் சிரிப்பு என்னெண்டால் வடமராட்சியில இருந்துவருகின்ற 'சத்தியமான' பெரிய அதிகாரி தன்ர வாகனத்தில கொண்டு வந்து 'நெல்லியடிச் சந்தையில' 'தேசிக்காய்' எல்லோ விற்கிறார். எப்புடி இருக்கு வாகனப் பாவனை?

* இலங்கை ராசா 'திரியர்' அண்மையில யாழ்ப்பாணத்துக்கு வந்தவரெல்லோ? உவங்கள் 'கூத்தாடி எம்.பிமார்' எல்லாரும் அண்டைக்கு யாழ்ப்பாணத்திலதான் நிண்டவங்கள். உவங்கள் ஒருவரும் விழாவுக்கே போகேல்ல. உவங்களுக்கு 'திரியரில' கோவமா? அல்லது வடக்கின் 'விக்கினவிநாயகனில' கோவமா? உதில 'மொனிற்றர் ஞானத்தார்' தானும் வடமாகாண விக்கினவிநாயகனுக்குச் சமம் எண்டது மாதிரி தன்னை விழாவுக்கு அழைக்கேல்லை எண்டு புலம்புறார். சபாஷ்! சரியான போட்டி.

* வடக்கு மாகாணத்தின்ர கல்வித் திணைக் களத்தின்ர 'வலயங்களில' 'பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள்' பலர் ஓய்வுபெறுகினம். உள்ளுக்குள்ளால எங்கட 'கல்வி ராசகுலகுரு' உந்த வெற்றிடங்களை தன்ரை ஆக்களுக்குக் குடுக்கிறதுக்கு தயாராயிற்றார் எண்டு தகவல். இந்தக் காரணத்தால பல 'அதிகாரிகள்' கள்ளியங்காட்டுப்பக்கமா மாலையானவுடன் 'போத்தலோட' ஒதுங்குறதாகத் தகவல். யாழ்ப்பாணத்தைக் குறிவைச்சு 'அகிலமான' அதிகாரி ஓடித்திரியிறார். இவரிலும் பார்க்க பல 'சீனியர்' அதிகாரிகள் இருக்கினம். எப்புடி கூத்தாடிகளின்ர அரசியல் நியமனங்கள்?

* பூங்காப் பக்கமாக இருக்கிற 'மத்திய கணக்கு' அதிகாரிக்கு இவ்வளவு நாளும் கணக்குவிட்டுக் கொண்டு இருந்தவையள் எல்லோ? இப்ப கணக்காய்வு 'ஞானத்துக்கு' ஞானம் பிறந்திட்டுக் கண்டியளோ. மனுசன் 'அதிரடி' ஆட்டம் ஆடத்தொடங்கிட்டுது. 'பள்ளிக்கூடங்களில' இருந்து 'கச்சேரி' வரை மனுசன்ர 'பச்சைப் பேனா' படவெளிக்கிட்டுட்டுது. இனி பல 'பெருச்சாளிகள்' பாடு திண்டாட்டம்தான்.

* வடக்கு மாகாண பெரிய அவையின்ர கடைசிக் கூட்டத்தில அண்ணன் 'சிவாஜி' தன்ர பாணியில 'வீணைக்கட்சி'யை அடிக்கத் துவங்க 'தவமான' வீணைக்கட்சிக்காரர் சிவாஜியற்ற 'வெளிச்சவீட்டுக் கட்சியின்ர' 'அந்த நாள் ஞாபகங்களை' கிளறவெளிக்கிட ஒரு அரை மணித்தியாலம் மணமோ மணம்'. பிறகு சிவாஜி கப்சிப்.

* அண்மையில கூத்தாடிகளுக்கு எதிரா ஒரு 'அவை' உருவானதெல்லோ? அதில போனவை 'பட்டும் படாமலும்' 'தொட்டும் தொடாமலும்' நடந்து கொண்டவை. கூத்தாடிகளுக்கு இது வயித்தைக் கலக்கினாலும் காட்டிக்கொள்ளேல்ல. இதில பகிடி என்னெண்டா கூத்தாடிப் 'பேராசிரியர்' ஒருவரும் கலந்துகொண்டதுதான். இவர்மீது கூத்தாடி 'மாவிட்டபுரத்துக்காரர்' ஏலுமெண்டா ஒழுக்காற்று விசாரணை எண்டு கை வைச்சுப்பாக்கட்டும் பாப்பம்.

* வடக்கு 'அதிபர்கள்' சிலருக்கு 01.01.2016இல் இருந்து 'இடமாற்றம்' எண்டு அரசல்புரசலாக் கதைவருகுது. கனகாலமா 'அடைவைச்சு முட்டையும்' போட்ட 'பெண் அதிபர்கள்' ஒரே புலம்பல் கச்சேரி.

* யாழ்.மாவட்டத்தின்ர பெரிய 'ஏஜென்ட்' அலுவலகத்தில இப்ப 'காதல்' படங்கள் ஓட வெளிக்கிட்டுட்டுதாம். 'பெரிய' அதிகாரிகள் முதல் 'அடி மட்டம்' வரை அங்க வேலைசெய்யிற 'பெட்டையள' விடுறாங்கள் இல்லையாம். பெட்டையள் கண்ணீரும் கம்பலையுமா 'ரான்சருக்கு' ஓடித்திரியினமாம்.

* 'கூத்தாடிகள்' எதிர் அமைச்சர் 'நாதசுவாமி' மோதல் உக்கிரம். கூத்தாடி 'மந்திரத்தார்' நாதசுவாமியைப் பற்றி 'சிங்கத்தாரிட்ட' நேரடியாவே 'வத்தி' வைச்சவராம். ஆனா சிங்கத்தார் கண்டுகொள்ளவேயில்லையாம். உதுக்குப் பிறகு மந்திரத்தார் சொன்னவராம், 'கோயில் பார்க்கிற உவனெல்லாம் ஒரு அமைச்சரோ?' எண்டு. கூத்தாடி மந்திரத்தாருக்கு இப்ப 'ரைம்' நல்லாயில்லப் போல இருக்கு.

* தானே 'மலையக ஏகப் பிரதிநிதி' எண்டு சொல்லிக்கொண்டு திரியிற 'கணேசமான' மொழி அமைச்சர் தனக்குத் தந்த அமைச்சின்ர 'பெயர்' சரியில்லை எண்டு ரொம்ப அப்செட். பெயரில என்ன இருக்கு பாருங்கோ! செயலிலை எல்லோ காட்டோணும். இவை எல்லாம் 'அட்டைக் கத்தி' நடிகர்கள். பாவம் மலையகச்சனம்.

* வடக்கு பெரிய அவையில பரீட்சை வைச்சு நியமனம் வைக்கிறதுக்கு 'பொதுவான குழு' ஒண்டு இருக்குத்தானே? அதின்ர 'பெரிய பெண்' அதிகாரிக்கு 'காசேதான்' கடவுள் அப்பா. 'அலுவலக வேலை' எல்லாம் இரண்டாம் கட்டமப்பா. ஒவ்வொரு நாளும் 'அன்னதானம்' எண்டால் ரொம்ப மகிழ்ச்சியப்பா.

# இலங்கையில் மும்மொழிக் கொள்கைச் செயல்திட்டம்

# வெற்றியளித்தால் நிம்மதி மனோகணேசன் சாதிப்பாரா?

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் சேர்ந்து இலங்கை அரசின் மும்மொழி செயற்திட்டத்தை கொழும்பு அலரிமாளிகையில் ஆரம்பித்து வைத்தார்.

மொழிகளுக்கூடாக இனங்களுக்கிடையே சகவாழ்வையும் சௌஜன்யத்தையும் கொண்டுவரும் நிகழ்வைத் துவக்கி வைப்பதற்கு இவ்விரு தலைவர்களும் மிகப்பொருத்தமானவர்கள் என்றே அப்போது புகழ்ந்து பேசப்பட்டது.

ஏனென்றால் "எனக்கும் தமிழில் கதைக்க ஆசைதான் என்றாலும் எனக்கு அது தெரியாதே" என்று சொல்லி சமாளிப்பவர்களைவிட இலங்கையில் மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையிலும் கூட முதன்முறையாகத் தமிழில் உரையாற்றி உணர்வுரீதியாக தமிழ் பேசுவோரின் மனங்களைக் குளிரவைத்தவர் என்று புகழாரம் சூட்டப்பட்டவர முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச.

இதேபோன்றுதான் இஸ்லாமிய சமூகத்தில் பிறந்து தமிழ்மொழி பேசுபவராக இருந்ததோடு அணு விஞ்ஞானியாகவும் இந்திய ஜனாதிபதியாகவும் உயர்தவர் அப்துல் கலாம் அவர்கள்.

சிறந்த எழுத்தாளனும் கவிஞனுமான அப்துல் கலாம் அவர்கள் முற்றுமுழுதாக ஆங்கிலம் பேசும் வெள்ளையர்களின் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்திலே முதன்முதலாக தமிழில் உரையாற்றி தமிழ்ப் பெருமையை உலகறியச் செய்தவர்.

நமது 6ஆம் வகுப்புப் பாடப் புத்தகத்திலே கலாநிதி அப்துல் கலாம் என்றொரு பாடமும் இருக்கின்றது. இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்று பிரதானமாக மூன்று மொழிகள்தான் பேசப்படுகின்றன. இந்த மும்மொழிகளையும் தவிர மலே, தெலுங்கு மற்றும் குறைந்தளவில் வேடுவ சமூகத்தினரும் அவர்களது எழுத்துருவில் இல்லாத வாய்மொழியைப் பேசுகின்றார்கள். எனினும் அவர்கள் சிங்களம் அல்லது தமிழைப் பேசக்கூடிய தேர்ச்சி உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆயினும் தமிழ் சிங்களம் ஆகிய இந்தப் பிரதான இரண்டு மொழிகளையும் சரளமாக நாம் கற்றுக்கொள்ளாதது அல்லது கர்வத்தின் காரணமாக "எங்கள் மொழிதான் தெய்வீக மொழி" என்று உயர்த்திப் பிடித்துப் பெருமையடித்ததன் விளைவு.

கடந்த கால் நூற்றாண்டு காலம் நமது நாடு கண்ணீர் சிந்தி பேரழிவுகளைச் சந்திக்கவேண்டியிருந்தது. இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளுடன் ஆங்கிலத்தையும் சேர்த்து பள்ளிக்கூட மட்டத்திலிருந்தே அனைவருக்கும் கற்பிப்பதன்மூலம் இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தமுடியும் என்று அரசாங்கம் நம்புகின்றது.

1956இல் தனிச் சிங்கள சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, அரசு கல்வித் திட்டங்களில் இருமொழிக் கொள்கை பற்றிய அக்கறை செலுத்தப்பட்டபோதிலும், காலப்போக்கில் அரசியல்வாதிகள் மொழிப்பிரச்சினையை வைத்து அரசியல் செய்யமுன்வந்தமையால் அந்தத் திட்டங்கள் தோல்வியடைந்தன.

இந்தியா ஒரு பன்மொழிச் சமூகம் வாழ்கின்ற நாடு. உலகில் அதிக மொழிகள் வழக்கில் உள்ள தேசங்களில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் சுமார் 1652 இற்கும் மேற்பட்ட மொழிகள் பேச்சு வழக்கில் உள்ளன. 2001ஆம் ஆண்டின் கணிப்பின்படி இந்தியாவில் 29 மொழிகள் ஒரு பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்றன. 122 மொழிகள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்றன. இந்தியாவில் ஹிந்திதான் அரச கருமமொழி. இணைப்புமொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது.

இந்தியாவின் அரச கருமமொழிகளாக 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அசாமியம், வங்காளம், குஜராத்தியம், ஹிந்தி, கன்னடம், கஸ்மீரியம், கொங்கணியம், மலையாளம், மணிப்புரியம், மராட்டி, நேபாளி, ஒரியம், பஞ்சாபி, சம்ஸ்கிருதம், சிந்தியம், தமிழ், தெலுங்கு, உருது, மைதிலியம், போடோயம், சாந்தளியம், தோக்ரியம் என்பனவே இந்தியாவின் பல்வேறு அரச கரும மொழிகளாகும்.

ஆயினும் இத்தகைய பல்வேறு மொழிகள் வழக்கிலுள்ள இந்தியாவில் மொழியை அடிப்படையாகக்கொண்ட புறக்கணிப்புக்களால் போர் எதுவும் மூண்டதில்லை

கவிஞனாய் இருந்த அணு விஞ்ஞானியான இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் சுமார் அரை மணிநேரம் அலரிமாளிகையில் தொடக்கி வைக்கப்பட்ட மும்மொழி நிகழ்வில் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசினார்.

"நண்பர்களே! இந்த மேன்மைதங்கிய விழாவில் பங்கேற்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. நான் டெல்லியிலே இருந்து கொழும்புநோக்கி விமானத்தில் பயணிக்கும் போது நான் உங்களுடன் எதைப்பற்றிப் பகிர்ந்துகொள்ளலாம் என்று சிந்தித்தேன். நண்பர்களே, எனக்குக் கவிதைகள் பிடிக்கும். அதனால் சுமார் 50 நிமிட விமானப் பறப்பு நேரத்தில் "இலங்கை இளைஞர்களின் கனவு". எனும் ஒரு கவிதையை உங்களுக்காகப் படைத்தேன்

**"எனக்குள் ஒரு கனவு இருந்தது**
**அது இன்னும் இருக்கிறது.**
**அது சமாதானத்துக்கான கனவு.**
**வெற்றி மேல் வெற்றி பெறும் செழிப்புக்கான கனவு.**
**அது ஒரு பூரணச்சந்திர நோன்மதி இரவின் குளுமையில்**
**தெய்வீகத்தன்மை வாய்ந்த புனிதமான ஒளியில்**
**சூழ்ந்துள்ள கடலலைகளின் ஓசையில்**
**இலங்கைத்தீவு முழுவதும் கட்டுண்டு திளைத்திருந்தது.**
**வடக்கிற்கும் தெற்கிற்கும்**
**கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான பயணம்**
**இரண்டு கோடி இதயங்களைத் தொட்டு**
**நோவுகளையும் வலிகளையும்**
**ஆதரவு எனும் ஔசதத்தால் அகற்றுகிறது.**
**அப்பொழுது தெய்வீக அசரீரி ஒலிக்கிறது**
**"ஓ இலங்கைத் தாயின் இளையவர்களே!**
**இறைவனின் அருளால்**
**நீங்கள் வழிகாட்டப்பட்டவர்களாக இருக்க முடியும்.**
**இலங்கையராகிய நீங்கள்**
**அன்பு ஆதரவு எனும் ஒளிக்கதிரை**
**எங்கெங்கும் வீசச் செய்ய முடியும்.**
**இலங்கையின் ஒவ்வொரு உள்ளங்களும்**
**அன்புடனும் ஆதரவுடனும்**
**வெற்றி மேல் வெற்றி பெறும் செழிப்பையும்**
**சமாதானத்தையும் கொண்டு வரமுடியும்.**

என்று கூறிக்கொண்டிருந்தது என்று தனது கவிதை வரிகளை இலங்கையின் இளைஞர்களுக்காக அர்ப்பணித்திருந்தார்.

சின்னச் சின்னக் கனவுளைச் சுமந்து திரியாமல் உன்னதமான கனவுகளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தை வெல்லுங்கள். மனதையும் புவிக்கோள மண்டலத்தையும் தூய்மையாக வைத்திருங்கள் என்றும், அவர் இளைஞர்களைப் பார்த்து அறைகூவல் விடுத்திருந்தார். இது பல வருடங்களுக்கு முற்பட்ட கதை. மொழியுரிமையும் சமாதானமும் அரசியல்மைப்பிலிருந்து தொடங்கப்படவேண்டும்.

நாட்டின் தேசியமொழி சிங்களம் அதேவேளை 'தமிழும்' அரசகரும மொழியென்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இது முதலில் மாற்றப்படவேண்டும். அதிலிருந்து தேசிய நல்லிணக்கம் ஆரம்பிக்கப்படவேண்டும். என ஜே.வி.பி. எம்.பி. டொக்டர் நளின் த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், கடந்த வியாழக்கிழமை (17.12.2015) இடம்பெற்ற தேசிய கலந்துரையாடல் அமைச்சு, மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இனங்களிடையே தேசிய நல்லிணக்கத்தை வெறுமனே பேச்சுவார்த்தைகளை நடத்துவதால் மட்டும் ஏற்படுத்திவிடமுடியாது.

எமது அரசியலமைப்பில் சிங்களம் இலங்கையின் தேசிய மொழி என்றும் "தமிழ்" அரச கருமமொழியென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதை நீக்கிவிட்டு இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் தேசிய மொழிகள் என எழுதப்படவேண்டும். அதுமட்டுமல்ல, ஆங்கிலத்தையும் அதனோடு இணைத்துக் கொள்ளவேண்டும் அவ்வாறான மன நிலை எம்மிடையே ஏற்படவேண்டும். அனைத்து இனங்களுக்கும் மதங்களுக்கும் சமஅந்தஸ்து வழங்கப்பட வேண்டும். பிரித்தாளும் முறைமை கைவிடப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் என்றார். தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் நாட்டில் மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் மாத்திரமே தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்பதில் நாம் தெளிவாக இருக்கவேண்டும். நாட்டில் தேசிய மொழிக் கொள்கை அமுல்படுத்தப்பட்டால்தான் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான அதிகாரப்பகிர்வும் இடம்பெறும்.

மொழி உரிமை வழங்கப்படாவிட்டால் இந்நாட்டில் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்று தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் 17.12.2015 அன்று சபையில் தெரிவித்தார். அரச நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளும் இரண்டாம் மொழியில் தேர்ச்சிபெற்றிருப்பது அவசியமாகும்.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

தமிழ்க் குடிமகனோ சிங்களக் குடிமகனோ தனது தேவைகளை தாய் மொழியில் பூர்த்திசெய்து கொள்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன் 25 மாவட்டங்களிலும் 25 கலந்துரையாடல் நிலையங்களை ஸ்தாபிக்கப்போவதாகவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2016 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சுமீதான குழுநிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மனோகணேசன் இந்த விடயங்களைக் கூறினார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தேசிய கலந்துரையாடல் அமைச்சு என்பது வேண்டுகோளின் பேரிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் ஆலோசனையின் அடிப்படையிலும் தற்போது தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசமொழிகள் அமைச்சு என்றே வழங்கப்படவுள்ளது. இதனை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அந்தவகையில் இதற்கான அறிவிப்பு இன்னும் சிலதினங்களில் உத்தயோகபூர்வமாக வெளிவரும் என்று நம்புகிறேன். எனது அமைச்சின்கீழ் அரசமொழிகள் திணைக்களம், அரசமொழிகள் ஆணைக்குழு, தேசிய மொழிகள் செயலகம் மற்றும் அரசு சார்பற்ற செயலகங்களும் அமைந்துள்ளன.

அந்தவகையில் இந்நாட்டின் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற கடப்பாடும், அதேபோன்று இனங்களுக்கிடையில் மதங்களுக்கிடையில் சமத்துவம் மிக்க சகவாழ்வை கட்டியெழுப்பவேண்டும் என்ற கடப்பாடும் என இரண்டு வகையான பொறுப்புக்கள் எம்மீது ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மொழிகள் திணைக்களம், ஆணைக் குழுக்கள், அமைச்சு, அதேபோன்று அமைச்சரும் இருந்துள்ளார். ஆனாலும் எமது நாட்டில் மொழிக் கொள்கையை ஏற்படுத்துவதற்கு அரச திடப்பாடு இல்லாதிருந்துள்ளது. இது தொடர்பாக முன்னாள் அமைச்சரையோ அல்லது முன்னைய அரசாங்கத்தையோ நான் குறைகூறவில்லை.

1956ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள மட்டும் சட்டம் அதனைத் தொடர்ந்து அரச மொழிகள் ஆட்சி மொழித்திணைக்களம் வந்ததன் காலகட்டத்திலிருந்து வெறுமனே காகிதத்தில் வரையறுக்கும்வகையில் தான் மொழிக் கொள்கை இருந்துவந்துள்ளது.

எனினும் எமது அரசாங்கத்திற்கு குறிப்பாக எனக்கு இந்நிலைமைகளை மாற்றியமைப்பதற்கான கடப்பாடும் அதேநேரம் திடப்பாடும் இருக்கிறது.

ஆகவே இனிவரும் காலங்களில் மொழிக்கொள்கையில் எவரும் விளையாட முடியாது. அதனை நகைச்சுவைக்கும் உட்படுத்தமுடியாது. கேலிக்கும் உட்படுத்த முடியாது. அரச திணைக்களங்கள் சரியான வழியில் மொழிக் கொள்கையை அமுல்படுத்தியே ஆகவேண்டும். அவ்வாறு செய்வதிலிருந்து தவறினால் கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்பதை இவ்விடத்திலே முன் எச்சரிக்கையாக கூறிவைக்க விரும்புகிறேன்.

பாடசாலைகளில் ஒன்பதாம் வகுப்பு வரையில், தமிழ் மாணவர்கள் சிங்கள மொழியை கற்பதற்கும், சிங்கள மாணவர்கள் தமிழ்மொழியை கற்பதற்கும் ஏற்பாடுகள் இருக்கின்றன. அவ்வாறு பயிற்றுவிக்கப்படுகின்ற மொழிப் பாடங்கள் தகுதி வாய்ந்தவையாக இருக்கின்றனவா என்பது தெரியவில்லை. அங்கு இரண்டாம் மொழிகளை பயிற்றுவிப்பதற்கான ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதே நிலைதான் ஒன்பதாம் வகுப்புக்கு மேலுள்ள மாணவர்களுக்கும் ஏற்பட்டிருந்தது. அந்தவகையில் 5000 முதல் 6000 வரையிலான இரண்டாம் மொழி கற்பித்தல் ஆசிரியர்கள் இல்லாதுள்ளனர்.


எப்படியிருப்பினும் அரச நிறுவனங்களில் கடமைபுரிகின்ற அதிகாரிகள் தமிழராக இருந்தால் சிங்கள மொழியையும் சிங்களவராக இருந்தால் தமிழ் மொழியையும் நிச்சயமாக தெரிந்திருக்க வேண்டும்.

பொலிஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள், மருத்துவ நிலையங்கள், உள்ளூராட்சி நிறுவனங்களான மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை ஆகிய அரச நிறுவனங்களில் எல்லாம் நாம் இதனை மேற்கொள்ளவுள்ளோம்.



# மூட்டுவாதம்

## மருத்துவம்




### மூட்டுவாதம் என்றால் என்ன?

உடலிலுள்ள சிறிய, பெரிய மூட்டுக் களை பாதித்து மீண்டும் மீண்டும் வீக்கத்தையும் நோவையும் விறைப்பை யும் ஏற்படுத்தும் ஒரு நீண்டகால நோயாகும். மூட்டுக்களின் வீக்கம், நோவு, நிறமாற்றம் வேலை நிகழாமை என்பன இந்த நோயினால் ஏற்படும்.

### எப்படிப்பட்ட மக்களுக்கு இந்த நோய் வரக் கூடும்?

நடுத்தர வயதுள்ள பெண்களுக்கே ஆண்களிலும் பார்க்க பொதுவாக இந்த நோய் ஏற்படுகிறது. பிள்ளை களை மிகவும் அரிதாகவே இந்த நோய் தாக்கும். பரம்பரையாக ஒரு குடும்பத்திலிருந்து இன்னொரு குடும்பத்திற்கு மிகஅரிதாகவே கடத்தப்படலாம். அதாவது உங்கள் பிள்ளைகளுக்கு இந்நோய் வர வாய்ப்புக்குறைவு. உங்கள் வாழ்க்கைத் துணைக்கோ அல்லது உங்களுடன் சம்பந்தப்பட்ட வேறு எவருக்கும் இது தொற்றமாட்டாது.

### முடக்குவாதம் எதனால் உண்டாகிறது?

சரியான காரணம் தெரியாது. சரீரத்தில் ஏதோ ஒரு எதிர்ப்புசக்தியின் குறைபாடாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

### வாதமும் முடக்குவாதமும் ஒன்றா?

**மூட்டுவாதம் தொடர்பாக மருத்துவர் சங்கரிடம் தினமுரசு கண்ட விசேட நேர்காணல்**

இல்லை. வாதச்சுரமானது பிள்ளை களிலும் இளம் வாலிபர்களிலும் காணப்படும் வேறொரு நோயாகும். அவர்களுடைய இருதயமும் மூட்டும் பாதிக்கப்படுகின்றன.

### மூட்டு உருக்குலைவு ஏற்படுகிறது?

நாடா போன்ற அனேக இழையங் களே மூட்டுக்களை நிலையாக வைத்திருக்கின்றன. முடக்குவாத நோயினை இதற்கு கீழே கூறப்படும் பராமரிப்பு முறையினால் தடுத்துக்கொள்ளலாம்.

ஒரு மூட்டிலே அதிக நோவு உண்டானால் இந்த மூட்டுக்கு கட்டாய இளைப்பாறுதல் கொடுத்தல் அவசியம். முழங்கால் அல்லது முழங்கையடியாயிருந்தால் அதை அசைக்காது கட்டிலில் போட்டு வைப்பது மூட்டுக்கு கூடுதலான ஆறுதலைக் கொடுக்கும்.

கடுமையான நோவு 1, 2 நாட்களில் குறைந்ததும் (மருந்தின் உதவியுடன்) ஒரு நாளைக்கு 2,3 முறை அந்த மூட்டை முற்றாகவோ அல்லது கூடியளவிற்கோ நோவு ஏற்படாதவாறு அசைக்கவேண்டும்.

முழங்காலின்கீழ் தலையணை வைக்கவேண்டாம். தாக்கப்படாத பாகமும் நாளைக்கு பல தடவைகள் அசைக்கப்படவேண்டும்.

இடுப்புப்பூட்டிலே தாக்கம் உண்டானால் நாள் ஒன்றுக்கு 2,3 மணித்தியாலம் வயிற்றிலே படுத்தால் அந்த நிலையான உருக்குலைவு இடுப்பு பூட்டிலே உண்டாவதை குறைக்கலாம். அனேக நாட்களுக்கு ஒரு மூட்டு பாவிக்கப்படாதிருந்தால் சுற்றியுள்ள தசைகளில் தேய்வு உண்டாகும்.

### அப்பியாசம் எந்தவிதத்தில் உதவிசெய்கிறது?

வெவ்வேறு விதமான அப்பியாச சிகிச்சை முறைகள் உண்டு.

வெப்ப சிகிச்சை மூலமாக அதாவது மின்கதிர் உபகரணங்கள், உருக்கப்பட்ட மெழுகுகள் கைகளை அமிழ்த்துவதனாலும் மின்கதிர்களை வீசும் விளக்குகளைப் பாவிப்பதனாலும், மூட்டுக்களின் நோவு விறைப்பு என்பனவற்றைக் குறைக்கலாம். மின்கதிரும் அப்பியாசமும் மூட்டுக் களின் ஆட்ட அசைவுகளுக்குப் பெரிதும் உதவுகின்றன. நீங்கள் இப்படியான அப்பியாசச் சிகிச்சை முறை வசதிகள் உள்ள வைத்தியசாலைக்கு அண்மையில் இல்லாவிட்டால் வீட்டிலே குறிப்பிட்டவற்றைச் செய்து பார்க்கலாம்.

ஒவ்வொரு நாளும் இரண்டு முறை பாதிக்கப்பட்ட மூட்டுக்களுக்கு 5 நிமிடம்வரை கொதிநீர் ஒத்தணம் கொடுக்கலாம்.


கைவிரல்கள் பாதிக்கப்பட்டிருந்தால் விரல்களை ஒரு கோப்பை இள வெந்நீரில் வைத்தபடி ஆட்டி அசைத்து 5 - 15 நிமிடங்கள் வரை அப்பியாசம் செய்யலாம்.

### மூட்டுவாதம் சீவியகாலம் வரை நீடிக்குமா?

இது நீண்டகால நோய்தான். என்றாலும் மருந்தினாலும் அப்பியாசத்தினாலும் இடையிடையே ஒரு மாதமோ அல்லது வருடமோ குறைந்திருக்கலாம். சிலவேளைகளில் குறைந்திருந்த நோய் சடுதியாக நோய்க்குறிகளுடன் தோன்றவும் கூடும். அப்படியானால் தீவிரமான அப்பியாசம் செய்யவேண்டி ஏற்படும்.

---

# புகைப்பிடிப்பவர்களின் அருகில் இருப்பவர்களுக்கு ஏற்படும் நோய்கள்



சிகரெட்டுகளில் 4000-க்கும் மேற்பட்ட நச்சுப்பொருட்களும், 200 வகையான விஷப் பொருட்களும், மற்றும் புற்றுநோயை உருவாக்கும் 60 இரசாயனப் பொருட்களும் அடங்கியுள்ளன. புகையிலை யாரையும் விட்டு வைப்பதில்லை. மற்றவர்கள் புகைக்கும்பொழுது வெளி வரும் புகைகூட நச்சு தன்மையுடையது.

உயிருக்கு ஊறு விளைவிக்கும். அடுத்தவர் புகைக்கும் பீடி அல்லது சிகரெட்டில் இருந்து வெளிவரும் புகைதான் இரண்டாம்தர புகையிலை புகை எனப்படும் ஆகும். (Second- hand Smoke). இவ்வகை இரண்டாம் தர புகையிலை புகை என எல்லோருக்குமே பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியது. வயது வந்தோர், புகைப்பழக்கம் இல்லாதவர்கள், இளம் குழந்தைகள், மற்றும் பச்சிளம் குழந்தைகள், ஆகியோர் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

**அதிக விளைவை ஏற்படுத்தக்கூடிய நோய்கள்:**


* நெடுநாள் சுவாசப்பாதை நோய்கள், ஆஸ்துமா, காசநோய் மற்றும் அடிக்கடி ஏற்படும் சுவாசப்பாதை நோய்கள்.
* இருதய இரத்தக்குழாய் நோய்கள்.
* நுரையீரல் புற்றுநோய் திடீர் சிசு மரணம் உண்டாக்கும் நோய்கள். (கட்டில் இறப்பு)

**பெண்களுக்கு ஏற்படக்கூடிய உடல்நலக் கோளாறுகள் :**

* குழந்தை பிறப்பு குறையும் பாதிப்புகள்.
* எடை குறைந்த குழந்தைகள்.
* குழந்தை பிறக்கும் கர்ப்பப்பை கழுத்துப் பகுதியில் புற்றுநோய்.

---

# சிறுநீரகம் பாதிப்படைந்துள்ளதை அறிய உதவும் பரிசோதனைகள்



பொதுவாகக் கட்டுப்படாத நீரிழிவு நோய், கட்டுப்பாட்டில் இல்லாத இரத்தஅழுத்தம், புகைப்பிடித்தல், மதுஅருந்துதல், சிறுநீரகத்தொற்றுகள், சிறுநீரகக்கற்கள், உடற்பருமன், காசநோய், வலி நிவாரணி மாத்திரைகளின் பக்கவிளைவு, உணவு நச்சுகள், புராஸ்டேட் வீக்கம், புற்றுநோய் போன்றவற்றால் சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது.

இந்தப் பாதிப்புகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துச் சிகிச்சை பெற்றுவிட்டால் பிரச்சினைகள் குறையும். தவறினால், நாளடைவில் எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்குச் சிறுநீரகம் செயலிழந்துவிடும். சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டால், கீழ்க்காணும் அறிகுறிகள் தோன்றும்:

* சிறுநீர் பிரிவது குறையும்.
* கடுமையான சோர்வு ஏற்படும்.
* உடலில் அரிப்பு உண்டாகும்.
* முகம் மற்றும் கைகால்களில் வீக்கம் தோன்றும்.
* மூச்சிளைப்பு ஏற்படும்.

சிறுநீரகப் பாதிப்பு இரண்டு வகைப்படும்:

1. உடனடி பாதிப்பு.
2. நாட்பட்ட பாதிப்பு.

என்ன பரிசோதனைகள்?

* இரத்த யூரியா அளவு.
* இரத்த யூரியா நைட்ரஜன் அளவு.
* இரத்த கிரியேட்டினின் அளவு.
* ஜி.எ.ப்.ஆர். (GFR Glomerular Filtration Rate) அளவு.
* வயிற்று அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், ஐ.வி.பி. பரிசோதனை (Intravenous pyelogram IVP), சி.டி. ஸ்கேன், எம்.ஆர்.ஐ.ஸ்கேன் பரிசோதனைகள்.
* சிறுநீரில் மைக்ரோ அல்புமின் அல்லது அல்புமின் பரிசோதனைகள்.
* சிறுநீரில் 24 மணிநேரப் புரத அளவுப் பரிசோதனை.
* சிறுநீரில் புரதம் அல்லது அல்புமினுக்கும் கிரியேட்டினின் அளவுக்குமுள்ள விகிதாச்சாரம்.

பரிசோதனை முடிவுகள்:

* இரத்த யூரியா அளவு, 20 - 40 மில்லி கிராம்.'. டெ.சி. லிட்டர் என்று இருக்க வேண்டும் இதற்கு மேல் யூரியா அளவு அதிகமானால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம்.
* இரத்த யூரியா நைட்ரஜன் சரியான அளவு 7 - 20 மி.கி.'..டெ.சி. லீற்றர்.
* இரத்தக் கிரியேட்டினின் அளவு ஆண்களுக்கு 0.7 - 1.4 மி.கி.'..டெ.சி. லீற்றர், பெண்களுக்கு 0.6 - 1.3 மி.கி..'. டெ.லி., குழந்தைகளுக்கு 0.5 - 1.2 மி.கி..'.டெ.லி., என்று இருக்கவேண்[illegible]ற்கு மேல் அளவுகள் அதிகமானால் சிறுநீரகம் [illegible]டும்.
* இரத்த யூரியா அளவும் இரத்த யூரியா கிரியேட்டினின் அளவும் பலமடங்கு அதிகம் என்றால், அது உடனடி சிறுநீரகப் பாதிப்பைக் குறிக்கும்.
* சோடியத்தின் அளவு 135 142 மில்லிமோல் அல்லது லீற்றர், பொட்டாசியத்தின் அளவு 3.5 5 மில்லிமோல் அல்லத லீற்றர், கல்சியத்தின் அளவு 9 11 மி.கி./டெ.லி. என்று இருக்கவேண்டும்.
* ஜி.எ.ப்.ஆர். அளவு ஆண்களுக்கு நிமிடத்துக்கு 95 - 115 மி.லீ பெண்களுக்கு 85 110 மி.லி. இருந்தால் சரியான அளவுதான். 70 வயதுக்குமேல் உள்ளவர்களுக்கு இது நிமிடத்துக்கு 60 மி.லி. என்ற அளவில்தான் இருக்கும். இது அவர்களுக்கு இயல்பான அளவு.
* ஜி.எ.ப்.ஆர். அளவு நிமிடத்துக்கு 60 மி.லீ.க்குக் குறைவாக 3 மாதங்களுக்கு மேல்நீடித்தால், அது நாட்பட்ட சிறுநீரகப் பாதிப்பைக் குறிக்கும்.
* ஜி.எ.ப்.ஆர். அளவு நிமிடத்துக்கு 15 மி.லி.க்குக் குறைவாக இருந்தால், சிறுநீரகம் முழுமையாகச் செயலிழந்துவிட்டது என்று அர்த்தம்.
* சாதாரணமாகச் சிறுநீரில் அல்புமின் புரதம் வெளியேறுவதில்லை. சிறுநீரகப் பாதிப்பின் ஆரம்பக் கட்டத்தில் நுண்புரதம் வெளியேறும். இதைத் தொடர்ந்து வெண்புரதம் வெளியேறும்.
* சிறுநீரில் 24 மணிநேரப் புரத அளவுப் பரிசோதனையில் 300 மி.கி.க்கு அதிகமாகப் புரதம் இருந்தாலும், சிறுநீரில் புரதம் அல்லது அல்புமினுக்கும் கிரியேட்டினின் அளவுக்குமுள்ள விகிதாச்சாரம் 0.2 முதல் 2 மி.கி.% க்கு மேல் இருந்தாலும் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அர்த்தம்.
* வயிற்றை ஸ்கேன் செய்துபார்த்தால், சிறுநீரகத்தின் அளவு, வீக்கம், சிறுநீரகக் கல், புராஸ்டேட் வீக்கம், சிறுநீர்ப்பை கட்டி, சிறுநீர்ப்பாதை அடைப்பு போன்ற விவரங்கள் தெரியவரும்.

- இதுவரை சொன்ன எல்லாப் பரிசோதனைகளையும் எந்தநேரத்திலும் செய்யலாம்.

# விளக்கு மட்டுமா சிவப்பு?




## மாடி வீட்டு ஏழை

அந்த இடத்தில் அப்போது நான் கண்ட காட்சி இன்னும் எனக்கு நினைவிருக்கிறது.

மறைவு தட்டிக்குப் பக்கத்தில் பாயை விரித்து என் தாயார் படுத்திருக்கிறாள். அவளுக்குப் பெண்மக்களைப் பற்றிய கவலை.

அருகில் சாவித்திரி அக்காள் உட்கார்ந்து அவளுக்கு விசிறிக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு தன் எதிர்காலத்தைப் பற்றி கவலை.

அதற்கு நேரே இந்த உள்பக்கத்து அறையில் ஒரு குத்துவிளக்கு எரிந்துகொண்டிருந்தது.

மேலே என் அத்தானின் படம் மாட்டப்பட்டு மாலைபோடப்பட்டிருக்கிறது. கீழே வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைப் பாயில் உட்கார்ந்தபடி வெள்ளம்போல் கண்ணீரில் மிதந்துகொண்டிருக்கிறாள் சுலோசனா அக்கா.

இந்த நேரத்தில் மாப்பிள்ளை வந்திருக்கிறார். அதுவும் தனியாக.

நான் என் தாயாரைக் கைத்தாங்கலாக எடுத்தபடி, நடத்திக் கொண்டுபோய், மாப்பிள்ளைக்கு எதிரே சிறிதுதூரத்தில் உட்காரவைத்தேன். மாப்பிள்ளை சொன்ன சேதி இதுதான்.

"அம்மா! என் பெயர் ஜெயச்சந்திரன். என் தந்தை இறந்துவிட்டார். தாய் மட்டும் இருக்கிறார். நாங்கள் ஐந்து சகோதரர்கள். எங்களுக்கு சகோதரி இல்லை. நான் அண்ணாலைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டம்பெற்று வேலையில்லாமல் இருக்கிறேன். கிராமத்தில் எங்களுக்கு ஒரு பெரிய வீடு உண்டு. அதைத் தவிர வேறு சொத்துக் கிடையாது.

உங்கள் மூத்த மாப்பிள்ளை உங்கள் குடும்பத்தைப் பற்றி அனைத்தும் என்னிடம் சொன்னார்.

வேலை இல்லாமல், கல்யாணம் செய்துகொண்டு குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுவது என்று நான் பயந்தேன். ஒரு தொழில் நடத்துவதற்கே தான் உதவிபுரிவதாகச் சொன்னார். என்னுடைய துரதிர்ஸ்டம் அவர் காலமாகிவிட்டார். பெண்ணைப் பற்றியும் அவர் சொன்ன விஷயங்களில் இருந்து இந்தக் குடும்பத்தில் சம்பந்தம் செய்துகொள்வதில் எனக்கு ஒரு ஆசை. என் தந்தை இறந்து இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன. அதனால் என் தாயார் வெளியே வருவதில்லை. பெண் கேட்க வந்தால், சில பெண் களாவது வரவேண்டும். எனக்கு சகோதரிகளும் இல்லை. ஊராரையோ, உறவின் முறையாரையோ அழைத்து வருவதைவிட நேரில்போவதில் தவறு இல்லை என்று நானே வந்துவிட்டேன். தப்பாயிருந்தால் மன்னித்துவிடுங்கள்.

அவர் உள்ளம் திறந்து பேசியது என்னை நெகிழவைத்தது.

என் தாயார் அவரைப் பார்க்காமல் தரையைப் பார்த்தபடி, "எங்கள் நிலையும் அதுதான் தம்பி. எங்களுக்காகப் பேசுவதற்காக இனி ஆண்பிள்ளைகள் யாரும் கிடையாது. ஆண்டவன்விட்ட வழி என்று பேசாமலிருக்கிறோம்." எங்களுக்கு வந்த துன்பம் இன்னொருவருக்கு வந்திருந்தால், குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள். ஒரு தப்பும் பண்ணாதவர்கள் ஏன் தற்கொலை



செய்துகொள்ள வேண்டும் என்றுதான் நாங்கள் உயிரோடிருக்கிறோம். சீர்செனத்தி என்று கைநிறையக் கொடுப்பதற்கு எங்களிடம் ஏதும் கிடையாது. கொஞ்சம் இருந்த காணியையும் விற்றாகிவிட்டது. ஏதோ கொஞ்சம்போட்டு அனுப்பக்கூடிய நிலையில்தான் இருக்கிறோம்."

"பரவாயில்லையம்மா – உங்கள் மூத்த மாப்பிள்ளை சொன்னதிலிருந்து பெண்ணைக்கூடப் பார்க்க வேண்டியதில்லை என்றே நான் கருதினேன். நாங்களும் ஏழைகள் தான். ஆனால் நான் படித்திருக்கும் படிப்பிற்கு ஏதாவது உத்தியோகம் கிடைக்கும். அதை நம்பித்தான் இந்தப் படி ஏறிக் கேட்கத் துணிந்தேன்" என்றார் அவர்.

அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே அவரை நான் நன்றாகப் பார்த்தேன். அவர் பிரமாத அழகாயில்லை என்றாலும், திருத்தமாக இருந்தார். விபூதிபூசி நெற்றியில் குங்குமம் வைத்திருந்தார். கதர்ச் சட்டை போட்டு, கதர் வேட்டி கட்டியிருந்தார். அவர் தேசபக்தியும், தெய்வபக்தியும் கொண்டவர் என்று என்னால் யூகிக்க முடிந்தது.

பணத்தை நம்பித்தானே ஒருத்தி பலியானாள். பணம் இல்லாவிட்டால் என்ன? குணம் இருக்கிறதே? ஏதோ கடவுள் எங்கள்மீது வைத்த கருணை, வருகின்ற மாப்பிள்ளைகள் நல்லவர்களாக இருந்தார்கள்.

உத்தியோகம் பார்த்தே சாப்பிட வேண்டியநிலையில் அவர் இருந்தாலும் பரவாயில்லை என்று எனக்குத் தோன்றிற்று. பிச்சை எடுத்தாலும் பெண்டாட்டியைக் கைவிட மாட்டார் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்தது.

ஆனால் நம் நாட்டில் உத்தியோகம் கிடைப்பதென்ன சாதாரண விஷயமா? அந்த நினைவே அப்போது எனக்கு வரவில்லை.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், என் தாயார் தலைகுனிந்தபடியே இருந்தார்கள். கண்கள் வழக்கம்போல் அழுதன.

சாவித்திரி அக்காளும் எப்படியாவது சுமங்கலியாகப் போய்விட்டால் போதும் என்ற நிலையில்தானே இருந்தாள்.

"கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்ற அஸ்திவாரத்தில் வளர்ந்தவள்தானே அவளும்?

அடுத்து யார் பேசுவது என்று தெரியாமல் சிறிதுநேரம் மௌனம் நிலவியது. பிறகு அவரே பேசினார்.

" அம்மா என்னை உங்கள் மகன்போல பாவித்துக்கொள்ளுங்கள். நான் உள்ள விஷயங்களை உள்ளபடியே சொல்லிவிட்டேன். எனக்கு அகடவிகடம் தெரியாது. நீங்களும் அப்படியே பேசிவிட்டீர்கள். நீங்கள் சம்மதித்தால் என் தாயாரைக் கலந்து மற்ற விஷயங்களை நான் ஏற்பாடு செய்கிறேன். உங்கள் சொந்தக்காரர்கள் யாராவது வருவதனால் அவர்கள் வந்து என் தாயிடம் பேசட்டும். இல்லையென்றால், திரைபோட்ட வண்டியில் என் தாயாரை அழைத்துவருகிறேன். நீங்கள் சமீபத்தில்தான் கணவரை இழந்திருக்கிறீர்கள். அதனால் நீங்கள் அங்கே வரமுடியாது. எப்படிச் சொல்கிறீர்களோ அப்படிச் செய்ய நான் காத்திருக்கிறேன்" என்றார் அவர்.

"எந்தச் சொந்தக்காரரை நம்ப முடிகிறது தம்பி? இங்கொன்று சொல்வார்கள். அங்கொன்று சொல்வார்கள். எப்படியாவது கெடுத்து விடத்தான் பார்ப்பார்கள். உங்களை நான் நம்புகிறேன். நீங்களே மகனாகவும் மருமகனாகவும் இருந்து பேசி முடியுங்கள்!" என்றாள் என் தாய்.

"நல்லதம்மா! நான் உடனே ஊருக்குச் சென்று மற்ற வேலைகளைக் கவனிக்கிறேன்" என்றார் அவர். புறப்படத் தயாரானார்.

நாங்கள் இத்தனை பெண்கள் இருந்தும் "கோப்பி சாப்பிடுகிறீர்களா? என்று அவரைக் கேட்கக் கூடத் தவறிவிட்டோம்.

அப்பொழுதுதான் நான் கேட்டேன். அவரே கோப்பி, டீ எதுவுமே சாப்பிடுவதில்லையாம்.

இன்றைய உலகத்தில் இப்படியும் ஒருவர்.

"இருங்க தம்பி! பெண்ணைப் பார்த்துவிட்டு போங்க!" என்றாள் என் தாய்.

அவர் மறுபடியும் பாயில் அமர்ந்தார்.

"ஜெயா அக்காளைப் பாரு" என்று ஈனசுரத்தில் சொன்னாள் என் தாய்.

நான்போய் சாவித்திரி அக்காளுக்கு அலங்காரம் செய்துவைத்தேன்.

வெறிச்சிட்ட பார்வையோடு அதைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள் சுலோசனா அக்கா. அவள் எதுவும் பேசவில்லை.

அலங்காரம் முடிந்ததும் சாவித்திரி அக்கா என்ன நினைத்தாளோ திடீரென்று அறைக்குள்ளே போய் சுலோசனா அக்காவின் காலில் விழுந்து அழுதாள்.

"சீ! பைத்தியம்; அறிவிருக்கா உனக்கு? மங்கலமான நேரத்தில் என்னை வந்து பார்க்கிறியே! போய் சாமி படத்தைக் கும்பிட்டுவிட்டுப் போ" என்றாள் அவள்.

எனக்கும் அழுகை வந்துவிட்டது.

சாவித்திரி அக்காவைக் கொண்டு வந்து மாப்பிள்ளையின் முன் நிறுத்தினேன். அவள் தலைகுனிந்து நின்றதுபோலவே அவரும் தலைகுனிந்து அமர்ந்திருந்தார்.

அவர் பார்க்கிறவரை அப்படியே நிறுத்திவைத்தேன். பிறகு எப்படியோ தைரியம்வந்து அவர் தலைநிமிர்ந்து பார்த்தார். அது என்னவோ, ராமனும் சீதையும் பார்த்துக் கொள்வதுபோலவே எனக்குத் தோன்றிற்று.

பின்பு அவளை உள்ளே அனுப்பி விட்டு, நான் துணிந்து அவரைப்பார்த்து, "பெண் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டுவிட்டேன்.

"தெய்வம் மாதிரி இருக்கிறது" என்றார் அவர்.

சேர்! உண்மையிலேயே எங்கள் வீட்டில் தெய்வங்கள்தான் இருக்கின்றன. எங்கள் தலை எழுத்துத்தான் சைத்தானாக இருக்கிறது. ஆனால், இந்த மாப்பிள்ளை எங்கள் வீட்டிற்கு மற்றொரு தெய்வம் வரப்போவது போலவே தோற்றமளித்தார்.

ஒரு நல்ல நாளில் எந்தத் தூரத்து உறவினரையும் அழைக்காமல் நெருங்கிய பந்துக்களை மட்டும் அழைத்துக்கொண்டு அவர்கள் எங்கள் வீட்டுக்குவந்தார்கள்.

நாங்களும் சுமார் 20 பேரை மட்டுமே அழைத்து சாவித்திரி அக்காவின் திருமணத்தை நடத்தினோம்.

சுலோசனா அக்காவின் மாமனார் மாமியாரை அழைத்திருந்தோம். ஆனால் அவர்கள் வரவில்லை. ஏன் தெரியுமா? அவர்கள் ஒரு பையனை சுவீகாரம் எடுத்து திருமணம் செய்து சொத்துக்கு வாரிசாக்க முடிவு செய்துவிட்டார்களாம். என் அக்காவுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை என்றும் தீர்மானித்துவிட்டார்கள். பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அவள் நிர்க்கதியாகிவிட்டாள்.

பொருளாதார வசதியே இல்லாத நிலையில் சாவித்திரி அக்கா மணமுடிக்கப்பட்டுவிட்டாள்.

இரவு சாந்தி முகூர்த்தத்திற்குப் பெண்ணை அனுப்பிவிட்டு நெஞ்சு வலிக்கிறது என்று சொல்லிக்கொண்டே வந்து படுத்தாள் என் தாய்.

அங்கே இரண்டு தேகங்கள் சாந்தி அடைந்த அதேநேரத்தில் இங்கே என் தாயின் ஆன்மா சாந்தியடைந்தது.

ஒருபுறம் மணக்கோலம். மறுபுறம் பிணக்கோலம்.

சேர்! நான் உங்களைக் கேட்கிறேன் கடவுள் இன்னும் உயிரோடிருக்கிறாரா?

(விளக்கு எரியும்)

வாரமொரு சிந்தனை

சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்

# பொருளாதாரச் சிந்தனைகள்



# ஏர் முனைக்கு நேர் இங்கே ஏதுவுமே இல்லை

இன்றைய பொருளாதாரம் எப்படி இருக்கிறது? வேளாண்மை பொருளாதார வகையில் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்! நாம் எங்கே போகவேண்டும்? நமது நாடு வேளாண்மை நாடு. ஆனல், இன்றைய தலைமுறையில் வேளாண்மைத் துறையில் போதிய ஆர்வம் இல்லை! அரசுப் பணிகளைவிட, வியாபாரத்தைவிட, விவசாயம் இரண்டாந் தரத்தொழில் என்று கருதப்படுகிறது. இது முற்றிலும் தவறு.

"சுழன்று ஏர்ப்பின்னது உலகம்
அதனால்
உழந்தும் உழவே தலை" என்றும்
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"
என்றும் திருக்குறள் கூறுகிறது.

உடலோடுகூடிய உயிர் வாழ்க்கைக்கு உணவுப் பொருள்கள் இன்றியமையாதன. உணவுப் பொருள்களை வழங்குவது விவசாயத்தொழிலே! அதனாலேயே "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!" என்று இலக்கியங்கள் பாராட்டுகின்றன.

நடைமுறையில் பால் தரும் பசு, புண்ணியமானது என்ற நம்பிக்கை இருந்துவருகிறது. ஆனால் தமிழர் வாழ்வியலில் எருதே முதன்மை பெற்றுள்ளது. நாம் வணங்கும் கடவுள் சிவபெருமான், தனது ஊர்தியாகவும், உயர்த்திப் பிடிக்கும் கொடியாகவும் பயன்படுத்துவது எருதுதான் என்பதை உணர்க. திருக்கோயில் முகப்பில் வரவேற்பதுவும் எருதே!

"உழத நோன் பகடு அழிதின்றாங்கு" என்ற புறனூற்று வரி என்றும் போற்றத்தக்கவரி. உழுததின் பயனாகிய செந்நெல் அரிசியை, செங்கரும்பின் சாற்றை மனிதஉலகத்துக்கு உண்ணக் கொடுத்துவிடும் பண்புடையவை எருதுகள். ஆதலால்தான், தமிழர் வாழ்வில் பொங்கல் விழா உழவர் திருநாளாக உருக்கொண்டது.

மனிதன் உண்டு உயிர் வாழ்தலுக்கு ஒரு நாளைக்குச் சராசரி எவ்வளவு உணவு - கூட்டுணவு தேவையோ அது அவனுக்கு கிடைக்கவில்லை. அதனால்

வலிமையிழந்து நிற்கின்றான். நமது நாட்டில் உணவுப்பொருள் உற்பத்தியைப் பன்மடங்கு அதிகரிக்கவேண்டுமென விவசாயத்துறை நினைக்கிறது. அன்றாடத் தேவைக்குரிய உணவுப்பொருள்களை உற்பத்தி செய்வதைக் கூடுதலாக்கவேண்டும்.

நமது நாட்டில் நெல் சாகுபடி செய்யும் நிலம் குறைந்துவருகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். முன்பு நெல் சாகுபடி செய்த நிலத்தில் பணப்பயிர் பயிரிடுவது தடை செய்யப் பட்டது என்பதை இத்தருணத்தில் நினைவு கொள்ளவேண்டும். இன்று விவசாய நிலங்களில் வீடுகள், கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இது முற்றுமுழுதுமாகத் தடை செய்யப்படல் வேண்டும். அடுத்து விவசாயத்திற்குத் தேவையான நீர் பற்றாக்குறையாக உள்ளது. இதனால் இரண்டுபோக சாகுபடி என்பது ஒரு போகமாக மாறிவிட்டது. வானம் பார்த்த பூமிகள் அதிகமாக நமது பிரதேசங்களில் காணப்படுகிறது. இதற்குப் பரிகாரம் உண்டு. நவீன விஞ்ஞான வளர்ச்சியை முற்றிலும் பயன்படுத்தவேண்டும். விவசாய பல்கலைக்கழகம் இதற்கான முன்னெடுப்புக்களை செய்யவேண்டும்.

நீர்த்தேவையைப் பொறுத்தமட்டில் நமது பிரதேசத்திலுள்ள குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு நீர்ச்சேமிப்பு செய்யப்படுவதுடன், நீண்டகாலமாகச் சொல்லப்படும் மகாவலியை வடக்குக்கு திருப்புதல் என்பது நடைபெற ஆவண செய்யப்படல்வேண்டும். தண்ணீரிலேகூட அரசியலைக் கலந்து பழக்கப்பட்ட நம் அரசியல்வாதிகள் தண்ணீரைவிட்டு - விலகியிருக்கவேண்டும். உருப்படியான நல்ல திட்டங்கள் கொண்டுவரப்படுவதை வரவேற்பதன்மூலம் ஒரு பசுமையைப் புரட்சியைச் செய்யமுடியும்.

மத்திய அரசின் 2015 வரவு - செலவுத் திட்டத்தில் விவசாய அபிவிருத்தி பற்றிய சில முன்மொழிவுகள் உள்ளன. சொட்டு நீர்ப்பாசன முறைபற்றிக் கூறப்பட்டுள்ளவை நமது பிரதேசங்களுக்கு பயனுடையதாக அமையும். தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டம் வரட்சி மாவட்டமாகும். இங்கு கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகத்தினரால் சொட்டு நீர்ப்பாசன முறையில் கத்தரி உற்பத்தி செய்யப்பட்டு மிகப்பெரிய சாதனை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தின் விவசாயத்துறை முன்னேற்றத்தை இங்கு கொண்டுவரமுடியும். முயற்சி தேவை.

மண் என்பது ஓர் உயிரியல் பொருள் என்பதை நம்மில் பலரும் உணரவேண்டும். நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மணலே, அதாவது ஏறத்தாள ஆறு அங்குல மேற்பரப்பே விவசாயத்திற்கு ஏற்றது. இப்புவிக்கோளத்தில் கல் தோன்றிய பிறகே மண்தோன்றியது. இந்த மண்தோன்ற குறைந்தது பத்து இலட்சம் ஆண்டுகள் பிடித்தன என்று உணர்ந்தால், நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மண் கண்டத்தின் அருமை நமக்குப் புரியும்.

மண் உயிரற்ற பொருள் அன்று. பல்வகை உயிரினங்களின் வாழ்விடம் அது. நுணுக்குக்காட்டிக்குப் புலப்படாத வைரஸ் முதல் பக்ரீரியா, பங்கஸ், புரட்டசோவா, மண்புழு, எறும்பு, இன்னும் பிற பூச்சிகள், உயிரினங்கள் அதில் வாழ்ந்துவருகின்றன. ஒரு கைபிடி மண்ணில் கோடானகோடி உயிர்கள் இருக்கின்றன. அவற்றில் சில, சூழ்நிலை செம்மையாக வாய்த்திருப்பின் மிகமிக விரைவாகப் பெருக்கமடைகின்றன. குளிர்மண்ணில் உயிர்களுடைய செயல் குறைகிறது. மண்ணில் ஈரம், வெப்பம், காற்று ஆகிய மூன்றும் செவ்வையாக அமைந்தால் அவ்வுயிர்களுக்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படுகிறது.

சுறுசுறுப்பாக மண்புழுக்கள் நிறைந்திருக்கும் மண், வளம் நிறைந்திருப்பதை உணர்த்தும். அதேபோல் பல்வகை உயிரினங்கள் கண்ணுக்குப் புலனாகாவிடினும் ஒரு வாரத்தில் எண்ணற்றனவனாக கணக்கிலடங்காதனவாகப் பல்கிப்பெருகி வளர்கின்றன. மண் வளம் என்பது அளவற்ற சொத்து மதிப்புடையது. வேளாண்மை பொருளாதாரத்தின் உயிர்நாடி, மண் வளத்தை இரசாயன உரங்கள்மூலம் பாதுகாக்கமுடியாது. இரசாயன உரங்கள் உரம் என்பது கூறப்படுவதே; ஒரு உபசார முறைதான்.

மண்வளம் குறைதல் ஒரு நாட்டு மக்களின், வாழ்க்கை வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகும். மனிதனின் உடல்நலிவுக்கு ஊட்டச்சத்து இன்மை காரணம். ஊட்டச்சத்துத் தரும் உணவின்மைக்குக் காரணம் விவசாயச் சீர்குலைவு.

நவீன விவசாய முறையால் மண் பரிசோதனை என்பது முக்கிய இடம்வகிக்கிறது. வயல், தோட்ட மண்களின் மாதிரி இரசாயனச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அந்த மண்ணுக்கு தேவையான மூலகங்களை தேவையான அளவில் இட்டு மண் வளத்தைப் பேணுதல் வேண்டும். மண் பரிசோதனைக்கான ஆய்வுகூடங்கள் சரியான முறையில் செயற்படுதல் வேண்டும். விவசாய அமைச்சின்கீழ் உள்ள கமநலசேவை நிலையங்கள் திறம்பட இயங்கவேண்டும். இயற்கை உரத்தைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும். இரசாயனப் பூச்சிமருந்துகளில் மிகையான பயன்படுத்துகை ஏற்படுத்தி வரும் தீங்கினை எழுதுகிறோம். ஆனால் மாற்றம் வருவதில்லை. பாமர விவசாயி களுக்கு நவீன முறைபற்றி எடுத்துக் கூறவேண்டும். இன்று யாழ். மாவட்டத்திற்கு தேவையான மரக்கறிகளை வெளி மாகாணங்களிலிருந்து கொண்டுவரும் நிலைமை இருப்பது நல்லதல்ல. சுயதேவைப் பூர்த்தியை நோக்கி எல்லாவகையிலும் நமது சிந்தனை செல்லவேண்டும்.

இப்பொழுது நமது நாட்டில் அதிகளவு சுலோகங்கள் ஒலிக்கின்றன. இவற்றில் ஏதாவது நடைமுறை சாத்தியமானதா? என்று சிந்திக்கவேண்டும். மக்களுக்கு நாட்டுக்கும் இன்று அத்தியாவசியமாகத் தேவைப்படும் சுலோகங்களை ஆங்காங்கே காட்சிப்படுத்தி வைக்கவேண்டும்.

01. நிலத்தினை உழாமல் தரிசாகப் போடாதீர்.

02. நிலத்தினை மேடு பள்ளமாக அமையவிடாதீர்!

03. சமநிலைச் சமுதாயம் காணமுதல் முயற்சி, சமநிலை நிலஅமைப்பு!

04. பெய்யும் மழைநீர் நின்றும் நிற்காமலும் மெல்ல நிலமகளைத் தழுவி ஓடச்செய்வீர்!

05. மனிதனுக்கு ஆடைபோல, நிலத்திற்கு பசுமை ஒரு போர்வை.

06. கண்டபடி ஆடு, மாடுகளைக் கட்டுப்பாடில்லாமல் மேயவிடாதீர்!

07. விரைவில் கொள்ளை இலாபம் தரும் எதுவும் அழிவையே தரும்.

08. காடுகளை அழிக்கும் வெள்ளாடுகளைத் தவிர்ப்பீர்!

09. நிலத்தை ஊட்டிவளர்க்கும் செம்மறியாடுகளைச் சேர்த்திடுவீர்!

10. காற்றுத் தடுப்பு மரங்களை வேலிகள்தோறும் நடுவீர்!

11. காலத்தால் அமைந்த மண்வளத்தை இழக்காதீர்!

12. மண்வள இழப்பு, மனிதகுலத்திற்கு அழிவு என்று உணர்வீர்!

(தொடரும்)



# 'கடனாளி'

(15 ஆம் பக்கத் தொடர்...)

மனைவி எப்பிடி என்னைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறாளோ அதே மாதிரி மகளும் நடந்து கொண்டாள். கந்து வட்டிக்காரன் என்னை நெருக்கத் தொடங்கினான். அவனுக்கு பல பொய்களைச் சொல்லி சமாளித்துவந்தேன். கடையில் வீடுதேடி வரவும்தொடங்கிவிட்டான். அழகொல்லைப் பிள்ளையார் கோயில் மணியோசை என் காதில் விழுகின்றது. நேரம் நாலுமணி என்று அது சொல்லியது.

கோயில் மணியோசை வந்து என் பழைய ஞாபகங்களைத் திரைபோட்டு மறைத்துக்கொண்டது. இவ்வளவு நேரமும் நித்திரையின்றியே தவித்த எனக்கு கண்கள் எரியத்தொடங்கியது.

கடவுளே எந்தக் கடன்காரன் வீட்டைவருவானோ?? எனும் பயம் மனதை வாட்டி வதைக்க படுத்த பாயை சுற்றி வைத்துவிட்டு எழுந்தேன்.

பட்டாசுவெடிகள் எங்கும் வெடிக்கின்றது. ஆரவாரம் மகிழ்ச்சி எங்கும் களைகட்டிக் காணப்படுகிறது. தீபாவளி என்றால் சொல்லவும்வேணுமா? இன்று தீபாவளி என்பதனைக்கூட மறந்துவிட்டேன். ஒவ்வொரு வரியமும் புதுஉடுப்புகள் எடுத்துக்கொடுப்பேன். இம்முறை என்னிடம் காசு இருக்கவில்லை. அதனால் யாருக்குமே உடுப்பு எடுக்காமல்விட்டமை என் மனதை நெருடியது. இனியும் தீபாவளி வரும்தானே என்று எண்ணியவனாக பத்திரிகை கடைவரை சென்று பத்திரிகை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினேன்.

மகளும், மனைவியும் புத்தாடைகள் உடுத்திக்கொண்டு கோயிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். மகனும் புது ஜீன்ஸ், புதுச்சேட்டுடன் காணப்பட்டான். நான் அவனை பெருக்கப் பெருக்கப் பார்த்தேன். புரிந்துகொண்டவனாக "இது அக்கா எடுத்து தந்தவா அப்பா, அம்மாவுக்கும் புது சாறி, சட்டையெல்லாம் எடுத்துக்கொடுத்தவா அக்கா. உங்களுக்கு புது உடுப்பு அக்கா எடுத்துத் தரேல்லையே" மகனது கேள்விக்கு விடை சொல்லமுடியாது தவித்தேன் நான்.

"இந்தாங்கோ உங்களுக்கு பொலிசிலை இருந்து கட்டளைவந்தது. எங்கடை ஜீ.எஸ். தந்திட்டுப் போறார்"

கட்டளையைப் பிரித்தேன். வட்டிக்காரன்தான் முறைப்பாடு செய்திருக்கிறான். இனிமேல் யாரையும் நம்பி பலன் இல்லை. மானம் மரியாதைபோவதற்குள் நான் அந்த முடிவை எடுத்தேன்.


பத்திரிகையில் வெளிவந்த செய்தியை படித்து, அந்த தொலைபேசி எண்ணுக்கு அழைத்துப் பேசினேன். முப்பது நிமிடத்தில் வாகனத்துடன் வருவதாக சொன்னார்கள். நான் புறப்படத் தயாராக இருந்தேன். "அப்பா என்னப்பா உங்கட சேட் முதுகுப் பக்கத்திலை கிளிஞ்சிருக்கு" மகன் கேட்டான்.

"வேறை சேட் என்னட்டை இல்லை. பரவாயில்லை போட்டுவருவம்" வாசலில் வாகனம் வந்து நின்றது. நான் வாகனத்தை நோக்கிப்போனேன். அந்த நேரம் தபால்காரனும் வந்தான். நல்ல சகுனம் என்று எண்ணினேன்.

கடிதத்தைப் பிரித்துப் படித்தவன் "அப்பா எனக்கு மட்டக்களப்பு கம்பசிலை இடம் கிடைச்சிருக்கப்பா" சந்தோசப்பட்டேன். எனக்கு அழுவதா, சிரிப்பதா? எதுவும் தெரியவில்லை. மீண்டும் கடனாளி ஆகப்போகின்றேன் என்பது மட்டும் விளங்கியது. வாகனம் அந்த தனியார் வைத்தியசாலை வளாகத்தை வந்தடைந்தது. என்னுடைய கடனுக்காக எனது சிறுநீரகத்தை விற்பதற்காக வைத்தியசாலையை நோக்கி நடக்கின்றேன்.

# வாராந்த செய்திக்கொத்து

## ஏராளமான நாகபாம்புகள் வீடு, தோட்டங்களில் புகுந்ததால் மக்கள் அச்சத்தில்



இரத்தினபுரி கொடுக்கவல பகுதியில் உள்ள பல்லகவத்த, பிபிலகம் மாள, பலவின்ன ஆகிய கிராமங்களில் உள்ள வீடுகளில் கடந்த சில நாட்களாக நாகபாம்புகள் புகுந்துள்ளதால் அங்கு வாழும் மக்கள் பெரும்பீதியடைந்துள்ளனர். வீடுகளில் உள்ள அறைகள், பொருட்கள் நிரம்பியுள்ள இடங்களிலும் மற்றும் விறகுகள் குவிந்துள்ள பகுதிகளிலும், வாகனத் தரிப்பிடங்களிலும் பாம்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் பிரதேசவாசிகள் பீதியுடன் நாட்களைக் கழித்துவருகின்றனர்.

## யோஷித்த ராஜபக்ச காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதி



ஹெவ்லொக் விளையாட்டு கழகத்திற்கும் கடற்படை விளையாட்டு கழகத்திற்கும் இடையில் கொழும்பில் நடைபெற்ற றக்பி போட்டியில் முன்னாள் ஜனாதிபதியின் இரண்டாவது புதல்வர் யோஷித்த ராஜபக்ச காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.


## வவுனியா வடக்கில் தனிக்கல்லை அண்டியுள்ள 400 ஏக்கர் விவசாய நிலம் பறிபோகும் அபாயநிலை



வவுனியா வடக்கில் தனிக்கல்லு குளத்தை அண்டிய 400 ஏக்கர் விவசாய நிலம் பறி போகும் அபாயநிலையில் இருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். 1965ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட இக்குளம் கடந்த 50 வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளது. 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரங்களை அடுத்து இடம்பெயர்ந்த இப்பகுதி விவசாயிகள் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேறிய போது குறித்த குளத்தின்கீழான வயற்காணிகள் எல்லையோரத்தில் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவரால் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டுவந்தது.


ஆனால், மக்கள் தமது காணி ஆவணங்களைக் காட்டி அவற்றை அவர்களிடம் இருந்து மீட்டு, நெற்செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். 2012ஆம் ஆண்டு குறித்த குளத்தினை புனரமைப்புசெய்வதாக கூறி விவசாய திணைக்கள பொறியியலாளரால் 10 மில்லியன் ரூபாய் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால், அதன்பின் இன்றுவரை இக்குளமானது புனரமைக்கப்படவில்லை.

## நிதியமைச்சருக்கு எதிராக மருத்துவர் சங்கம் வழக்குப் பதிவு



நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக அரச மருத்துவர் சங்கம் உச்சநீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளது. எதிர்வரும் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தின்மூலம் மருத்துவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து அரச மருத்துவர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் இணைந்து நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். மருத்துவர்களுக்கான தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யும் நிதியமைச்சின் தீர்மானத்தை இடைநிறுத்துமாறு மருத்துவர் சங்க முக்கியஸ்தர்கள் தங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

## மக்களை இணைத்துக்கொண்டு அரசுக்கு எதிராகப் போராடும் காலம் வந்துவிட்டது!- மஹிந்த



தேசிய பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு வடக்கிலும் கிழக்கிலும் என்ன நடக்கின்றது? சர்வதேசத்தையும் புலம்பெயர் புலிகளையும் திருப்திப்படுத்தும் நோக்கில் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தவே அரசு முயற்சிக்கின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். அரசை எதிர்த்து மக்களை இணைத்துக்கொண்டு போராடவேண்டிய காலம் வந்துவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டார். மஹிந்த ஆதரவு அணியினரின் ஏற்பாட்டில் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நபர் தனக்குத் தானே தீமூட்டிய நிலையில் பொலிஸில் சரண்!




தாபரிப்பு வழக்கில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்குள் தனக்குத்தானே தீமூட்டிய நிலையில் புகுந்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை வடமராட்சியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் புனிதநகர் கற்கோவளத்தைச் சேர்ந்த துரைராசா பிரதீபன் (வயது-30) என்பவரே தீயில் எரிந்து எரிகாயங்களுக்கு உள்ளானார். குறித்த நபர் தாபரிப்பு வழக்கில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டநிலையில், பொலிஸாரிடம் சரணடையாது ஒளிந்து தலைமறைவாக இருந்து வந்துள்ளதாக தெரியவருகின்றது. இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக தனக்குத்தானே தீமூட்டி எரிந்த நிலையில் பொலிஸ் நிலையத்திற்குள் திடீரென இவர் புகுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வாக்குறுதி வழங்கிவிட்டு ஏமாற்றக்கூடாது மைத்திரி! வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கத் தலைவர் தெரிவிப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த கால அரச தலைவர்களைப் போன்று, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் ஏமாற்றக் கூடாது. நத்தார் தின நிகழ்வில் வைத்து ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை தேவ வாக்காகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறு வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## புதிய முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்த 10க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் எதிர்ப்பு



புதிய முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்த 10க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை அவசரமாக திருத்தி அதன் அடிப்படையில் தேர்தலை நடாத்த பத்துக்கும் மேற்பட்ட கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகள் கடந்த அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள தேர்தல் முறைமை மாற்றத்தை எதிர்த்துள்ளன.

## பாரிஸில் ஈழத்தமிழர் மீது ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதல்; ஆபத்தான நிலையில்



பிரான்ஸ் பாரிஸில் தொடருந்துப் பகுதியில் ஈழத்தமிழரான றொபின்ஷன் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத பிரிவின் ஒருவரால் கத்திக் குத்துக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது. ஈழத்தமிழர் அண்மையில் தொடருந்தில் பயணம் மேற்கொள்ளும் போது அராப் இனத்தவர் ஒருவர் புகைப்பிடிப்பதற்காக சிகரெட் இருந்தால் தரும்படி கேட்டுள்ளார். இவர் தான் புகைப்படிக்கும் பழக்கம் இல்லை எனவும் தன்னிடம் சிகரெட் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற குறித்த நபர் தன்னிடம் சண்டையிடும் நோக்கில் சுற்றி சுற்றி வந்ததாகவும் தன்னை தாக்கும் எண்ணத்துடன் பார்ப்பதாகவும் உணர்ந்த ஈழத்தமிழர் இவர் சற்றும் வித்தியாசமாக இருப்பதாக உணர்ந்து அவரைப் மடக்கிப்பிடித்து இவர் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதி இவரை பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைப்போம் எனக் கூறி அருகிலிருந்த பிரான்ஸ் இனத்தவரிடம் உடனே காவல்துறையினரை வரவழையுங்கள் என்று கூற அவர் உடனே காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.


சற்றும் எதிர்பாராதவிதமாக தன் முதுகில் கத்தியால் குத்திவிட்டு தப்பி ஓடிய ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதி, "ஓம் நான் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதி தான்" எங்களை யாரும் பிடிக்கமுடியாது. நாங்கள் பிரான்ஸ் நாட்டை எங்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவருவோம் அனைவரையும் வெட்டுவோம் என உரத்து கத்தியவாறு ஓடிச்சென்றுள்ளான்.


உங்கள் DD தொலைக்காட்சி

DD TV



பார்த்து மகிழ்ந்திடுங்கள் 60றக்கு மேற்பட்ட
மிகத்துள்ளியமான அலைவரிசைகளுடன்
இலகுவில் கையாளக்கூடிட Setup BOX



அழையுங்கள்:
011 315 8003

# வாரமொரு காரம்

நிரந்தரமான முன்னேற்றங்களிற் கப்பால் போலி கௌரவங்களிற்காக தமது வாழ்க்கையைப் போட்டு உடைக்கும் சமூகவர்க்கமாக எமது வடபுலம் இன்று மாறிவருகின்றது. செயற்பாடுகளின் செயல் வெளியீடு களின் தன்மையை நோக்காது அடுத்தவர்போல் வாழ அங்கலாய்க்கும் மானிடவர்க்கங்களாக நாம் மாறி வருகின்றோம். போரிற்குப்பின் பல வசதிவாய்ப்புக்களைக் கண்ட யாழ்ப்பாணம் உட்பட்ட எமது தமிழ் சமூகம் ஒரு விடயத்தில் மாத்திரமல்லாமல் பலவிடயங்களில் போலி கௌரவங்களில் மாத்திரமே விரும்பியதை சுயமாக சம்பாதித்து அடையும் நோக்கமில்லை. வெளி வேசத்தில் பகட்டை காட்டும் பக்குவமற்ற மனோபாவங்களெல்லாம் இன்று மேலோங்கிவிட்டன.

தன்னைப் பலவிடயங்களில் அர்ப்பணித்துக் கல்விகற்கும் உயர்கல்விச் சிந்தனைகளெல்லாம் இன்று பெருமளவில் அருகிவிட்டன. அதற்குப் பல காரணங்கள் உண்டு. தனியார்துறையில் தற்காலிக வேலைவாய்ப்புக்கள் பல பல ஆசைகளைக்காட்டித் தம்வசம் இழுக்கின்றன. உடன் கிடைக்கும் வேலைவாய்ப்புக்களின் உருப்படிகளை உணராமல் கல்வியை இடைநிறுத்திவிட்டு கடைத்தெருவோரம் குதிக்கின்றனர் பல இளைஞர்கள். மறுபுறத்தில்

## போலிக் கௌரவங்களில் மிதக்கும் யாழ்ப்பாணம்



அதிக ஈடுபாடு காட்டிவருகின்றன. இதனால் வடமாகாண அபிவிருத்திப் போக்கு புறந்தள்ளப்படுவது என்பது ஒருபுறமிருக்க, தனிப்பட்ட ஒவ்வொருவரினதும் வாழ்வியல் தூரநோக்கும் சிதைவுறப் போகின்றது என்பது திண்ணம்.

ஒரு புறத்தில் அரச தொழிலை மாத்திரம் எதிர்பார்த்து பாதி வாழ்க்கையை சிலர் பலிக்கடாக்கள் ஆக்குகின்றனர். மறுதுருவத்தில் எதிர்பாலார் கவர்ச்சிக்காக சுய முன்னேற்றத்தை சுட்டெரித்துவிட்டு ஏழு திசையும் அலைகின்றனர். ரய் கட்டிச் சப்பாத்துப்போட்டு பல்சரில் பறந்தால்தான் பக்குவமென நினைக்கின்றனர் சிலர். இதற்காக எடுக்கும் ஊதியத்தில் குறையிருந்தும் நிறைவாகக் காட்டிப் பறந்து திரிகின்றனர். கடின தொழில் செய்து சம்பாதித்த பணத்தில் சந்தோசம் காணும் மனப்பாங்குகளெல்லாம் இன்று அருகிவிட்டன. பரம்பரைத் தொழிலில் நாட்டமில்லை, தமது பெருமையைப் பெயர்சாற்ற கல்வியை வெறுக்குமளவிற்கு தரம் 5 இல் பெற்றோரால் திணிக்கும் செயற்பாடுகளால் உயர்கல்வி வெறுப்புச் சிந்தனை சுயரூபம் பெறுவதாக ஆய்வுகள் சொல்கின்றன. இதுவும் போலி கௌரவங்களை விரும்பும் பெற்றோரின் ஒரு சிந்தனை வடிவம்தான். மற்றைய பிரதேசங்களில் பெருமளவு இல்லாத ஓர் சமூகப் பித்தலாட்டம் இந்தத் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை.

கூலித்தொழில் காலியாகின்றது, தற்போது வேலிபோடும் போலிக் கௌரவங்களால் பரம்பரை தொழில் பாதியிலே நிற்கின்றன விரும்பி ஒருவரும் செய்யாததால். மரபுக் கலைகள் சாகின்றது. வளர்க்க ஆளிருந்தும் வருவார் யாருமில்லாமையால். கல்வியின் எல்லையைத் தொடும் சதவீதத்திற்கு அப்பால் கடைத் தெருவில் நிற்போர் அதிகமாயிற்று. வெளிநாட்டுக்காசு வெற்றிலையில் வருவதால் சிற்றலையை சிந்திக்க இடமின்றிப் போகின்றது.

பொய், களவு, வாள்வெட்டு, வன்முறைகள் எனப்பல எம் வாசலிற்கு வந்து நிற்கின்றதே தவிர நல்லவைகள் நாளுக்குநாள் சிதைந்துபோகின்றன. போதையில் பேதையைத் தேடும் இன்றைய இளவட்டங்களை எவ்வாறு மாற்றுவது என்பது தொடர்பாக அனைவரும் சிந்திக்கவேண்டிய கட்டாய காலமிது. பல வழிகளில் எமது சந்ததிகள் சரிந்துகொண்டு செல்கின்றன. தெரியாத தெளிவில்லாத சமூக மாற்றங்களால் பல விபரீதங்கள் உருவாகிவருகின்றன. சிந்தியுங்கள்; செயற்படுங்கள்; மாறுங்கள்; மாற்றுங்கள் இதுவே இன்றைய தேவையாகும்.

**கூலித்தொழில் காலியாகின்றது தற்போது வேலிபோடும் போலி கௌரவங்களால். பரம்பரை தொழில் பாதியிலே நிற்கின்றன விரும்பியொருவரும் செய்யாததால். மரபுக் கலைகள் சாகின்றது வளர்க்க ஆளிருந்தும் வருவார் யாருமில்லாமையால். கல்வியின் எல்லையைத் தொடும் சதவீதத்திற்கு அப்பால் கடைத் தெருவில் நிற்போர் அதிகமாயிற்று. வெளிநாட்டுக்காசு வெற்றிலையில் வருவதால் சிற்றலையை சிந்திக்க இடமின்றிப் போகின்றது.**

# இந்தவாரம் உங்கள் பலன்

(24.12.2015 தொடக்கம் 30.12.2015 வரை)

### மேடம்

வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்துசேரும் காலமாகும். அரசியல்வாதிகள் மிகவும் எச்சரிக்கை யுடன் பணியாற்றுதல் சிறந்ததாகும். குழந்தை களால் பெயர், புகழ் ஏற்படலாம். உற்றார் உறவினர்களால் மனநிம்மதி இன்மையும், காரணமற்ற பொருட்செலவுகளும் உண்டாகும். தாயின் உடல்நிலையில் ஏற்படும் பாதிப்புகளால் மருத்துவச்செலவுகள் வந்துசேரும். வடக்குத் திசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். நீண்டதூரப் பயணங்களின்மூலம் சந்திக்கவேண்டிய நபர்களை சந்திப்பதில் காலதாமதம் ஏற்படலாம். காதலர்கள் கவனமாக இருக்கவேண்டும். விவசாயிகள் நன்மை அடைவார்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகக் கவனம் தேவை. அடிமையாட்களால் பொருட்செலவுகளும் மனநிம்மதிக்குறைவும் ஏற்படலாம். தேவை இல்லாமல் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உள்ளது. சம்பந்தம் இல்லாத நபர்களால் காணாமற்போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய எண்ணுவீர்கள். உறவினர்களின் வருகையால் பொருள்வரவு உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் கிடைக்கும். குலதெய்வ வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகள் இடமாற்றம் ஏற்படலாம். பெண்களுக்கு காதல் சம்பந்தமான செய்திவரும்.

### மிதுனம்

வீடுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. திடீர் அதிர்ஸ்டமாகிய ரேஸ் லோட்டரிமூலம் பணம் கிடைக்கும் என்று கருதி ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய வீடு, நிலம் வாங்க எதிர்பார்த்திருந்த கடன்கேட்ட பணம் கை வந்துசேரும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறை யும். மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தைச் சிரத்தையுடன் செய்துமுடிப்பீர்கள். பொருளாதார நெருக்கடியில் மனைவி அல்லது மனைவி-வழிச் சொந்தபந்தங்களால் மாற்றம் உண்டாகி மனநிறைவை அடைவீர்கள். காணாமற்போன பொருட்கள் சம்பந்தமில்லாத நபர்களால் வீடு வந்துசேரும்.

### கடகம்

வேலை இல்லாத படித்த இளைஞர் களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். பிள்ளைகளால் பொருள்வரவு உண்டாகுவதுடன் அவர்களாலேயே காரணமற்ற பொருட்செலவுகளும் வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமுடன் பேசிப் பழகவும். உடம்பில் மேகம், உக்ஷ்ணம் ஆகிய உபாதை கள் வந்துபோகும். கணவன் - மனைவி உறவு-களில் கவனமுடன் இருத்தலோடு, முன்கோபத்தை தவிர்த்தல் நல்லது. தேவாலயத் திருப்பணிகளில் கலந்துகொண்டு தொண்டாற்றுவதன்மூலம் மன நிறைவு ஏற்படும். மீன், முட்டை, மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

### சிங்கம்

வங்கிகளின்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் கூட்டுதொழில் முயற்சிகளில் எதிர்பாராத இலாபம் அடையலாம். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். கணவன் - மனைவி உறவுகளில் பிரச்சினைகள் வந்துநீங்கும். உடம்பில் தலை மற்றும் முகம் ஆகிய உபாதைகள் வந்துதீரும். உற்றார் உறவினர்களின் வரவால் மன மகிழ்ச்சியும் நிம்மதியும் வந்துசேரும். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் எச்சரிக்கை யுடன் நடந்துகொள்ளவும். விட்டுப்போன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும்.

### கன்னி

தூரத்து உறவினர்களின்வரவால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன்வாங்குவீர்கள். காதல் விசயங்களில் மிகுந்த மனச்சந்தோசம் ஏற்படும். நீண்டதூரப் பயணங்களின்போது பெரிய மனிதர்கள் சந்திப்பு ஏற்பட்டு அவர்களால் சில காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். விவசாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்கு பலிதமாகும். புதிய வீடு, நிலம்வாங்குவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றிகள் பெறுவீர்கள். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ள காலமாகும். இதுவரை இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி மனச்சந்தோசம் அடையலாம்.

### துலாம்

கண்களில் கவனம் தேவை. வீடுகளைப் புதுப்பித்துக் கட்டப்போட்ட திட்டங்களில் காலதாமதம் ஏற்படும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்கும். பிள்ளைகளால் தனவரவும், மனநிம்மதியும் உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். தென்திசையில் இருந்து எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினை கள் தீர்ந்து நல்ல முடிவுகள் கிடைக்கும். ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்படலாம். சேர் மார்க்கெட் மற்றும் கமிசன் சம்பந்தமான தொழில் செய்வோர்கள் கவனமுடன் செயற்படவும். பொருளாதாரரீதியில் முன்னேற்றம் ஏற்படும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### விருச்சிகம்

திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சி களில் மிகுந்த கவனமுடன் இருக்கவும். நண்பர்களால் புதிய தொழில் முயற்சிகள் மற்றும் புதிய கடன்வாங்குவது போன்ற முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்ளுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும், பொருட்செலவுகளும் உண்டாகலாம். விட்டுப்போன பழைய உறவு-கள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. வேண்டாத விசயங்களில் தலையிட்டுச் சிக்கலில் மாட்டிக்கொள்ளாது இருக்கவும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

புதியதாகக் கடன்வாங்க செய்த முயற்சி களில் வெற்றிபெறச் சற்று காலதாமதம் ஆகலாம். சூதாட்டமாகிய ரேஸ்,லோட்டரி போன்ற விசயத்தில் பணம், பொருள் ஏமாற்றம் அடைய நேரிடும். நீண்டகாலமாக இருந்து வந்த பிணிகளுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும். தொலைதூரப் பயணங்களில் மிகுந்த கவனமுடன் சென்றுவருதல் நல்லது. செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் கவனம் தேவை. உணவு உண்ணுதல் மற்றும் நித்திரை போன்றவற்றில் காலதாமதம் ஏற்படலாம். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் உண்டாகும். தாய்வழிச் சொந்தபந்தங்களால் ஆதரவுகள் வந்துசேரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மகரம்

மற்றவர்களுக்காக சொத்து சம்பந்த மான விசயங்களுக்கு ஜாமீன்போட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்காதீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இதுநாள்வரையில் இருந்துவந்த பிரச்சினைகள் மாறி மனநிம்மதி அடைய வாய்ப்பு உள்ள காலமாகும். இது நாள்வரையில் இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி தேவையான பொருள்வரவு உண்டாகும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதற்கான வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் சில காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். செல்வ செல்வாக்கு, புகழ் கூடும்.

### கும்பம்

விவசாயத்தில் புதிய முறைத் திட்டங்களின்மூலம் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். குழந்தைகளுக்காக திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்படும். விபரீதமான எண்ணங்களை விட்டுச் செயற்பாட்டில் கவனம் செலுத்துங்கள். பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். நண்பர்களின் உதவியால் புதிய தொழில் துவங்கப் போட்ட திட்டங்கள் தடையின்றி நிறை வேறும். குடும்பத்தில் காரணமற்ற மனக் கசப்புகள் வந்துபோகும். வங்கிகளின் உதவியால் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் தாமதமின்றி உடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. வெளிநாடுகளில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள்.

### மீனம்

புதிய நண்பர்கள் சேர்கையால் எதிர்பாராத தன இலாபம் அடைய வாய்ப்பு உள்ளது. எதிர்பாராமல் மஹான்களின் நல்லாசிகள் கிடைத்து அதனால் மனத்திருப்தி அடையலாம். புதிய நண்பர்கள் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்கள் சம்பந்தமாக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். உடம்பில் எலும்பு, நரம்பு சம்பந்தம் ஆகிய பிணிகள் வந்துபோகும். ரேஸ், லோட்டரி போன்றவற்றின் மூலம் திடீர் தனவரவு உண்டாகும். வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். காதலர்களுக்கு மகிழ்ச்சியான சம்பவங்கள் இடம்பெறும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.



# நூறாண்டு வாழ்க!

90ஆவது திருமணநாளை கொண்டாடிய தம்பதியர் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த கரம் ( வயது 110) மற்றும் கர்தாரி சந்த் (103) தம்பதி, லண்டனில், தங்களது 90ஆவது திருமணநாளை உலகெங்குமிலும் உள்ள உறவினர்களுடன் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

பிரிட்டனின் மேற்கு யார்க்ஷியர் மாகாணத்தின் பிராட்போர்ட் பகுதியில் வசிக்கும் கரம் - கர்தாரி சந்த் தம்பதிக்கு 8 பிள்ளைகளும், 27 பேரக்குழந்தைகளும், 23 கொள்ளுப்பேரன்களும் உள்ளனர்.

கரம் - கர்தாரி சந்த் தம்பதியே, தற்போது சர்வதேச அளவில் மிகவும் வயதான தம்பதி என்பது குறிப்பிடத்தக்கது.



# சுழன்றடித்து சாதனை

இயல்பாக மனிதர்கள் தாங்கள் நடனம் ஆடி சுற்றியுள்ள மக்களை சந்தோஷம் படுத்துவார்கள். அதிலும் சுற்றி சுற்றி ஆட வேண்டும் என்றால் சொல்லவே தேவை இல்லை, தலைசுற்றி கீழேயே விழுந்து விடுவார்கள்.

இத்தாலியில் இளைஞர் ஒருவர் பேரங்காடி(shopping mall) ஒன்றில் கூட்டமான மக்கள் இருக்கும் இடத்தில் கின்னஸ் சாதனை படைத்துள்ளார். அந்த இளைஞர் break dance என்ற ஒரு நடனத்தில் தலையை கீழே வைத்தவாறு 49 முறை 360 கோணங்களில் சுற்றியுள்ளார். அந்த இடமே மக்களால் குமிந்திருந்தது. அவரை சுற்றியிருந்த மக்கள் உற்சாகம் செய்தனர். பின்பு அவர் அந்த சாதனையை செய்து முடித்தவுடன் அங்கு இருந்த மக்கள் அவரை கட்டி அணைத்தனர். 42 முறை சுற்றியதே இதற்கு முந்தைய சாதனையாக இருந்தது.

# துட்டன்காமனின் வளர்ப்பு தாய் கல்லறை



துட்டன்காமன் அல்லது தூத்தன்கேமன் கி.மு 1341 - கி.மு 1323) என்பவன் பண்டைய எகிப்தின் பதினெட்டாவது வம்ச மன்னன் ஆவான். இவன் கி.மு 1333 முதல் கி.மு 1324 வரை புதிய இராச்சியம் என்ற பெயரில் அமைந்த எகிப்தை ஆண்டான். இவரது வளர்ப்புதாயின் கல்லறை 1996ஆம் ஆண்டு கண்டுப்பிடிக்கப்பட்டது. இந்த கல்லறையில் வளர்ப்புத்தாயான மியாவின் உடலும், சுவரில் வரையப்பட்ட கல்வெட்டுகள் மற்றும் படங்கள் இருந்தன. சுமார் 20 ஆண்டுகள் முன் கண்டெடுக்கப்பட்ட இந்த கல்லறை மக்களின் பார்வைக்காக தற்போது வைக்கப்பட்டுள்ளது.





# ஷொப்பிங் ரோபோ

ஸ்டார்ஷிப் ரோபோக்கள் இரண்டு மளிகைக் பைகள் சமமான பொருட்களை உள்ளூர் மையங்களில் இருந்து 5-30 நிமிடங்களில் உள்ளூரில் விநியோகம் செய்யும். ரோபோக்களின் சோதனை லண்டனில் நடைபெறுகிறது. 2016இல் அமெரிக்க சில பகுதிகளில் ஸ்டார்ஷிப் ரோபோக்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும்

# பொம்மை வீடு



உலகிலேயே மிக விலையுயர்ந்த பொம்மை வீடு நியூயோர்க்கில் இருக்கிறது. 9 அடி உயரமும் 362 கிலோ எடையும்கொண்ட இந்த வீட்டில் 29 அறைகள் உள்ளன. டென்னிசனின் கவிதைகளில் வரும் அஸ்டோலட் மாளிகைபோல இந்த மினியேச்சர் வீடு உருவாக்கப்பட்டிருக்கிறது. 1974ஆம் ஆண்டு ஆரம்பித்து 1987ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 13ஆண்டுகளில் ஒவ்வோர் அங்குலமும் அக்கறையுடன் இழைக்கப்பட்டிருக்கிறது. வெண்கலத்தால் கூரையும் மரத்தால் சுவர்களும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. சுவர்கள் எல்லாம் நகரும்விதத்திலும் திறக்கும்விதத்திலும் முப்பரிமாணத்தில் உள்ளன. தங்கம், வெள்ளியால் செய்யப்பட்ட மேஜைகள், நாற்காலிகள், அலுமாரிகள், கட்டில்கள், விளக்குகள் என்று 10 ஆயிரம் பொருட்கள் இந்த பொம்மை வீட்டில் வைக்கப்பட்டிருக்கின்றன.





இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் டிசம்பர் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.